M. L. A. Debates

Official Report

1965 - March

VOL. 27. No. 1

V211,31 N65
D
N65.27.1
64890

R.R. 285/70/.

*Issued* 11—6—1965]

834

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## TUESDAY, 9TH MARCH 1965

VOLUME XXVII—No. 1

CONTENTS


| | Pages |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 1-12 83 |
| II Voting on Demands for Grants for 1965-66— | |
| Demand No. VI—State Legislature .. .. .. .. .. | 12-82 |
| Demand No. VII—Elections .. .. .. .. .. .. | |
| Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff .. .. .. .. .. .. .. .. .. | |
| III Papers laid on the table of the House .. .. .. .. .. | 82 |


V211, 31 N65
N65.27.1
64890

©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise.*]

VR11,51 N65
N65..27-1

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 9th March 1965.**

The House met in Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Committee to examine consumer price indices*

* 183 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any suggestion has been received by this Government from the Union Government, for the appointment of a Committee of experts to examine how far consumer price indices are linked with actual prices; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No suggestion has been received from the Union Government for the appointment of a Committee of experts specifically to examine how far consumer price indices are linked with the actual prices.

(*b*) Does not arise.

64890

*Corruption cases*

* 184 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI M. S. SELVARAJAN :
SRI K. CHEEMAICHAMY :
SRI M. KAMALANATHAN :
Will the Hon. the Chief Manister be pleased to state—

(*a*) the number of cases investigated by the Directorate of Vigilance and Anti-corruption, department war, since its establishment in February 1964;

(*b*) the number of I.A.S. Officers, Gazetted Officers, non-Gazetted employees and Last Grade employees, respectively, involved in the corruption charges; and

(*c*) the number of cases in which prosecution has been launched?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சார், போலீஸ் இலாக்காவிலுள்ள அதிகாரிகளைக் கண்காணித்துக்கொள்ளும் பொறுப்பு இந்த இலாக்காவிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இதற்காக தனியாக ஒரு அமைப்பு அமைக்க யோசனை செய்வார்களா ?

---

[a] Printed as Appendix on page 83.

[9th March 1965

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் ஒரு தனி அமைப்பு. அவர்கள் போலீஸ் இலாக்காவினரைப் பற்றியும் விசாரிப்பார்கள்.

**திரு. செ. மாதவன் :** அவர்களில் எத்தனை பேர்கள்மீது டிபார்ட்மென்ட் ஆக்ஷன் எடுக்கப்பட்டது ? எத்தனை பேர்கள்மீது கிரிமினல் ப்ராசிக்யூஷன் இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னுடைய தகவல்படி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த ஒருவர்மீது டிபார்ட்மென்டல் ஆக்ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** தனித்து இயங்கவில்லை என்ற அளவிற்கு சில வழக்குகள் எல்லாம் நேராக சீப் செக்ரட்ரிக்குச் சென்று, அவர் முதல் அமைச்சருக்கு அனுப்பி அவர் விருப்பு வெறுப்பிற்கு ஆளானவர்கள் மீது அவர் அனுமதித்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு கூறுவது முற்றிலும் தவறு.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்படி இதில் ஐ.ஏ.எஸ். ஆபீசரைப்பற்றித் தான் இருக்கிறது. ஆனால் ஐ.பி.எஸ். ஆபீஸர்களை இதில் சேர்க்கவில்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் அளிக்கப்பட்டிருக்கிற தகவலைத் தவிர வேறு தகவல் என்னிடம் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அவர்கள் மீது எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை யாருடைய ரிபோர்ட் மீது எடுத்துக்கொள்கிறார்கள்? பொதுமக்களில் யாராவது விஜிலின்ஸ் கமிட்டியிடம் ரிப்போர்ட் செய்தால், நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விஜிலின்ஸ் கமிட்டி விசாரித்து ரிப்போர்ட் அனுப்பினால், அதற்கு மேல் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எஸ். முருகையன் :** இதில் 470 பேர்களுக்கு மேல் குற்றம் செய்திருக்கிறார்கள். ஆனால் 24 பேர்கள் மீதுதான் வழக்குகள் தொடரப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப்பற்றி விவரம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மற்றவர்களைப் பற்றி எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, பொதுமக்கள் இந்த விஜிலின்ஸ் கமிட்டியிடம் எப்படித்தொடர்பு கொள்வது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாராவது தகவல் தெரிவிக்க வேண்டுமென்றால், டைரக்டர் ஆப் விஜிலன்ஸ்க்கு எழுதி அனுப்பவும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** லஞ்ச ஒழிப்புப்பற்றி போலீஸ் இலாக்காவினரையும் விசாரணை செய்ய டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் டிபார்ட்மென்டுக்குள் அதிகாரம் உள்ளதாக இருக்கிறது. இதிலுள்ள போலீஸ் அதிகாரிகளும் இந்த இலாக்காவில் இருப்பதால் சம்பந்தப்பட்ட இலாக்காவினரை விசாரிக்கும்போது சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே இந்தப் போலீஸ் இலாக்காவினரைக் கண்காணிக்க ஒரு அமைப்பை ஏற்படுத்த யோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



9th March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனியாக ஒரு அமைப்பு தேவையில்லை, என்பதற்குக் காரணம் இதுவரையில் போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்களை விசாரிப்பதில் எதுவும் சிக்கல் ஏற்படவில்லை. 834

**திரு. இர. பொன்னப்ப நாடார் :** ஜுடிஷியரில் பணியாற்றுகின்ற உத்தியோகஸ்தர்களைக் கண்காணிக்க விதிமுறைகள் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது பற்றி ஹைகோர்ட் யோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** லஞ்ச ஒழிப்புக் கமிட்டி தனியாக இருக்கிற காரணத்தினால் அதை அரசாங்கம் அங்கீகாரம் செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கமிட்டியைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. செ. மாதவன் :** இன்று விஜிலன்ஸ் கமிஷனில் போலீசும் ஒரு பகுதியாக இயங்குகிறது. போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்கள் இதில் வேலை செய்கிறார்கள். ஆகவே தனிப்பட்ட முறையில் ஜுடிஷியல் அதாரிடியை விஜிலன்ஸ் தலைவராக நியமித்து போலீஸ் இலாக்காவினரைப் பற்றி விசாரணை செய்ய முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவ்வாறு செய்ய அரசாங்கத்திற்கு யோசனை இல்லை.

**திரு. எஸ். முருகையன் :** தொடரப்பட்ட வழக்குகளில் எத்தனை வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றன ? என்ன தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 9 வழக்குகளில் ப்ராசிக்யூஷன் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு ஆறு மாதம் சிறை தண்டனை; மற்றொருவருக்கு ஒரு ஆண்டு, இன்னொருவருக்கு ஒரு ஆண்டு, ஒருவருக்கு 9 மாதம் மற்ற ஐந்து பேர்களுக்கும் தலா ஒரு ஆண்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டது. கன்விக்ட் ஆனவர்களில் 4 பேர்கள் அப்பீல் செய்திருக்கிறார்கள். மற்ற தகவல் என்னிடம் இலலை.

**திரு. முனு. ஆதி :** போலீசாருடன் இணைந்திருப்பதால் வழக்குகள் முறையாக நடைபெறுவதில்லை. ஆகவே போலீஸ் இலாக்கா அற்ற மற்ற இலர்க்காவினருடன் ஏன் இதை இணைக்கக் கூடாது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் இலாக்காவில் இருப்பவர்கள் போலீஸ் இலாக்காவில் இருந்தவர்கள். இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பதவி வகித்தவர் இப்போழுது இங்கு தலைமை அதிகாரியாக இருக்கிறார்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அரசியலில் ஈடுப்பட்டவர்கள் மீது புகார்கள் வந்தால் இந்தக் கமிஷன் விசாரிக்க அதிகாரம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கமிஷன் விசாரிக்கலாம். அதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அரசாங்கம் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அதே போன்று அதிகாரிகள் மீது புகார்கள் வந்தாலும் உண்மை என்று ஏற்பட்டாலும் கூட தண்டனை கொடுக்கிறவர்கள் இந்த இலாக்காவினர் அல்ல. தனியாக ஒரு இலாக்கா இருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சதாச்சார் கமிட்டிக்கும் இந்த டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் இலாக்காவிற்கும் சம்பந்தம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சதாச்சார்சமிதிக்கு பொதுமக்களிடம் தொடர்பு கொள்வதுதான் நோக்கம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

[9th March 1965

**திரு. செ. மாதவன் :** *வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களை கண்டுபிடிக்கும் பொறுப்பை இந்த இலாக்காவிடம் ஒப்படைக்க அரசாங்கம் யோசிக்குமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *இது சம்பந்தப்பட்டவரை இந்த இலாக்காவினரின் உதவியை நாடினால் அப்போது கவனிக்கும்.*

**திரு. ம. கமலநாதன் :** *தலைவர் அவர்களே, மத்திய அரசாங்க உள் துறை அமைச்சர் திரு நந்தா அவர்கள் தலைமையில் உள்ள இந்த லஞ்ச ஒழிப்பு குழுவினுடைய பிரிவை மாநில ராஜ்யங்களில் அமைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *இப்போது அமைக்கப்பட்டிருக்கிறதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கு இப்போது யோசனை இல்லை என்று முன்பே நான் கூறினேன்.*

**திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே நடந்த ஊழல்களை விசாரிக்க இந்த "ஆன்டி கரப்ஷன்" மூலமாகச் சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *சர்க்கார் சில நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.*

### *Chief Ministers' deleberations on " Student indiscipline "*

* 185 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether " Student indiscipline " was a subject-matter of discussion at the Conference of Chief Ministers held recently at New Delhi; and

(*b*) if so, the details of the conclusions reached over the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is not desirable, in the public interest, to disclose the details of the conclusions reached by the Conference on this subject.

**புலவர் கா. கோவிந்தன் :** *தலைவர் அவர்களே, மாணவர்கள் கல்லூரியிலே படிக்கிற நேரத்தில் வீட்டை விட்டுப் பல மாதங்கள் வெளியிலே வாழ வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் பெற்றோர்கள் கண்காணிப்பு இல்லை. உயர் நிலைப் பள்ளிகளிலே 40க்கு ஒன்றும், கல்லூரிகளிலே 80க்கு ஒன்றும் என்ற மாணவர்—ஆசிரியர் விகிதாசாரம் இருக்க வேண்டுமென்று இருப்பதால், ஆசிரியர் கண்காணிப்பு இருக்கக் கூடிய நிலைமை இல்லை. இந்தக் காரணத்தினால்தான் மாணவர்களிடையே ஒழுங்குக்கட்டுப்பாட்டை கொண்டுவர முடியவில்லை என்று சர்க்கார் உணர்ந்து இருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *கனம் அங்கத்தினர்கள் கூறிய கருத்துகளும் யோசிக்கப்பட்டு வருகிற கருத்துக்கள்தான். ஆசிரியர்—மாணவ ' ரேஷியோ ' குறைக்க வேண்டி இருக்கிறது. எவ்வளவு குறைத்தாலும் நல்லது என்றாலும், செலவு அதிகமாகிறது என்பதால் இதையெல்லாம் வைத்துக்கொண்டு எவ்வளவு முடியுமோ அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.*

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** *நமது மாநிலத்திலே உள்ள பெருவாரியான கல்லூரிகளிலே ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிப்பதால் இவ்வித ஒழுங்குக் கேடு உண்டாகிறது என்பதை அமைச்சர் உணர்கிறார்களா ? அப்படி இருந்தால் ஆண்கள், பெண்கள் இவர்களுக்குத் தனித்தனியாக கல்லூரிகள் பிரித்து நடத்த உத்தேசிக்கப்படுமா ?*



9th March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *கூடியவரையில் தனிக் கல்லூரிகள் பெண்களுக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லா இடங்களிலும் அமைக்க முடியாது. சில கல்லூரிகளில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து தான் படிக்க வேண்டி இருக்கிறது, இதனால் தான் ஒழுக்கம் கெட்டுப்போய் விடுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.*

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** *மாணவர்களை அரசியல் காரணமாகப் பயன்படுத்தக் கூடாது என்ற முறைபற்றியும் இந்த மகாநாடு விவாதித்ததா என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** *எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசப்பட்டது.*

### நமது மாநிலத்தில் வீடு கட்டும் திட்டங்களைப் பாதிக்கக்கூடிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு

*186 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*வீடு கட்டும் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாய் சுப்ரீம் கோர்ட் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பு நமது ராஜ்யத் திட்டங்களை எந்த அளவிற்குப் பாதிக்கும் ?*

THE HON. SRI R. VENKATARAMAN : Acquisition of lands for housing purposes is taken up mainly on behalf of the Madras State Housing Board in bulk under the Land Acquisition and Development Scheme. After acquisition and development, the plots are allotted to individuals, etc., on a ' no-loss and no-profit ' basis. Consequently allottees have to bear the actual expenses involved in the acquisition and development of the lands concerned.

The recent judgment of the Supreme Court, while holding the Land Acquisition (Madras Amendment) Act, 1961 void, has clearly indicated that there is no objection to proceed with the acquisition of lands under the main Act. In the result, acquisition for housing purposes can be proceeded with, but the compensation amounts for the lands would be higher than those payable under the impugned amending Act. Consequently plots would become dearer to some extent for the allottees and in respect of physical targets the progress is likely to be affected to some extent as the extent of lands which could be acquired paying higher compensation with the limited funds available would naturally be less.

**திரு எம். எஸ். செல்வராஜன் :** *இப்போது இருக்கிற மார்கெட் வால்யூ கொடுக்க வேண்டுமென்பதுதான் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பா ? அப்படியானால் பணத்தைப் போட்டிருக்கிற இந்த ராஜ்ய திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு எந்த அளவு அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டி வரலாம் என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** *இது ஆண்டுக்கு ஆண்டு செய்வது அல்ல. ஸ்கீம் வாரியாக எடுத்துச் செய்வது. ஸ்கீம் வாரியாகச் செய்யும்போது இந்த ஜட்ஜ்மெண்ட் பிரகாரம் நாங்கள் கணக்கிட்டபடி இந்த ஸ்கீமிற்கு ரூ.* **43,97,000** *கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டது. இப்போது ரூ.* **71,37,000** *கொடுக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இதனால் அந்த அளவு நம்முடைய லாண்டு அக்விஸிஷன் குறைந்து போகும்.*

[9th March 1965

SRI R. PONNAPPA NADAR : Sir, is there any proposal to bring in fresh legislation ?

THE HON SRI R. VENKATARAMAN : No, Sir.

### தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு.

***187 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டு வசதிக் கழகம் ஆகஸ்டு 64 முடிய, பொது மக்களுக்குத் தவணை முறையில் கொடுப்பதற்காகக் கட்டிய வீடுகள் எத்தனை ?

(இ) தவணை முறையில் வீடுகளைக் கொடுப்பதில் உள்ள குறைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அந்தப் புகாரின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) அத்தகைய வீடுகள் 1,856 ஆகும்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

### வட சேலத்தில் தொழில்கள் துவங்குதல்

***188 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சேலத்தில் நடைபெற்ற கைத்தொழில் வளர்ச்சி கருத்தரங்கில் வட சேல மாவட்டத்தில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது ?

(இ) அவைகளில் அரசினர் பரிசீலனையில் உள்ள புதிய தொழிற் சாலைகள் யாவை ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) சேலத்தில் அண்மையில் நடைப்பெற்ற தொழிற் கருத்தரங்கில் பல்வேறு கனரக நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில், நிறுவுவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் எங்கெங்கு நிறுவுவது என்பது குறித்து ஆராய்வதற்கு ஒரு குழு கலெக்டரால் அங்கே அமைக்கப்படவிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** சேலம் மாவட்டத்திற்கு ஒரு தனிப் பெருமை தருவது பழவகைகள் மிக அதிகமாகக் கிடைக்கிறது எனபதுதான். 45,000 மாம்பழமும், 47,000 டன்கள் வாழையும் 2,800 டன்கள் புளியும் அங்கே இருப்பதால், அமெரிக்கக் கூட்டுறவுடன் ஒரு பெரிய "ப்ரூட் கானிங் இன்டஸ்டிரி" நிறுவ வாய்ப்பு இருக்கிறதென்று அறிகிறேன். அப்படி ஒரு பெரிய தொழில்சாலையை கிருஷ்ணகிரியில் அமைக்க அரசினர் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமான "ப்ரூட் கானிங் இன்டஸ்டிரி" இப்போது கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் அமைக்கத் தனியார் துறையில் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு வேண்டிய எல்லா உதவியையும் செய்வதாகச் சர்க்கார் அவர்களுக்கு வாக்களித்து இருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** அமைச்சர் தனியார் துறையில் அமைக்கப்பட இருக்கும் "ப்ரூட் கானிங் இன்டஸ்ட்ரி" பற்றிச் சொன்னார்கள். அது "ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரி" 5 லட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. "டிஹைட்ரேடெட்" வகையில் தயாரிக்கப்படுவதற்கு ரூ. 50



9th March 1965]

லட்சத்திற்குக் குறையாத முதலீடு செய்தால் அமைக்க முடியும் என்று தொழில் கருத்தரங்கிலே கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமெரிக்க கூட்டுறவு தேவை என்பதால் அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்தவிதமாகத்தனியார் துறையில் யாராவது முயற்சி எடுத்துக் கொண்டு முன் வந்தால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

### *Consultation before issue of licences*

* 189 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to consult the Council of Scientific and Industrial Research before issuing licences for industries ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India are the competent authority to grant licences under the Industries (Development and Regulation) Act, 1951. This Government do not have information whether the Government of India have any proposal to consult the Council of Scientific and Industrial Research or any other organization before issuing licences.

### *Pond Works (Erode taluk)*

* 190 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to question No. 531 on 23rd July 1962, the present stage of the following pond works in Erode taluk of Coimbatore district :—

(1) Pond near Vattalapathy village,

(2) Pond near Neelagoundenpalayam,

(3) Pond near Karumanjarai ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவை சென்னை (உணவு உற்பத்தி) மேற் பார்வைப் பொறியாளரின் ஆலோசனையில் இருக்கின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** 1962-லேயே மராமத்து வேலை செய்து கொடுக்கப்படுமென்று அமைச்சர் கூறியிருக்கிறார்கள். இந்தப் பரிசீலனை எத்தனை ஆண்டுகளில் முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த "பாண்ட் ஸ்கீம்" கோவை, சேலம் ஜில்லாக்களிலே பெரும் பகுதி செய்யப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்து இப்போது துரிதமாக வேலைகளை எடுக்க வேண்டுமென்று திட்டமிட்ட காரணத்தினாலே இந்த மூன்று இடங்களிலே இதைச் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கலெக்டருடையவும், சீப் என்ஜினியருடையவும் அங்கீகாரம் பெற்ற பிற்பாடு வேலைகள் துவங்கப் படும்.

### *Hostels for Harijan students*

* 191 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Harijan students' hostels constructed in the State during 1964-65?

THE HON. SRI P. KAKKAN : No building for Government Hostel for Harijans has been constructed during 1964-65. However the Government have sanctioned the construction of buildings

[9th March 1965

during 1964–65, to house the following two hostels in North Arcot district :—

(1) Government Boys Hostel, Tiruvannamalai, at a cost of Rs. 1.50 lakhs.

(2) Government Boys Hostel, Chengam, at a cost of Rs. 57,900,

Both the works have been entrusted to Public Works Department for execution during the current year.

1964-65-ல் அரசாங்கம் ஹரிஜன மாணவர் விடுதிக்காகக் கட்டிடம் எதுவும் கட்டவில்லை. எனினும் வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு விடுதிகளுக்கான கட்டிடங்களை 1964–65-ல் கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது :—

(1) அரசாங்க மாணவர் விடுதி, திருவண்ணாமலை. 1·50 லட்சம் ரூபாய் செலவில்.

(2) அரசாங்க மாணவர் விடுதி, செங்கம், 57,900 ரூபாய் செலவில், நடப்பு ஆண்டில் இக்கட்டிட வேலைகளை நிறைவேற்றுவதற்கு, அவ்விரண்டும் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சை மாவட்டத்தில் மண் சுவர் வைத்து தென்னை மட்டைகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ள கட்டடங்களில்தான் மாணவர்கள் விடுதிகள் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் அடிக்கடி புயல் பெருங்காற்று வீசுவதால் இந்தக் கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு ஜில்லாத் தலைநகரிலும் மாணவர் விடுதிகள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு, தஞ்சை, தென்னாற்காடு ஜில்லாகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சிதம்பரம் போன்ற இடங்களிலே கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அரிசன நல இலாகா டைரக்டர் அதற்கான ப்ரொபோஸல்களைக் கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் நிதி நிலைமைக்குத் தக்கபடி படிப்படியாகக் கட்டடங்கள் கட்ட அரசாங்கம் முன்வரும்.

**புலவர் கா. கோவிந்தன் :** வடாற்காடு மாவட்டத்தில், செய்யாறில் பெண்களுக் கென்றும், ஆண்களுக்கென்றும் இரண்டு விடுதிகள் இருக்கின்றன. இரண்டும் வாடகைக் கட்டடங்களிலே இருந்து வருகிற காரணத்தாலும், அந்தக் கட்டடங்கள் பள்ளிக்கூடத்திற்கு மிகத் தொலைவில் இருக்கும் காரணத்தாலும், பள்ளிக்கூடத்திற்கு அருகிலேயே மாணவர்கள் விடுதிகளைக் கட்ட அரசாங்கம் முன்வருமா ? நாங்கள் அதற்கு வேண்டிய இடத்தைக் கூட இனாமாகவே வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அந்த இடத்திலே அரசாங்கம் கட்டடம் கட்ட உடனே ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு ஜில்லாவிலும் எங்கெங்கே கட்டடம் கட்டலாம் என்பதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு கலெக்டர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த முறையில் செய்யாறிலும் ஒரு வேளை குறிப்பிட்டிருக்கலாம். நிதி நிலைமைக்குத் தக்கபடிதான் அதெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** வடாற்காடு மாவட்டத்தில் மட்டும்தான் இரண்டு கட்டடங்கள் 1964–65ம் ஆண்டில் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எங்கள் மாவட்டத்தில், என் தொகுதியில் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, இடம் கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் சொன்னதன் பேரில், இடத்தைக் கூட நாங்கள்



9th March 1965]

பார்த்துக் கொடுத்திருக்கிறோம். அப்படியானால், கலெக்டர் அவராகவே சொன்னதா ? அல்லது, இடம் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு எதாவது அனுப்பப்பட்டதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சேலம் மாவட்டத்தின் தலைநகரில் விடுதி கட்ட வேண்டும் என்று இடம் பார்த்திருக்கிறார்கள். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் விடுதிகள் கட்டும்போது அங்கும் கட்டப்படும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** அரிசன நல இலாகா நேரடியாக நடத்தாமல் தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறதா ? இதுபோன்ற பிற்பட்ட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கும் ஆஸ்டல் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற ஆஸ்டல்கள் நமது மாநிலத்தில் எத்தனை இருக்கின்றன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எண்ணிக்கை விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. குறிப்பாக, தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்டல்களுக்குக் கூட அரசாங்கத்தின் அனுமதி கோரப்பட்டு, கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அப்படி ஏற்கெனவே சில கட்டடங்களுக்கும் அரசாங்கம் உதவி கொடுத்திருக்கிறது. ஆனால், இப்போதைய அரசாங்க நிதி நிலைமையில் அதிகமாகக் கொடுக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ர. ஜீவரத்னம் :** வடாற்காடு ஜில்லா, வேலூரில் இரண்டு ஆஸ்டல்கள் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் அரிசன நல இலாகாவால் கட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டிருககின்றன. அது ஒரு வருஷ காலமாகத் தாமதமாகிக் கொண்டு வருகிறது. இந்த இரண்டு ஆஸ்டல்களையும் உடனடியாக எடுத்துக் கட்டடங்கள் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வடாற்காடு ஜில்லா கலெக்டர் இடம் பார்த்துத தகவல் கொடுத்திருக்கிறார். இதர ஜில்லாக்களில் கட்டும்போது அங்கும் கட்ட எற்பாடு செய்யப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** எழுந்தார்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் நீலகிரியைப்பற்றிக் கேட்கப் போகிறார்களா ? (சிரிப்பு.)

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, அரிசன நல இலாகாவிடம் இருக்கும் இந்தப் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றி, அவர்கள் மூலமாக இந்த விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்தல், ஸ்காலர்ஷிப் கொடுக்கும் விஷயத்தைக் கவனிக்கலாமென ரெவினியூ போர்டார் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருப்பதாகக் கேள்விப்பட்டது உண்மையா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது அது உண்மை அல்ல.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் நடத்துகிற இந்த விடுதிகளுக்காகப் புறம்போக்கு நிலங்களை உடனடியாக ஆர்ஜிதம் செய்வதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா ? கடந்த மூன்று ஆண்டுகளாக எங்கள் ஊரில் உள்ள விடுதிக்காக நிலம் வேண்டும் என்று மனுச் செய்தும், இதுவரை பதில் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட விடுதிகளுக்கெல்லாம் நிலத்திற்கான பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த ஊரில் புறம்போக்கு இடம் இருந்தால் ரெவினியூ இலாகாவிற்கு அப்ளை செய்ய வேண்டும்.

SRI V. S. S. MANI : Sir, may I know whether the Harijan hostels are intended mainly for the Harijan students and whether
hostels are intended mainly for the Harijan students and whether

THE HON. SRI P. KAKKAN : In every hostel, not only Harijan students but also caste Hindu students including students belonging to the forward and backward communities are allowed.

[9th March 1965

**திரு. ஆ. கு. சுப்பையா :** *தனியார்கள் நடத்தும் விடுதிகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியார் நடத்தும் ஆஸ்டல்களில் பெரும் பகுதியை ஏற்கெனவே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றாக அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். இருந்தாலும், அரிசன சேவா சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடத்திவரும் ஆஸ்டல்களை எடுக்காமலிருப்பது நல்லது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *அரிசன மாணவ மாணவிகளுக்காக நூற்றுக் கணக்கான ஆஸ்டல்கள் இருந்தாலும், அவற்றில் பத்திலொரு பங்குகூடச் சொந்தக் கட்டடங்களில் இல்லை. வாடகை இடங்களில் ஏற்படக் கூடிய கஷ்டத்தை உத்தேசித்து, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவோ, ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவோ தாலுக்கா தலைநகரங்களில் இருக்கக் கூடிய எல்லா ஆஸ்டல்களையும், மொத்த ஆஸ்டல்களில் பத்திலொரு பகுதி சர்க்கார் ஹாஸ்டல்களுக்காவது கட்டடங்கள் கட்டி முடிக்க ஒரு .·.பேஸ்டு ப்ரொக்ராம் வைத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுவாக எல்லாக் கட்டடங்களையும் கட்ட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். மொத்தம் 328 கவர்ன்மெண்ட் விடுதிகள் இருக்கின்றன. அவற்றில் 30 விடுதிகள் அரசாங்கக் கட்டடத்தில் இருக்கின்றன. பாக்கியிருப்பவை 298 விடுதிகள். அரசாங்கத்திற்குச் சொந்தமில்லாத இடங்களில் நடைபெறுகின்றன. அவற்றில் நான்கு விடுதிகள் இனமாகக் கொடுக்கப்பட்ட கட்டடங்களில் நடத்தப் படுகின்றன.

**திரு. பி. முருகையன் :** *சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது புதுக்கோட்டையிலுள்ள மாணவர் விடுதிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்கள். அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. பூ. கக்கன் :** எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தைச் சீக்கிரம் கட்டி முடிப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்யப் படும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** *இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை வளர்ந்து இருக்கிற காரணத்தாலும், அந்தப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகியிருக்கிற காரணத்தாலும், மேலும் பல மாணவர் விடுதிகளைத் திறக்க ஏற்பாடு செய்யப் படுமா அல்லது இருக்கும் மாணவர்கள் விடுதிகளிலேயே அனுமதிக்கப் பட்டிருக்கும் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் விடுதிகளில் இடம் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகின்றது. உயர்நிலைப் பள்ளி எங்கே ஆரம்பிக்கப்படுகிறதோ அங்கு போதுமான இட வசதி இருந்தால்,ஆஸ்டல் நடத்த ஏற்பாடு செய்யலாம். அந்த வகையில், இந்த வருஷத்திலும் பல ஆஸ்டல்களை ஆரம்பிக்க அரசாங்கம் எண்ணுகிறது.

**திரு. ஆ. தங்கவேலு :** *தென்னாற்காடு மாவட்டத்தில், திண்டிவனத்தில் கட்ட இருக்கும் அரிசன மாணவ, மாணவி விடுதிகள் எந்த நிலையில் இருக்கின்றன?*

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கும் கட்டுவதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறது.



th March 1965]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** *தென்னாற்காடு மாவட்டத்தில் கட்ட ருக்கிற அரிசன நல மாணவர் உணவு விடுதிகளில், திருச்சிற்றம்பலம், ரக்காணம் ஆகிய இந்த இரண்டு இடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின் னவா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது ல்லை.

### மதிய உணவு வழங்க அதிகப்படி மானியம்

*** 192 கேள்வி.—திரு. பி. முருகையன் :** *கனம் உள் துறை அமைச்சர் யவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க ரு மாணவருக்கு 15 பை வீதம் கொடுப்பதை 25 பைசாவாகக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** இல்லை.

**திரு. பி. முருகையன் :** *தலைவர் அவர்களே, ஒரு மாணவருக்கு மதிய உணவு வழங்க 15 பைசா என்று மதிப்பிட்டது ஏறத்தாழ பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு என்று நான் நினைக்கிறேன். இப்பொழுதுள்ள விலை உயர்வை உத்தேசித்தாவது இதை 25 பைசாவிற்கு உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் இனிமேலாவது முயற்சி எடுக்குமா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** கல்வி இலாகாவால் நடத்தப்படும் பள்ளிகளில் .0 பைசா வீதம் மதிய உணவுக்காகக் கொடுக்கிறார்கள். அரிசன நலப் பள்ளிகளுக்கு 15 பைசா வீதம்—ஐந்து பைசா உயர்த்திக்—கொடுக்கிறார்கள். நிதி நிலைக்குத் தக்கபடி இது போதுமானது என்று அரிசன நல இலாகா டைரக்டர் கருதுவதால் இந்த முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். பிறகு அரசாங்கத்திற்குப் பணம் ஜாஸ்தி வரும்போது, அதை உயர்த்துவதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *தனியார் பள்ளிகளிலும், பஞ்சாயத்து யூனியன் நடத்தும் பள்ளிகளிலும் படித்து வரக்கூடிய அரிசன மாணவர்களுக்கும் மதிய உணவுக்காக ஏதேனும் உதவி செய்யப்படுகிறதா ? அங்கு படிக்கும் அரிசன மாணவர்களுக்கும் அரிசன நல இலாகா மூலமாக மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** மிகவும் பின் தங்கிய பகுதிகளில் நடைபெறும் பாடசாலைகளில் பின் தங்கிய மாணவர்கள் இருந்தாலும், அரிசன மாணவர்கள் இருந்தாலும், எங்கெல்லாம் மதிய உணவுக்குப் பணம் கொடுத்து உதவி செய்ய முடியுமோ அங்கெல்லாம் உதவி செய்துகொண்டு வருகிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** *அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 15 பைசா வீதம் கொடுக்கிறோம். இலவசச் சீருடையும் கொடுக்கிறார்கள். இந்தக் காரணங்களால் மாணவர்கள் பெரும்பாலும் அரிசன நலப் பள்ளிகளுக்கே வருகிறார்கள். அந்த நிலைமையைப் போக்க, பஞ்சாயத்து யூனியன் நடத்தும் பள்ளிகளிலும் அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு உள்ள சலுகை கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?*

**கனம் திரு. பூ. கக்கன்:** பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் அரிசன மாணவர்களுக்கு உடை வாங்கிக் கொடுக்க வேண்டுமானால் பணம் ஜாஸ்தி வேண்டி இருக்கிறது. நிதி நிலைமைக்குத் தக்கபடி தான் அரிசன நலப் பாடசாலைகளில் உணவும் உடையும் அளித்து வருகிறோம். நான் முன்பு சொன்னபடி, இதர பாடசாலைகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு எங்கெல்லாம் மிகவும் கஷ்டமாக இருக்கிறது, என்று அரிசன நல இலாக்கா அதிகாரிகளோ கலெக்டர்களோ கருதி, அவர்களுக்கு விசேஷமாகக்கொடுக்கலாம் என்று அரசாங்கத்திற்குச் சொன்னால், அரசாங்கம் கவனம் செலுத்தும்.

[9th March 1965

9-00 a.m. **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** உண்மையில் ஹரிஜன ஹாஸ்டல்களில் படிக்கின்ற மாணவர்களுக்காக தினத்திற்குச் செலவழிக்கக்கூடிய பணத்தை 2 ரூபாய்க்கு அரசாங்கம் உயர்த்தி இருக்கிறது. ஹாஸ்டலில் படித்தால் தினம் ஒன்றுக்கு 2 ரூபாய். ஆனால் அதிலே மாணவர்களுக்கு இடம் கிடைக்காத காரணத்தால் வெளியில் இருந்து வந்து படிக்கிறவர்களுக்கு ஒரு வேளைக்கு 15 பைசா கொடுப்பது நியாயமாக இருக்கிறதா ? அப்படி 15 பைசா கொடுப்பதற்குப் பதிலாக 25 பைசாவாவது கொடுத்தால் நிலைமை சீர்படுமா என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஆரம்பப் பாடசாலையில் படிக்கக் கூடியவர்கள் சின்னப் பிள்ளைகள்தான். விடுதிகளில் தங்கிப் படிக்கக்கூடியவர்கள் பெரிய பிள்ளைகள் என்பதனால் 2 ரூபாயாகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் சொல்லும் போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே படிக்கிற அரிசன மாணவர்களுக்கும் மதிய உணவுக்காகக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே சென்ற வருடம் பட்ஜெட் நிதியில் 75 சத விகிதம் எந்த பஞ்சாயத்து யூனியன்களில் படிக்கிற அரிசன பிள்ளைகளுக்கும் கொடுப்பதாக உத்தரவு போட்டும் நடைமுறையில் அந்த உத்தரவு இதுவரைக்கும் வரவில்லை. அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** பஞ்சாயத்துப் பாடசாலை எல்லாவற்றுக்கும் கொடுப்பதாக நான் சொல்லவில்லை. பின் தங்கிய மாணவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால் பரிசீலனை செய்யப்படும். உதவி செய்கிறோம் என்று சொன்னேனே தவிர பூரா கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுபில் அனுப்பப்படுகிற நேரத்தில் மிக்க காலதாமதம் ஆகிறது என்கிற தகவல் அமைச்சருக்கு வந்திருக்கிறதா ? காலதாமதம் ஏற்படாமல் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** காலதாமதம் ஆவதாகத் தகவல் என்னிடத்தில் இல்லை. காலதாமதம் செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டு இருக்கிறோம்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66.

(1) Demand No. VI—State Legislature.

(2) Demand No. VII—Elections.

(3) Demand No. VIII—Head of State, Ministers and Headquaters Staff.

Mr. SPEAKER : We have got three Demands before us for discussion to-day. May I know whether we can take up all of them together or one by one ?

Sri V. R. NEDUNCHEZHIYAN : Sir, all the three Demands can be taken up together.

(1) Demand No. VI—State Legislature ; (2) Demand No. VII —Elections; and (3) Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.



9th March 1965]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 17,22,300 under Demand No. VI—State Legislature ".

**திரு. இராம அரங்கண்ணல் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்றம் கூடும் நாட்கள் வரவரக் குறைந்து கொண்டே போவதற்குப் பதில் இன்னும் அதிக நாட்கள் கூடுவது ஜனநாயகம் வளர உதவும் என்பதைப் பற்றி வலியுறுத்த நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.

" That the allotment of Rs. 17,22,300 under Demand No. VI—State Legislature—be reduced by Rs. 100 ".

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இதை நான் வழிமொழிகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sri, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 11,44,300 under Demand No. VII—Elections ".

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தேர்தல்கள் நேர்மையாகவும், நாணயமாகவும், முறையாகவும் நடைபெற அமைச்சர்கள் தேர்தலில் நேரிடையாக வாக்குகள் திரட்டும் பணிகளில் ஈடுபடக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்ட நான் கொடுத்துள்ள வெட்டுப்பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.

" That the allotment of Rs. 11,44,300 under Demand No. VII —Elections—be reduced by Rs. 100 ".

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,50,61,700 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff ".

Sri K. A. MATHIALAGAN : Sir, I move the following cut motion standing in my name to discuss the necessity to appoint a commission under the chairmanship of a Judge of the Supreme Court to enquire into and report on the Police and Military firings and the violent acts during anti-Hindi agitation :

" That the allotment of Rs. 2,50,61,700 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff—be reduced by Rs. 100 ".

Mr. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

* **புலவர் கா. கோவிந்தன் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு நாடு நல்ல முறையிலே வாழ வேண்டுமானால் அந்த நாட்டை ஆளுகின்ற தலைவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். ஆளுகின்றவர்கள் நல்லவர்களாக இல்லாது போனால் நாடு எவ்வளவு பெரிய, எவ்வளவு வளம் மிக்க நாடாக இருந்தாலும் நடக்காது என்ற கருத்தை ஆட்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். வள்ளுவர் ஒரு அருமையான குறளில் சொன்னார்கள். சென்ற நாள் மதிப்பிற்குரிய டாக்டர் அவர்கள் கூறினார்கள்.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு,

[புலவர் கா. கோவிந்தன்] [9th March 1965

என்ற குறளைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பண்டைய காலத்தில் நாட்டை ஆண்டவன் அரசன். இன்றைக்கு ஆட்சித் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் அமைச்சர்கள். அவர்கள் மற்றவர்கள் நல்லவர்களாக வாழ வழிகாட்டியாக இருந்தால்தான் நாடு நல்ல முறையில் இருக்கும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையைப் பார்த்தால் நம் நாட்டில் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக, தலைமையில் இருக்கிறார்களே என்ற கேள்வி எழுவதற்கு வழி செய்திருக்கிறது. நாட்டிலே இதன் காரணமாக உயிரிழந்தவர்கள் பலர். துப்பாக்கிப் பிரயோகத்தால் துன்புறுத்தப்பட்டவர்கள் பலர் என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். பலகோடி ரூபாய்க்கு அரசாங்கத்தாருடைய பொருளுக்கும், தனியார் பொருளுக்கும் இழப்பு நிகழ்ந்து இருக்கிறது. ராணுவம் அழைக்கப்பட்டு இருக்கிறது. ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு இருக்கிறது. இப்போது சிறையில் பல்லாயிரம் பேர் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிலை என் ? இந்த நிலையை எதிர் தரப்பில் இருக்கிறவர்களும் சரி விரும்பி வரவேற்க மாட்டார்கள். தமிழ் நாட்டின் பெருமையை சீர்குலைக்கக் கூடியது என்பதிலே யாருக்கும் எவ்வித ஐயமும் இருக்கவில்லை. ஆனால் இந்த நிலைக்கு யார் பொறுப்பாளி ? நமது முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், இந்த நிலை இருக்கக் கூடாது என்று. நாங்களும் சொல்கிறோம், இந்த நிலை இருக்கக்கூடாது என்று. இருக்கக் கூடாது என்று சொன்னால் போதுமா ? என் அத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கவில்லை ? நாட்டின் வரலாற்றைச் சிந்திக்க வேண்டும். இந்த நாடு மொழி, இனம், சமயம் ஆகிய இவற்றின் காரணமாக எழுந்த போர்கள் அவற்றால் உண்டான மாச்சரியங்கள் ஆகியவற்றைக் கொண்டு பலபல பகுதிகளாகக் கிடந்தது. "அன்பே சிவம்" என்று சைவர்கள் சொல்லலாம். ஆனால் அவர்கள் தான் சமணர்களைக் கழுவில் ஏற்றினார்கள்.

சைவ சமயத்தைச் சார்ந்துவிட்டார் என்பதற்காக ஜைனர்கள்தான் நாவுக்கரசரை கல்லோடு கட்டிக் கடலில் போட்டார்கள். சுண்ணாம்புக் காளவாயில் போட்டார்கள். காரணம் என்ன? தங்களுடைய சமயத்தை மற்றது அழிக்கிறது என்று எழுந்த உணர்வுதான். அதுபோல வடக்கே ஹிந்து-முஸ்லீம் போராட்டங்கள் நடைபெற்று முடிந்தன. இந்தப் போர்கள் எல்லாம் என்ன காரணத்தால் நடந்தன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட போராட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரக்கூடாது என்பதிலே நாம் சிந்தனையைச் செலுத்த வேண்டும். தமிழகத்திலே அப்படிப்பட்ட நிலையை உருவாக்கியது யார் ? முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் 26-ம் தேதி துக்க நாள் கொண்டாட முடிவு செய்ததுதான் இதற்குக் காரணம் என்று சொல்வார்கள். முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அமைதியோடு கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 26-ஆம் தேதி என் துக்க நாள் கொண்டாடவேண்டும்? 25-ஆம் நாள் அல்லது 27-ஆம் நாள் வைத்துக்கொள்ளக் கூடாதா என்று எல்லாம் வாதத்தைக் கிளப்பினார்கள். அது எப்படி இருக்கிறது என்றால், ஒரு வெள்ளைக்காரத் துரையினிடத்திலே ஒரு ஹிந்து குமாஸ்தா வேலை செய்தார். குமாஸ்தாவினுடைய அப்பாவுக்கு நினைவு நாள் என்பதால் வெள்ளிக் கிழமையன்று விடுமுறை வேண்டுமென்று அந்தக் குமாஸ்தா கேட்டார். அதற்கு வெள்ளிக்கிழமை என் வைத்துக் கொள்ளவேண்டும் ? ஞாயிற்றுக்கிழமை அந்த நினைவு நாளைக் கொண்டாடக் கூடாதா என்று அந்த வெள்ளைக்காரத் துரை குமாஸ்தாவிடம் கூறினார். அப்பொழுது அந்தக் குமாஸ்தா திதியையும், நட்சத்திரத்தையும் வைத்துத்தான் அந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று உணர வைத்தார். அந்த முறையில் 26-ஆம் தேதிதான் ஹிந்தி ஆட்சி மொழியாக ஆகிறது. ஆகவே, அன்றுதானே துக்கநாள் கொண்டாட வேண்டும். வடக்கே, எல்லையிலே சீனப் படையெடுப்பு இருக்கும்பொழுது, ஹிந்தி எதிர்ப்புப் போராட்டமா என்று கேட்டார்கள். சீனப் படையெடுப்பு வடக்கே இருக்கக்கூடிய நிலையிலே இவ்வளவு புரட்சியைக் கிளப்பக்கூடிய ஒரு பிரச்னையை என் நீங்கள் கொண்டு வந்தீர்கள் ? அப்படிக்கொண்டு வந்துவிட்டது அவர்களுடைய



9th March 1965] [புலவர் கா. கோவிந்தன்]

தவறுதானே ஒழிய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தவறு அல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் துக்க நாள் கொண்டாடினோம் ; துக்க நாள் கொண்டாடியதனால் மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள் ; மாணவர்கள் கிளர்ச்சியினால்தான் இப்படிப்பட்ட இடிபாடுகள் ஏற்பட்டன ; ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் தான் பொறுப்பு எனறு குற்றஞ் சாட்டினார்கள்.

ஹிந்தி நுழைகிறது ; ஹிந்தி நுழைக்கப்படுவதால், ஹிந்தி திணிக்கப்படுவதால் தமிழுக்கு ஆபத்து என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறிய நேரத்தில் நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. அதைக் கேட்டிருந்தால் நாங்கள் ஹிந்தி எதிர்ப்பு நடத்தி இருக்கமாட்டோம் ; 26-ஆம் நாள் துக்க நாளாகக் கொண்டாடி இருக்கமாட்டோம் ; இவ்வளவு இடிபாடுகளும் ஏற்பட்டிருக்காது. ஆக, இவ்வளவுக்கும் காரணம் முதலமைச்சர் அவர்கள் தான். முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள் : "மாணவர்களுடைய ஐயப்பாட்டையும், அச்ச உணர்ச்சியையும் நான் உணர்கிறேன் ; நேரு அவர்கள் கொடுத்த உறுமொழியைச் சட்டமாக்குவதற்கு வழிவகைச் செய்கிறோம் ; அதுமட்டுமல்ல, நிரந்தர இரு மொழிக் கொள்கைக்காக நான் பாடுபடுவேன்" என்று சொல்லி இருக்கிறார்கள்.

திரு. காமராஜர் அவர்கள் சொன்னார்கள், 1937–லிருந்தே ஹிந்தி எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறதென்று சொன்னார்கள் ; ஹிந்தி வேகமாக வருகிறது என்று சொன்னார்கள் ; அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள் ; நமது தொழில் அமைச்சர் அவர்கள்கூட அருமையாகச் சொன்னார்கள் : ஆங்கிலம் வழங்கப்படுகின்றது என்ற காரணத்தால்தான் வெளி நாட்டினர் இங்கு தொழில்களில் பணத்தைப் போடுகிறார்கள் ; ஆங்கிலம் அகற்றப்படுமானால், அப்படிப்பட்ட முதலீடுகள் வராது ; எனவே, நம்முடைய தொழில் நிலை பாதிக்கப்படும் என்று சொன்னார்ககள். பத்திரிகைகள், பேராசிரியர்கள், துணைவேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், நீதிமன்ற நிபுணர்கள், மாநில கவர்னர்களாக இருந்தவர்கள், எல்லோரும் ஹிந்தி கட்டாயமாக வருகிறது ; ஹிந்தி திணிக்கப்படுகிறது ; ஹிந்தி வநதால் தமிழ் அழியும் : ஹிந்தி வந்துவிட்டால் தமிழ் இருக்காது என்று சொல்கிறார்கள். இதைத் தானே திராவிட முனனேற்றக் கழகமும் சொல்லிற்று. இந்த மாமன்றத்திலே அன்று திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொன்ன நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள், ஹிந்தி எங்கே திணிக்கப்படுகிறது ? ஹிந்தியை 80,000 பேர் படிக்கிறார்கள் ; ஒரு லட்சத்து 20,000 ஆயிரம் பேர்கள் படிக்கிறார்கள் ; ஹிந்தி கட்டாயப்படுத்தப்படவில்லையே என்று சொன்னார்கள். சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நாங்கள் சொன்ன நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ; மே போட்டாலும், ஷெல் போட்டாலும் ஒன்றுதான் ; நாம் மே என்று போட்டால் அரசாங்கம் மே நாட் என்று போடுமா ? அமைச்சர் மே என்று போட்டால் செக்ரட்டரி மே நாட் என்று போடுவாரா ?' என்றெல்லாம் கேட்டார்கள். மேலும், மே என்று போடுவதில்தான் அழுத்தம் இருக்கிறது ; ஷெல் என்று போட்டால் சில உட்கேடுகள் இருக்கின்றன என்றெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு காமராஜர் அவர்கள் சொன்னார்கள் : தமிழ் அழிந்துவிடுமா என்ன? தமிழை அழிய விடுவோமா என்ன ? ஹிந்தி வராது என்று தானே சொன்னார்கள். எல்லோரும் இப்பொழுதுதான் சொல்கிறார்கள். 'செங்கோல் மிஞ்சிய சக்கரமா" என்று இப்பொழுதுதான் சொல்கிறார்கள். என் ? இந்த ஆட்சியினுடைய போக்கு, இவ்வளவு கொடுங்கோன்மை ஆட்சியினுடைய அச்சத்தின் காரணமாகத்தான் அவர்கள் அப்பொழுது கூறவில்லை. இப்பொழுது கூறுகிறார்கள். எதை எப்படி எப்பொழுது செய்ய வேண்டுமோ அப்படிச் செய்திருக்க வேண்டும். செய்ய வேண்டிய காலத்திலே செய்யாவிட்டால் இப்படிப்பட்ட இடிபாடுகள் ஏற்படத்தான் செய்யும். திருவள்ளுவர்,

"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"

[புலவர் கா. கோவிந்தன்] [9th March 1965

என்று கூறியதை நாம் நினைப்பிலே வைத்துக்கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சிலே ஆணவம் குறைந்து அமைதி நிலவ வேண்டும். திருவள்ளுவர் உருவப் படம் ஒன்று வைத்து அதற்குக் கீழே ஒரு குறளையும் எழுதியுள்ளோம். அதே மாதிரி

" யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு "

என்று ஒரு குறளை எழுதி முதலமைச்சர் அவர்கள் பார்வையிலே படும்படி வைக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். மாணவர்களைக் கடுமையாகப் பேசினார்கள். தேனீக் கூடு ஒன்று இருக்கிறது ; தேனீக்கள் ஓயாது உழைத்துத் தேனைச் சேகரித்துக் கொண்டு வருகிறது ; அது நமக்குக் கிடைக்க வேண்டுமென்று கூட்டைக் கெடுக்கிறோம். அப்பொழுது தேனீக்கள் கொட்டும் ; துரத்தித் துரத்தித் கொட்டும் : அவை மீண்டும் உள்ளே சென்று சேருவதற்கு வெகு நாள் ஆகும். மாணவர்கள் சுறுசுறுப்பாக உழைத்துப் படிப்பவர்கள். அப்படிப்பட்ட மாணவர்களைச் சுடு சொற்களால் பேசி, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் கல்லூரிகளை விட்டு, பள்ளிகளை விட்டு வெளியே வரத் தான் செய்வார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் : புகாரி ஹோட்டல் என்று சொன்னார்கள். நாங்கள் 26-ம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடப் போகிறோம் என்று சொன்னபொழுது, என்ன நடக்கிறது என்பதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். அரசாங்கம் சகித்துக் கொண்டிராது ; மக்களும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் ; இதற்கு என் போலீஸ் காவல் ; மக்கள் சந்தித்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். கறுப்புக் கொடிகளை அறுப்பதற்கு போலீஸ் இருக்கிறது ; அப்படியிருக்க குண்டர்கள் அறுக்கப் போலீஸ் பார்த்துக் கொண்டிருப்பானேன் ? வட ஆற்காடு மாவட்டத்தில் குண்டர்கள் என்னை சொன்னார்கள் ? வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான் என்பதால் வெட்கப்படுகிறேன். "ஹிந்தி வாழ்க, தமிழ் ஒழிக ;" என்று காங்கிரஸ்காரர்கள் திருவண்ணாமலையிலே சொன்னார்கள். எவ்வளவு வெட்கக் கேடான, வெட்கப்பட வேண்டிய செயல் ? தமிழ்நாட்டிலே இப்படி ஒரு குரலா ? " தமிழ் ஒழிக " என்று ஒரு குரலா ? இப்படிப்பட்டவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பா ? குண்டர்கள் கல்லால் அடிக்கிறார்கள் ; போலீஸ் பார்த்துக் கொண்டிருந்தது. மாணவர்கள் அடிப்பட்டார்கள். ; துப்பாக்கியால் சுடப்பட்டார்கள்; சிறையிலே அடைக்கப்பட்டார்கள் ; கல்லூரி விடுதிகளின் பூட்டை உடைத்து தடி கொண்டு மாணவர்களை அடித்தார்கள் ; இதை நினைக்கும்பொழுதுதான் பாரதக் கதை ஞாபகத்திற்கு வருகிறது. துரோணாச்சாரி இறந்துவிட்டார் ; அவருடைய மக்களுக்குக் கோபம் ; பாண்டவர்கள் அகப்படவில்லை ; கடைசியாக உறங்கிக் கொண்டிருந்த உப பாண்டவர்களை இரவோடு இரவாக, வில்லின் நாணினாலேயே கழுத்தை அறுத்துக் கொன்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபோல் விடுதிகளிலே உறங்கிக்கொண்டிருந்த மாணவர்களை அடித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நேற்று ஒரு கடிதம் வாசித்தார்கள். எனக்குக் கூட ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஒரு பெற்றோர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதைப் படிக்கிறேன்.

" You have rendered a unique service to the South by your fight against imposition of Hindi on us . Your protest has evoked the greatest admiration for you and stirred all, except a negligible number of vested interests. We, parents, smart under the thought that we had allowed you to shoulder the Himalayan burden through our own default.

Please pass it on to our shoulders. We are arranging to convene a parents' meeting in order to champion your worthy cause and if necessary to continue the struggle with the same courage, as yours, namely, to face lathi-charges, imprisonment, loss of limb and life. If we falter or fail, you re-enter the field.



9th March 1965] [புலவர் கா. கோவிந்தன்]

Meanwhile, I pray, please go back to your classes. Recover the lost ground with redoubled vigour as your examinations are round the corner."

இந்த வேண்டுகோள் ஒருவரிடத்தில் இருந்து வந்தது என்று சொன்னாலும், தமிழகத்தின் ஒவ்வொரு பெற்றோருடைய உள்ளத்திலும் அந்த உணர்ச்சி எழுந்தது. அப்படிபட்ட நேரத்தில், இந்த அரசாங்கம் இவ்வளவு கொடுமையாக மாணவர்களை நடத்திய நேரத்தில் பெற்றோர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா ? பெற்றோர்கள் கிளம்ப வேண்டிய நிலை உண்டாகி விட்டது. அந்தக் காலத்தில் ஜமீன்தார்கள் தங்கள் அடியாட்களுக்குக் கள்ளும், களி சோறும் போட்டு அவர்களை ஊக்குவிக்கும் விதத்திலே, சொந்தப் பகையைத் தீர்த்துக்கொள்ள இந்த அரசு போலீஸை ஊக்குவித்தது. எங்கள் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் தங்களால்தான் காங்கிரஸைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, அவர்களால்தான் காங்கிரஸைக் காப்பாற்ற முடியும் என்று இப்பேர்ப்பட்ட பெரிய தலைவர்களும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போலீஸ் வண்டியில் ஏறிக்கொண்டு காட்டுகின்றவர்களை எல்லாம் பிடித்து அடைத்து வருகிறது இந்த அரசு. மதுரையிலே நமது இலக்குவனார் அவர்கள் " வாழிய செந்தமிழ் " என்ற நாட்டுப் பாடலைப் பாடினார், " ஜனகணமண" பாடவில்லை ; ஆகவே, அவரைப் பிடித்துச் சிறையிலே அடையுங்கள் என்று அவர்கள் 20, 30 நாட்களுக்கு முன்னாலே பத்திரிகையில் எழுதினார்கள். அதே போன்று அவர் கைது செய்யப்பட்டார். அதற்கு அடுத்து அருணாசல கவுண்டர் என்ற ஆசிரியரை பிடித்து அடைத்தார்கள். கல்லூரி முதல்வர்கள் மாறான கருத்தைக் கூறினார்கள் என்பதால் அவர்களைத் தாக்கினார்கள். பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்த காரணத்தால் பத்திரிகைகளுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். வேலூரிலே ஒரு வழக்கறிஞரைச் சிறையிலே போட்டு அடைத்திருக்கிறார்கள். வேலூர் பார் அஸோஸியேஷன் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

" This Association expresses its emphatic protest against the brutal treatment and beating by the D.S.P. and the Inspector of Police of M. M. A. Jayavelu, Advocate, Vellore on 9th February 1965 while discharging his professional duties and urges that a judicial enquiry be forthwith conducted."

என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார் மேற் செல்லுமிடத்து,"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். வெள்ளைக்காரனால் அடிக்கப்பட்டு அடிபட்ட உங்கள் மனம் அடி படும்போது எந்த அளவுக்குப் புண் பட்டிருக்கும் ; எந்த அளவுக்கு உங்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கும் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். வள்ளுவருடைய படத்தை இங்கே மாட்டி விட்டால் போதுமா ? " வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின் மெலியார் மேற் செல்லுமிடத்து " என்று வள்ளுவர் கூறியதை நினைவில் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நான் ஒரு வேண்டுகோளை முதலமைச்சர் அவர்களுக்கு விட விரும்புகிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் சேக்கிழார் மரபில் வந்தவர்கள். சேக்கிழார் பெரிய புராணத்தில் "ஒருவன் ஒருவனைக் கொன்றான்" என்று சொல்லவில்லை. " நினைந்து அப்படியே செய்தார் " என்று சொல்கிறார். நாவுக்கரசர் எந்த மதம் நல்ல மதம் என்று ஆராய்ந்தார் ; சமண மதத்திலே போய்ச் சேர்ந்துவிட்டார்.

" நல்லாறு தெரிந்துணர நம்பர்
அருளாமையினால் கொல்லாமை
மறைந்துறையும்-அமணர்சமயம் குறுகினார் "

இப்படிப்பட்ட பண்பாடு கொண்டவர்கள் இருந்த சேக்கிழார் மரபில் வந்த தாங்கள் சுடு சொற்களையும், வெஞ்சொற்களையும் வீசாதீர்கள் ; கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்களைக் காங்கிரஸ்காரர்கள் தனியாக விட்டுவிட்டு அவருக்குக் குழி பறிக்கிறார்கள். முதலமைச்சருடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அவர் காங்கிரசைக் கெடுத்துவிட்டார் ; காங்கிரஸின் செல்வாக்கைக் குறைத்துவிட்டார் என்ற நிலைமை உண்டாக்குவதற்காக அடியுங்கள், சுடுங்கள் என்று உங்களை ஊக்குவிக்கிறார்கள். இது ஒன்று. இன்னொன்று சொல்கிறார்கள். பதினைந்து ஆண்டு காலமாக தங்களுக்கு முதல் மந்திரி பதவி கொடுக்காமல் இருந்ததற்காகத் தாங்கள் பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் தாங்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் செய்ததாகவும், இனி காங்கிரஸ் முதல் மந்திரியே இங்கு கிடையாது, தனக்கு பிறகு யாரும் காங்கிரசிலிருந்து முதல் மந்திரியாக வரக் கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் கூறுகிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களே, கொஞ்சம் விழிப்போடு இருங்கள். உங்களை ராஜினாமாச் செய்யும்படி நான் கேட்கவில்லை.

* * * *

இந்த நிகழ்ச்சிகளினால் தமிழ் நாட்டிலே ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலைகளைப் பற்றி அமைதியான சூழ்நிலையிலே சிந்திக்கக்கூடிய வாய்ப்பு கனம் முதலமைச்சர் அவர்களுக்கு இல்லை. அந்த நிலையில் அவர்கள் இமாலயத்தில் இருக்கின்ற வேதப் புள்ளிக்குச்சென்று அங்கு அமைதியாக இருந்து இனி என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள், முதலமைச்சர்கள் மகாநாட்டுக்குச் செல்லுமுன் இரு மொழிக் கொள்கையிலே வெற்றி பெற்று வருவேன் என்று சொன்னார்கள். ஆனால் திரும்பிவருகிற நேரத்தில் அது இல்லை.

" வாரணம் பொருதமார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவர்க்கேற்ப நயம்படஉரைத்த நாவும்,
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு
இலங்கை புக்கான் "

என்று கம்பர் பாடியதைப் போல் வெறுங் கையோடு திரும்பியிருக்கிறார்கள். தமிழகத்திலே தற்போது ஏற்பட்ட சூழ்நிலைகள் மறுபடியும் பத்தாண்டோ, பதினைந்தாண்டோ கழித்து உருவாகாத நிலையில் எதிர்காலத்திலே யாருக்கும் சங்கடம் எழக்கூடாத நிலையில், பாதிக்கபடக் கூடாத நிலையில் மொழிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும். இதிலே என்னுடைய கருத்து என்ன என்பதைப் பற்றிப் பின்னால் கூறுகிறேன். ஆகவே, என்ன செய்தால் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணலாம் என்று சிந்தித்துத் தெளிவான முடிவைத் தேர்ந்தெடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, " செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே " என்றும், " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு ; நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு " என்றும், " கம்பனைப் போல், வள்ளுவனை போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை " என்றும் பாரதி கூறுகின்ற பான்மையிலே நிற்கின்ற தன்மைக்கு மக்களின் பிரதிபலிப்பாக இயங்குகின்றது இந்தச் சட்டமன்றமும், சட்டமன்றத்து நடவடிக்கைகளும்.

" குலமுதற் தன்மையும் அறிவின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினர்
நலமுதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலமுதல் அறுத்து நல்தருமம் தாங்கினர் "

*Expunged as ordered by the Chair.





என்று அமைச்சர் இலக்கணத்தைக் கம்பன் கூறியிருக்கின்ற வழி 9-30 a.m.
வகையிலேயும் தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டிலே அமண மயம் மிகவும் பரவி இருந்த காலத்து, பாண்டிய மன்னன் அமண சமத்தைத் தழுவி இருந்த ஒரு நிலையிலே ஞானசம்பந்தப் பிள்ளையார் துரையம்பதிக்குச் சென்று அங்கு ஒரு திரு மடத்திலே தங்கி இருக்க, அமணர்களால் அந்த மடம் தீ வைக்கப்பட்டு அதிலிருந்து தப்பிய அவர் சைவ சமயத்தைத் தழுவி இருக்கின்ற பாண்டியமா தேவி வந்து ம்பந்தப் பிள்ளையாரைப் பார்க்கின்றபோது பிள்ளையார் கூறுகின்றார்—

" மானின் நேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெரும் தேவிகேள்
பானல் வாயொருபாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
யானைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லர் சேர்
ஈனர் கட்கிளையேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே "

என்று கூறுகின்ற நிலையிலும் இருக்கின்ற முதல் அமைச்சர் அவர்களால் தலைமை ஏற்றுக்கொண்டு, செலுத்தப்பட்டு துண்ணூசி போம் இழை என்று கூறுவது போல் ஊசி செல்கிற வழியை நோக்கிச் செல்கிற நூலை ஒத்து பணியாற்றுகின்ற அமைச்சரவை, அமைச்சர்கள் என்ற தலைப்பின்கீழ் உள்ள இந்த மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். அண்மையில் நடந்த மொழிக் கிளர்ச்சியில் நம் முதல் அமைச்சர் அவர்கள் நடந்துகொண்ட பாங்கு மிகவும் கடினமாக இருந்தது என்ற முறையிலே திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களால் மிகவும் தாக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். இங்கு மட்டுமல்ல. வெளியிலும் அவர்களது நிலையை அறியாது மாணவர்களும் பழித்தார்கள், மற்றவர்களும் பழித்தார்கள் என்பது எனக்குத் தெரியும். மாணவர்களும், மற்றவர்களும் அவர்களைப் போல் ஒரு உருவம்கூட ஓலையில் சமைத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து அதைத் தீப்பற்ற வைத்து கருமாதி செய்கிற அளவில் மொட்டைக்கூட அடித்துக் கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். உள்ளதைக் கூறுகிறேன். அந்த ஒரு முறையை, ஞானசம்பந்தப் பிள்ளையார் சொன்னது போல், ஈனச் செயல் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். அமைச்சர்களின் இலக்கணத்தைக் கூற வந்த கம்பன் கூறுகிறான்,

" தம் உயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும் வீரர் "

என்று. அந்த முறையில் தம்முடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே என்ற நிலையை எண்ணாது தலைமகன்—தலைமகன் என்றால் இப்போது குடிமக்களைத்தான் சொல்ல வேண்டும்—அவர்கள் வேறு ஒரு தவறான கருத்தை எண்ணிக்கொண்டு வெகுண்டு எழுகின்ற நிலையில் இருக்கும்போது குடிமக்கள், மாணவர்கள், மற்றவர்கள், எதிர்க் கட்சியினர் இவர்களால் வந்த வெம்மையைத் தாங்கி நின்று, நீதி விடாது உரைக்கும் வீரர் நீதியிலிருந்து வழுவாமல் அதை விட்டு விடாமல்

" நலமுதல் நலியினும் நடுவும் நோக்குவார் "

என்ற வகையில் பணியாற்றக்கூடிய நிலையில் உள்ள முதல் அமைச்சர் அவர்களை ஏச்சாலும், பேச்சாலும், நயத்தாலும், பயத்தாலும் ஏசினார்கள். திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசும்போது வள்ளுவர் கோவில் மைலாப்பூரில் இருக்கிறது, அங்கு வந்துவிடுங்கள் என்று கூறினார்கள். வள்ளுவர் கோவில் இங்கேயே இருக்கிறது. இம்மன்றத்திலேயே திருவள்ளுவரின் ஓவியம் இருக்கிறது. அதற்கு அடியில்

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் "

என்று நாம் தீட்டி வைத்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் இங்கேயே நல்லனவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இங்கு கேட்காதவர்களா மைலாப்பூருக்குப் போய்ச் சொன்னால் கேட்கப் போகிறார்கள் ?

[புலவர் கா. கோவிந்தன்] [9th March 1965

இப்படிப்பட்ட பண்பாடு கொண்டவர்கள் இருந்த சேக்கிழார் மரபில் வந்த தாங்கள் சுடு சொற்களையும், வெஞ்சொற்களையும் வீசாதீர்கள்; கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்களைக் காங்கிரஸ்காரர்கள் தனியாக விட்டுவிட்டு அவருக்குக் குழி பறிக்கிறார்கள். முதலமைச்சருடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அவர் காங்கிரசைக் கெடுத்துவிட்டார்; காங்கிரஸின் செல்வாக்கைக் குறைத்துவிட்டார் என்ற நிலைமை உண்டாக்குவதற்காக அடியுங்கள், சுடுங்கள் என்று உங்களை ஊக்குவிக்கிறார்கள். இது ஒன்று. இன்னொன்று சொல்கிறார்கள். பதினைந்து ஆண்டு காலமாக தங்களுக்கு முதல் மந்திரி பதவி கொடுக்காமல் இருந்ததற்காகத் தாங்கள் பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் தாங்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் செய்ததாகவும், இனி காங்கிரஸ் முதல் மந்திரியே இங்கு கிடையாது, தனக்கு பிறகு யாரும் காங்கிரசிலிருந்து முதல் மந்திரியாக வரக் கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் கூறுகிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களே, கொஞ்சம் விழிப்போடு இருங்கள். உங்களை ராஜினாமாச் செய்யும்படி நான் கேட்கவில்லை.

* * * *

இந்த நிகழ்ச்சிகளினால் தமிழ் நாட்டிலே ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலைகளைப் பற்றி அமைதியான சூழ்நிலையிலே சிந்திக்கக்கூடிய வாய்ப்பு கனம் முதலமைச்சர் அவர்களுக்கு இல்லை. அந்த நிலையில் அவர்கள் இமாலயத்தில் இருக்கின்ற வேதப் புள்ளிக்குச்சென்று அங்கு அமைதியாக இருந்து இனி என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள், முதலமைச்சர்கள் மகாநாட்டுக்குச் செல்லுமுன் இரு மொழிக் கொள்கையிலே வெற்றி பெற்று வருவேன் என்று சொன்னார்கள். ஆனால் திரும்பிவருகிற நேரத்தில் அது இல்லை.

“ வாரணம் பொருதமார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவர்க்கேற்ப நயம்படஉரைத்த நாவும்,
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு
இலங்கை புக்கான் ”

என்று கம்பர் பாடியதைப் போல் வெறுங் கையோடு திரும்பியிருக்கிறார்கள். தமிழகத்திலே தற்போது ஏற்பட்ட சூழ்நிலைகள் மறுபடியும் பத்தாண்டோ, பதினைந்தாண்டோ கழித்து உருவாகாத நிலையில் எதிர்காலத்திலே யாருக்கும் சங்கடம் எழக்கூடாத நிலையில், பாதிக்கபடக் கூடாத நிலையில் மொழிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும். இதிலே என்னுடைய கருத்து என்ன என்பதைப் பற்றிப் பின்னால் கூறுகிறேன். ஆகவே, என்ன செய்தால் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணலாம் என்று சிந்தித்துத் தெளிவான முடிவைத் தேர்ந்தெடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, “ செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே ” என்றும், “ வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு; நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு ” என்றும், “ கம்பனைப் போல், வள்ளுவனை போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை ” என்றும் பாரதி கூறுகின்ற பான்மையிலே நிற்கின்ற தன்மைக்கு மக்களின் பிரதிபலிப்பாக இயங்குகின்றது இந்தச் சட்டமன்றமும், சட்டமன்றத்து நடவடிக்கைகளும்.

“ குலமுதற் தன்மையும் அறிவின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினர்
நலமுதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலமுதல் அறுத்து நல்தருமம் தாங்கினர் ”

*Expunged as ordered by the Chair.



9th March 1965] [திரு ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

என்று அமைச்சர் இலக்கணத்தைக் கம்பன் கூறியிருக்கின்ற வழி
வகையிலேயும் தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டிலே அமண 9-30 a.m.
சமயம் மிகவும் பரவி இருந்த காலத்து, பாண்டிய மன்னன் அமண சமயத்தைத் தழுவி இருந்த ஒரு நிலையிலே ஞானசம்பந்தப் பிள்ளையார் மதுரையம்பதிக்குச் சென்று அங்கு ஒரு திரு மடத்திலே தங்கி இருக்க, அமணர்களால் அந்த மடம் தீ வைக்கப்பட்டு அதிலிருந்து தப்பிய அவர் சைவ சமயத்தைத் தழுவி இருக்கின்ற பாண்டியமா தேவி வந்து சம்பந்தப் பிள்ளையாரைப் பார்க்கின்றபோது பிள்ளையார் கூறுகின்றார்—

“ மானின் நேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெரும் தேவிகேள்
பானல் வாயொருபாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
யானைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லர் சேர்
ஈனர் கட்கெளியேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே ”

என்று கூறுகின்ற நிலையிலும் இருக்கின்ற முதல் அமைச்சர் அவர்களால் தலைமை ஏற்றுக்கொண்டு, செலுத்தப்பட்டு துண்ணூசி போம் இழை என்று கூறுவது போல் ஊசி செல்கிற வழியை நோக்கிச் செல்கிற நூலை ஒத்து பணியாற்றுகின்ற அமைச்சரவை, அமைச்சர்கள் என்ற தலைப்பின்கீழ் உள்ள இந்த மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். அண்மையில் நடந்த மொழிக் கிளர்ச்சியில் நம் முதல் அமைச்சர் அவர்கள் நடந்துகொண்ட பாங்கு மிகவும் கடினமாக இருந்தது என்ற முறையிலே திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களால் மிகவும் தாக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். இங்கு மட்டுமல்ல. வெளியிலும் அவர்களது நிலையை அறியாது மாணவர்களும் பழித்தார்கள், மற்றவர்களும் பழித்தார்கள் என்பது எனக்குத் தெரியும். மாணவர்களும், மற்றவர்களும் அவர்களைப் போல் ஒரு உருவம்கூட ஓலையில் சமைத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து அதைத் தீப்பற்ற வைத்து கருமாதி செய்கிற அளவில் மொட்டைக்கூட அடித்துக் கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். உள்ளதைக் கூறுகிறேன். அந்த ஒரு முறையை, ஞானசம்பந்தப் பிள்ளையார் சொன்னது போல், ஈனச் செயல் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். அமைச்சர்களின் இலக்கணத்தைக் கூற வந்த கம்பன் கூறுகிறான்,

“ தம் உயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும் வீரர் ”

என்று. அந்த முறையில் தம்முடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே என்ற நிலையை எண்ணாது தலைமகன்—தலைமகன் என்றால் இப்போது குடிமக்களைத்தான் சொல்ல வேண்டும்—அவர்கள் வேறு ஒரு தவறான கருத்தை எண்ணிக்கொண்டு வெகுண்டு எழுகின்ற நிலையில் இருக்கும் போது குடிமக்கள், மாணவர்கள், மற்றவர்கள், எதிர்க் கட்சியினர் இவர்களால் வந்த வெம்மையைத் தாங்கி நின்று, நீதி விடாது உரைக்கும் வீரர் நீதியிலிருந்து வழுவாமல் அதை விட்டு விடாமல்

“ நலமுதல் நலியினும் நடுவும் நோக்குவார் ”

என்ற வகையில் பணியாற்றக்கூடிய நிலையில் உள்ள முதல் அமைச்சர் அவர்களை ஏச்சாலும், பேச்சாலும், நயத்தாலும், பயத்தாலும் ஏசினார்கள். திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசும்போது வள்ளுவர் கோவில் மைலாப்பூரில் இருக்கிறது, அங்கு வந்துவிடுங்கள் என்று கூறினார்கள். வள்ளுவர் கோவில் இங்கேயே இருக்கிறது. இம்மன்றத்திலேயே திருவள்ளுவரின் ஓவியம் இருக்கிறது. அதற்கு அடியில்

“ சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் ”

என்று நாம் தீட்டி வைத்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் இங்கேயே நல்லனவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இங்கு கேட்காதவர்களா மைலாப்பூருக்குப் போய்ச் சொன்னால் கேட்கப் போகிறார்கள் ?

[9th March 1965

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள்கூட அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் வேறு எந்த விதமான நோக்கமும் இல்லாமல் நல்ல உள்ளத்துடன் தமிழ்நாட்டில் இருக்கிற ஒரே ஒரு வள்ளுவர் கோவில் அங்கு தான் இருக்கிறது. காலணு கூட வருமானம் இல்லாமல் இருக்கிறது எனக் கூறி, முதல் அமைச்சர் அவர்களின் கண் பார்வையின் கீழ் அவர் கள் வந்து அமர்ந்து . . .

MR. SPEAKER : These subjects are beyond the political arena. I would have objected to these remarks even when they were made if I were present. Anyway, I would request the hon. Member not to repeat those remarks. What the Hon. Chief Minister should do after resigning his post and all those matters will not come within the scope of discussion in this House.

**திரு. இராம. அரங்கண்ணல் :** என் வேண்டுகோளை தெரிவித்தேன்.

MR. SPEAKER : What the Hon. Chief Minister should do after getting out of the Ministry or this House and similar matters are beyond the scope of discussion in this House. It is true that such remarks have been made on both sides. Anyway, I request hon. Members not to repeat them.

SRI RAMA. ARANGANNAL : Sir, I take your personal advice.

MR. SPEAKER : It is not a personal advice. It is Speaker's advice. If it is a personal advice, I can invite you to come to my house and tell you what I want to tell. But that is not the case here. So, it is not a personal advice. As Speaker, I may tell the hon. Members again and again that what a Minister should do in his private capacity after resigning his office and after getting out of the Ministry and all those matters do not come within the ambit of discussion in this House. Of course here and there hon. Members have gone beyond the scope of the discussion. Let this not be repeated. That is what I wish to point out to the hon. Members.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** எனக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** இந்த வேகத்தில் போனால் சீக்கிரம் உட்கார வேண்டியிருக்கும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** மாணவர்களிடத்தில் மிக வும் வன்கண்மையாக நடந்து கொண்டார்கள் என்று முக்கியமாகச் சொல் லப்படுகிறது. இலக்கிய வகையில் ஒரு பாடலை வைத்து அதை முற்றிலும் மறுக்க ஆசைப்படுகிறேன்.

"என்கண் இனையர் எனக்கருதின் ஏதமால்
தன் கண்ணர் ஆயினும் தகவில கண்டக்கால்
வன்கண்ணன் ஆகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு"

என்று சொல்லப்படுகிறது. தன் கண்ணைப் போன்றவர்களாக இருந்தாலும் கூட அவர்களிடத்தில் தீய ஒழுக்கம் காணப்படும்போது தன்னிடமிருக்கிற கருணை உள்ளத்தை மறைத்து வைத்துக் கொண்டு வன்கண்மையைத்



9th March 1965] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

தருவித்துக்கொண்டு அந்த வகையில் நின்று ஒரு அரசன் தீயனவற்றை நடுக்காவிட்டால் அந்த அரசன் ஆளான் அரசு,ஆளத் தகுதி அவனுக்குக் கிடையாது, ஆட்சி செய்ய முடியாது என்ற ஒரு கருத்து பழமொழி நானூறு என்ற சங்க இலக்கியத்தில் கூறப்படுகிறது.

"உலப்பில் உலகத்து உறுதியை நோக்கி
குலைத்து அடக்கி நல்லறம் கொள்ளார் கொளுத்தல்
மலைத்து அழுது உண்ணுக் குழவியைத் தாயார்
அலைத்துப் பால் பெய்து விடல்".

என்று கூறப்படுகிறது. ஒரு குழந்தை பால் உண்ண அல்லது ஆகாரம் கொள்ள மறுக்கிறது. தாயார் பால் உட்கொள்ளாத குழவியை எவ்வாறு பிடித்து வைத்து மடியில் வைத்துக் கொண்டு கால்களை பிடித்து வைத்து, மூக்கைப் பிடித்துப் பால் கொடுக்கிறாளோ அதேபோல் ஒழுக்கம் இல்லாத வரின் மனத்தை துன்புறுத்தியாவது நல்லறத்தை அவர்கள்பால் நின்று ஒழுகச் செய்யக் கூடிய வகையில் செய்யக்கூடிய ஒரு தன்மை அரசனுக்கு உண்டு. அந்த அரசு அப்படிச் செய்யவில்லை என்றால் அது அரசு ஆகாது. நாட்டை ஆளும் பண்பு அவர்களுக்கு இல்லை என்றும் கூறப்படுகிறது. இவைகளை எல்லாம் நன்றாக கவனத்தில் வைத்து எத்தகைய சூழ் நிலையில் இந்த ஆட்சியின் அடக்குமுறை நடந்தது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். ஈரோட்டில் நடந்த கிளர்ச்சியை நான் பார்த்தேன், என்னைக் கண்டால் மிகவும் பிரியமாக இருக்கக்கூடிய மக்கள் அன்றைய தினம் என்னைக் கண்டவுடன், "பிடியடா, பிடியடா" என்று சிலர் சத்தம் போட்டார்கள், எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது, என்னைச் சொல் வதற்கு என்ன வந்து விட்டது, நான் தமிழுக்கு விரோதியா, நான் தமிழுக்குப் பகைவனா? இப்படிச் சத்தம் போட்டவர்கள் அருகில்வந்து என்னைப் பார்த்தார்கள், நான் என்னுடைய காரில் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னை உற்றுப் பார்த்தார்கள், அப்போதுதான் தெரிந்தது, இவர்கள் எல்லோரும் நன்றாகத் தண்ணிப் போட்டிருந்தார்கள் என்று. போதை மயக்கத்தில் யார் என்றே அவர்களுக்கே தெரிய வில்லை. அருகில் வந்த பின்னால் "ஓ தட்சிணாமூர்த்தி கவுண்டரா . ." என்று பின்னால் சொல்கிறார்கள், எப்படி தெரிந்துக் கொண்டார்கள் என்று தெரியவில்லை, ஒரு வேளை வழக்கம்போல் உள்ள பொட்டைக் கண்டு தெரிந்து சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை, அந்த அளவுக்கு மயக்கம் ஏற்பட்டிருந்தது. இப்பேர்ப்பட்டவர்கள்தான் பல கொடிய செயல்களை நடத் தினார்கள் அன்றையதினம். நகர சபையால் நடத்தப்படுகிற தாய் சேய் நல விடுதியில் பல கர்ப்பிணிகள் இருந்தார்கள், பலர் பிரசவம் ஆன பிறகு படுத்திருந்தார்கள். சிலர் பிரசவம் ஆகின்ற நிலையில் இருந்தார்கள். இந்த இடத்தில் எல்லாம் கற்கள் எறியப்பட்டன. இந்தக் கட்டிடத்தின் மீது சுமார் 200 பேர்கள் சேர்ந்துக் கொண்டு கர்ப்பிணிகள் மீது கற்கள் படக்கூடிய அளவில் கற்களால் அடித்திருக்கிறார்கள், பிரசவம் ஆன பெண்கள், பிரசவத்திற்கு வந்திருக்கும் கர்ப்பிணிகள், பிரசவ தருணத்தில் இருக்கின்ற பெண்கள் இவர்கள், எல்லாம் வீறிட்டு ஓடி இருக்கிறார்கள்.

இன்னொரு இடத்தில் ஒரு ரேடியோ கடைக்காரர், அவருக்கு மூன்று இளம் பெண்கள் உண்டு, உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருக் கிறார்கள். இவர்களை எப்போதும் 10, 15 வாலிபர்கள் சுற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள், விசில் அடித்துக்கொண்டிருப்பதும் வழக்கமாக இருந்து கொண்டிருந்திருக்கிறது. அமளி நடந்த தினத்தன்று அவருடைய வீட்டைச் சுற்றி இந்த நபர்கள் சுமார் 80 பேர்கள் போய்ச் சுற்றிக்கொண்டிருந்தார் கள். இதைப் பார்த்துவிட்டு ஏதாவது அபாயம் ஏற்படுமோ என்று எண்ணி என்னிடம் வந்து முறையிட்டார்கள். நான் என் நண்பர் ஒருவரைக் காவல் போட்டேன், அதிலும் முடியவில்லை என்றால் இரவில் என் ஊருக்கு அழைத்து கொண்டு வந்து விடும்படி கூறியிருந்தேன். இம்மாதிரி செயல்கள் எல்லாம் நடப்பதை பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தார் சொல்லுகிறார்களா என்று கேட்கிறேன் . . . (எதிர்கட்சியிலிருந்து சில அங்கத்தினர்கள் இல்லை, இல்லை, இல்லை . . ) அப்படியானால் முதலமைச்சர் அவர்கள் எடுத்த

நடவடிக்கை வன்முறை நடவடிக்கைகள் என்று ஏன் ஓயாமல் பலபேரும் சொல்லுகிறீர்கள், இந்த நிலைமை இருந்து கொண்டிருந்தால் தமிழ்நாட்டு மக்கள் எப்படி பெண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டு மானத்தோடு வாழ முடியும்? நான் பெண்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு கேட்க விரும்புகிறேன், யாரால் இதை சகித்துக் கொண்டிருக்க முடியும்? (குறுக்கிடு) உண்மை நிலை இதுதான், இதை யாராலும் மறைக்க முடியாது, இதில் ஏன் இந்த சலசலப்பு, குற்றம் உள்ள நெஞ்சு தான் குறுகுறுக்கிறதா? இதை நான் ஒரு இலக்கியத்திலுள்ள பாட்டைக் கொண்டு விளக்க விரும்புகிறேன். . .

கள்வர்களைப்பற்றி சொல்லும் போது "மயில் போலும் கள்வர் உளர்" என்று சொல்வதுண்டு, கள்வர்கள் பலர் இருக்கிறார்கள். . . .

"துயிலும் பொழுதத்து உடை ஊண் மேற்கொண்டு
வெயில் விரி போழ்தின் வெளிப்பட்டோராகி
அயில் போலும் கண்ணாய்! அடைந்தார் போல் காட்டி.
மயில் போலும் கள்வர் உளர். ." என்று.

மயில் இருக்கிறதே, அது கடும் விஷத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற நல்ல பாம்பையும் விழுங்கிவிடும். இவ்விதம், விழுங்கிவிட்டு தனக்கு ஒன்றும் தெரியாதது போன்ற பாண்மையில் சாதுவாக நிற்கும். நிற்பதோடு மட்டுமல்ல, மற்றவர்களையும் மயக்குவதற்காக தனது அழகான சிறகை எடுத்து விரித்துக் கொண்டு ஆடுமாம். பார்ப்பவர்கள் மயங்குவர் ஆனால் தான் உள்ளே விழுங்கியிருப்பது விஷத்தைக்கொண்ட பாம்பை, இதேபோன்று வெளியில் யாருக்கும் தெரியாது, இம்மாதிரி இருப்பார்கள் கள்வர்கள் பலர் என்று சொல்லப்பட்டிருக்கிறது இலக்கியத்தில், நான் சொல்ல வில்லை. இவற்றை யெல்லாம் ஆர அமர இருந்து சிந்தித்துப் பார்ப்போமேயானால் குற்றம் எங்கே யிருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

ஆட்சி மொழியைப் பொறுத்தவரையில் என்றைக்கும் ஆங்கிலம் இருந்தாகவேண்டும் என்று சொல்பவன் நான். ஆங்கிலப் பண்பாடு ஆங்கிலத்தால் ஏற்பட்ட வளர்ச்சி இவைகளை எல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தால் நம்மோடு, நம் மொழிகளோடு ஆங்கிலமும் ஒரு மொழியாகிவிட்டது. ஆகவே அத்தகைய மொழி இன்னும் இருக்க வேண்டும் என்பது தான் நம்முடைய விருப்பம். இதில் யாருக்கும் எதிரான கருத்து இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் இந்த பாரத தேசம் என்பது குமரி முதல் இமயமலைவரை மேற்கடல் முதல் கீழ்க்கடல்வரை பரவியிருக்கின்ற ஒரு நாடு என்பதை நாம் மறந்து விடுவதற்க்கில்லை. அதன் அடிப்படையில், டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்ன ஜனநாயக அடிப்படையில் இந்த நாடு ஒன்று என்ற உணர்வில் பார்க்கும்போது தான் மும்மொழித் திட்டத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது: வேறு நமக்கு என்ன வழி இருக்கின்றது. இந்தி அறவே இந்த தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது என்று சொன்னால் வடக்கிலுள்ளவர்கள் ஆங்கிலம் இருக்கவே கூடாது என்று சொல்ல அவர்களுக்கு உரிமை கிடையாதா? அந்த வகையில் பார்ப்போமானால் நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சி மொழிக் கருத்தில் கொண்டிருக்கக் கூடிய நிலை பெருநிலை, அவரை தலைவராகக் கொண்டு பணியாற்றுகின்ற மந்திரிசபை கொண்டிருக்கின்ற நிலை பெருநிலை என்பதைச் சொல்லிக் கொண்டு, அமளி ஏற்பட்ட நேரத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் துணிந்து நின்று நடவடிக்கை எடுத்து மக்களைக் காப்பாற்றியதற்காக அவர்களுக்குத் தமிழ் மக்கள் சார்பாகவும், முக்கியமாகப் பெண்கள் சார்பாகவும், அதிலும் முக்கியமாக நல்லவர்கள் சார்பாகவும் என் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. முனு. ஆதி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று வைக்கப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரேபணையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற நாட்கள் கடந்த மூன்று ஆண்டு காலமாக முறை





யாக அதிக நாட்கள் நடத்தாமல் இருப்பதால், எங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி பேசுவதற்கும் எங்களுடைய பங்கை சரியான முறையில் இங்கு வந்து ஆற்றுவதற்கும் இயலாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது இருப்பதை விட இன்னும் அதிக நாட்கள் சட்டசபைக் கூட்டம் நடைபெறுவதற்கும், அதில் எங்களைப்போன்ற அங்கத்தினர்கள் தங்கள் கோரிக்கைகளைச் சொல்வதற்கும் உரிய வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றி சொல்லப்போனால், கடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் நின்ற வேட்பாளர்களுக்கு தாங்கள் தேர்தலில் நிற்பது வரையிலும் வாக்காளர் பட்டியல் கொடுக்கப்படவில்லை. இதைப் பற்றி எங்கள் பகுதியிலுள்ள ஆர். டி. ஓ. விடம் போய்க் கேட்டதற்கு நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை, அரசாங்கத்திலிருந்து வரவில்லை என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் பலமுறை இதைப் பற்றிக் கேட்டும் நாளை மறு நாள் தேர்தல் என்றால் இன்று தான் வாக்காளர் பட்டியல் கிடைக்கக்கூடிய நிலை இருந்தது, அதிலும் போதிய அளவிற்குக் கிடைக்காமல், ஐந்து பேர்கள் நிற்கக் கூடிய ஒரு இடத்தில் 10, 15 வாக்காளர் பட்டியல் தான் கிடைக்கக்கூடிய நிலை இருந்தது. இனிமேலாவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாதவாறு பார்த்து, நிற்கின்ற வேட்பாளர்களைக் கணக்கில் கொண்டு அதற்குத் தகுந்தவாறு அதிகமாக வாக்காளர் பட்டியலைக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வார்டுகளைப் பிரிக்கும் போது, சில பஞ்சாயத்துக்கள் தீர்மானம் போட்டு அனுப்பத் தவறியிருக்கலாம். அம்மாதிரிப்பட்ட இடங்களிலும் பிற இடங்களிலும் அதிகாரிகள் ஏதோ தங்களுக்குத் தெரிந்த அளவில் வார்டுகளைப் பிரித்திருக்கிறார்கள். இதன் காரணமாக எத்தனையோ சிக்கல்கள் ஏற்பட்டன என்பதை அதிகாரிகள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஓர் பஞ்சாயத்தில் ஆறு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால், அதில் சில வார்டில் இரண்டு பேர்கள், அல்லது மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிலைமையையும் வைத்துவிட்டார்கள். இவ்வாறு வேண்டுமென்றே பாகுபாடு செய்யப்பட்டது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. அவசரத்தின் காரணமாக வெளியில் போய் உண்மை நிலைமை என்ன என்பதைப் பார்க்காமல் அலுவலகத்தில் இருந்துக்கொண்டே வார்டுகளைப் பிரித்துவிட்ட காரணத்தினால் தான் இத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டன என்பதை நாம் கண்கூடாக பார்க்க முடிந்தது. இரண்டு மூன்று மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சேர்த்து வைத்திருப்பதைத் தவிர்த்து, தனித்தனியாக முறையாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வைத்து தேர்தலை நடத்தினால் நன்றாக இருந்திருக்கும். கிராமங்களில் படிப்பில்லாத மக்கள், ஒன்றுக்கும் மேற்பட்டு வேட்பாளர்கள் இருந்தால் வோட் போடுவதில் பல தகராறுகளை ஏற்படுத்தி விடக்கூடிய நிலைமை ஏற்படும். இரண்டு மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொல்லும்போது, குறைந்தது ஐந்தாறு பேர்கள் வேட்பாளர்களாக நிற்பார்கள். இதன் காரணமாக அதிகமான சின்னங்கள் இருக்கும் அதில் சரியான படி வோட் செய்யாத நிலையும் ஏற்படும். ஆகவே இரண்டு மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றிருப்பதை மாற்றி தனித்தனி உறுப்பினர்கள் தேர்தெடுக்க வேண்டும் என்ற நிலையை கொண்டு வந்தால் ஊராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு எளிதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று, தேர்தல்களை நடத்துவதற்கு வருகிறவர்கள் போதுமான அளவு பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறுதான். இருந்தாலும் இவர்கள் செய்கின்ற தவறுகளின் காரணமாக சில நேரங்களில் ஊராட்சி மன்றத் தேர்தல் நிறுத்திவைக்கவேண்டியிருக்கின்றது. இதன் காரணமாக யூனியன் சேர்மென் தேர்தலுக்கு நிற்பதற்கு அருகதை அற்றவர்களாகிவிடுகிற ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று, சேர்மென் தேர்தலை தள்ளி வைக்க

வேண்டும், அல்லது பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்டு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே நல்ல பயிற்சி பெற்றவர்களாகவோ அல்லாமலோ இருந்தால் கூட, யூனியன் சேர்மென் தேர்தலில் பங்கு கொள்ளுகிற அளவுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது எனது மாவட்டத்தில் அரிசி விநியோகக் கடைகளைக் கொடுக்கும்போது என்னென்ன நிலைமைகள் இருந்தன என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கடந்த மூன்று நான்கு தினங்களுக்கு முன் நம் நாட்டிலே உணவுப் பஞ்சத்தினால் அரிசிப் பஞ்சம் இருந்த காரணத்தினால் என்ன நிலைமை இருந்தது என்பதை நாம் நன்கு அறிவோம். மாவட்ட கலெக்டர் அளவில் சட்ட மன்ற உறுப்பினர்களையும் மற்றவர்களையும் கூட்டி வைத்துப் பேசி இதற்கு முறையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக மிகவும் கண்ணியமாக நடந்துக்கொண்டதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் ஆர். டி. ஓ. விடம் அதைப் பற்றி தெரிவித்து, பெரும் முக்கியஸ்தர்களை வைத்துக் கடைகளைப் பிரித்துக் கொடுத்து முறையாக நடந்து கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த முறையில் ஏற்பாடு செய்தார். ஆர். டி. ஓ. அவர்களும் எங்கள் ஊரில் அரிசிக் கடைகளைப் பிரித்துக்கொடுப்பதில் அவர் உட்கார்ந்துக்கொண்டு ஆளும் கட்சிக்காரர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், பெரும் முக்கியஸ்தர்களையும், முனிஸிபல் கமிஷனரையும் வைத்துக்கொண்டு பங்கிடு செய்தார்கள். பெரும் வியாபாரிகளாக இருக்கிறவர்களுக்கு, அரிசி வியாபாரிகளுக்கும், மளிகை வியாபாரிகளுக்கும், நீண்ட காலமாக அதிக அளவில் விற்பனை வரி, வருமான வரி கட்டிக்கொண்டுவரக் கூடியவர்களுக்கும் அந்தக்கடைகளைப் பிரித்துக்கொடுத்தார்கள். வெளியே வந்த பிறகு, பாதிக்கப்பட்டவர்கள் ஆளும் கட்சிக்காரர்களை அணுகி, நான் அதைப் பற்றிச் சொல்லுவதற்கு மெத்த வருத்தப்படுகிறேன். மாவட்ட காங்கிரஸ் தலைவர் அவர்கள் தலையிட்டு எடுக்கப்பட்ட முடிவுகளை மாற்றி புதிய புதிய கடைக்காரர்களுக்கு அரிசிக் கடைகள் கொடுக்கப்பட்டன. இப்போது அரிசி வியாபாரமே செய்தவர்களும், மற்ற வியாபாரிகளும் விற்பனை இல்லாமல், வியாபாரம் இல்லாமல் நிச்சயமாகப் பதைபதைத்து இருக்கிறார்கள். வியாபாரம் தெரியாதவர்களுக்கும், ஆளும் கட்சிக்காரர்களுக்குமே இந்தக் கடைகள் கொடுக்கப்பட்டு, வியாபாரத்தில் பழக்கமில்லாதவர்களாக இருக்கிற காரணத்தினால் மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்மையில் எனது மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி எடுத்து சொல்லாமல் இருக்க முடியவில்லை. எனது மாவட்டத்தில் போலீஸ்காரர்களுடைய நடவடிக்கை எவ்வளவு மோசமாக இருந்தது என்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திருவொற்றியூரில் மூன்று ரெயில்வே காரேஜ்ஜுகள் கொளுத்தப்பட்டன. உண்மை. யாராலேயோ கொளுத்தப்பட்டு, அவைகள் எரிந்து முடிந்த பிறகு, அதை வேடிக்கை பார்க்க மக்கள் கூடியிருந்தார்கள். அப்பொது திடீரென்று போலீஸார் வந்து இறங்கினார்கள். அவர்களுக்கு உடனே சுடும்படி உத்திரவு கொடுக்கப்பட்டது. எச்சரிக்கை கூடச் செய்யவில்லை. எப்போது அந்த நிகழ்ச்சி நடந்தது என்று தலத்தில் இருக்கக் கூடியவர்களிடமிருந்து கேட்பதற்குக் கூட முயற்சிக்கவில்லை. அங்கே அந்த நேரத்தில் இருந்தவர்களைச் சுடுவதற்கு உத்திரவிடப்பட்டது. நிகழ்ச்சி நடந்த இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு சுடப்பட்டது. இந்த நிகழ்ச்சியைக் கண்டு அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய மக்கள் பீதி அடையக் கூடிய அளவுக்கு அவ்வளவு மோசமாக இருந்தது என்று தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். வாலாஜாபாத்தில் இதேபோன்று ஒரு நிகழ்ச்சி நடந்தது. ரெயில்வே ஸ்டேஷனில் நடந்த நிகழ்ச்சி. அதன் பிறகு போலீஸார்கள் வீடு வீடாகப் புகுந்து—நிகழ்ச்சி நடந்த தலத்தில் யாரையும் பிடிக்கவில்லை—அங்கே இருந்த மக்களை அடித்து. அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று போலீஸ் ஸ்டேஷனில்



ஒருவர் இறந்து விட்டார் என்று அந்த வட்டாரத்தில் சொல்லப்படுகிறது, ஆனால் அதைப் பற்றிப் பத்திரிகையில் வரவில்லை, அரசாங்கத்திலிருந்து மறுப்பும் வரவில்லை. காஞ்சீபுரத்தில் சில நிகழ்ச்சிகள் நடந்தன. அதன் பிறகு அங்கேயும் போலீஸார் வீடு வீடாகப் புகுந்து மக்களை அடித்திருக்கிறார்கள். தாம்பரத்தில் ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை. அங்கே ஊர்வலம் வந்திருக்கிறது. ஒரு சில இடங்களில் ஏதோ சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் மிகப் பொறுப்புடன், இதிலே யாருமே அங்கம் வகிக்கக் கூடாது, யாரும் இதிலே கலந்து கொள்ள கூடாது என்று நான் சிறையிலிருந்து விடுதலையான உடன், அதிலே கலந்துக்கொள்ள கூடாது, எந்த நிகழ்ச்சியும் இருக்கக்கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி அந்த விதமாக நாங்கள் யாருமே அதில் கலந்துக்கொள்ளவில்லை. இதற்கு நிரூபணமாக, நாங்கள் யாருமே கைது செய்யப் படாமலிருப்பதிலிருந்து தெரிகிறது. அப்படிப்பட்ட இடத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் போலீஸ்காரர்களுக்குச் சொல்லி அவர்களுக்கு வேண்டாதவர்களையெல்லாம் பிடித்து எட்டு அடிக் கொட்டடிக்குள் 60 பேர்களைப் போட்டு இரண்டு நாட்கள் நின்று கொண்டிருந்திருக்கிறார்கள். அங்கே உட்காரக் கூட இடம் கிடையாது. 76 பேர்களை இரண்டு கொட்டடிகளில் போட்டு வைத்து சாப்பிடச் சாப்பாடு கொடுக்காமல், தாகத்திற்குத் தண்ணீர், தண்ணீர் என்று கேட்ட போது தண்ணீர் கூடக் கொடுக்காமல் போலீஸ் நிர்வாகம் மோசமாக நடந்துகொண்டிருக்கிறது. தாம்பரத்தில் குறிப்பிடும்படியான எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஆனால், எல்லாம் முடிந்த பிறகு, நகராட்சி மன்றத்தில் வேலை. செய்கிற ஒருவரை, சட்ட மன்றம் கூடுவதற்கு இரண்டு நாட்கள் முன், யாருக்கும் போலீஸாருக்கும் கூட தெரியாது, அப்படிப்பட்டவரை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் "இவர் நமக்குப் பணியாதவர், எதிர்க்கட்சிக்கு அனுதாபி" என்ற காரணத்திற்காக, போன வெள்ளிக்கிழமை அன்று சப்-இன்ஸ்பெக்டர் ஆபீஸுக்கு வந்து, அவர்களோடு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து, அவரைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று நாங்கள் இப்போது அவரை ஜாமீனில் கொண்டு வந்திருக்கிறோம். நடந்த நிகழ்ச்சிகள் ஏற்கெனவே நடந்திருக்கின்றன. அதற்காக இவ்வளவு நாட்கள் கழித்து வேண்டாதவர்களைக் கைது செய்யக் கூடிய நிலை இருக்கிறது. எங்கள் பகுதியில் ஏதாவது நடந்திருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை. அப்படி ஏதாவது சிறு நிகழ்ச்சிகள் நடத்திருந்தாலும் அதையெல்லாம் சமூக விரோதிகள் செய்திருக்கிறார்கள். இரண்டு மூன்று இடங்களில் அவர்களைச் சேர்ந்தவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தலத்திலேயே கைது செய்யப்பட்டார்கள் என்று இருந்தாலும், அல்லது தஸ்தாவேஜ் பூர்வமாக ஏதாவது ஆதாரம் இருந்தாலும் கூட ஏற்றுக்கொள்ளலாம். அந்த முறையில் கைது செய்யப்படக் கூடியவர்களுடைய பெயரையும், தகப்பனார் பெயரையும் மட்டும் குறித்துக்கொண்டு உள்ளே போட்டு விடுகிறார்கள். அதன் பிறகு ஏதாவது ஒரு செக்ஷனைப் போட்டு சார்ஜ்ஷீட் போட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் போலீஸ்காரர்கள் நடந்து கொண்டார்கள். வீடு வீடாகப் புகுந்து அடித்து மக்கள் கைது செய்யப்பட்டும், போலீஸ் ஸ்டேஷனிலே முறையாகக் கண்காணிக்காமலும், தண்ணீர் கேட்டால் கூடக் கொடுக்காமலும், வெளியே போகவேண்டுமென்று சொல்லும்போது கூட போகக் கூடாது என்று சொல்லி அங்கேயே போய்க்கொண்டு அவர்களெல்லாம் நாற்றத்தில் இருந்திருக்கிறார்கள். ஒன்றும் இல்லாத இடத்தில் இந்த கதி—கொஞ்சம் லேசான தடியடி நடந்திருகிறது, அதைத்தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. இத்தனைகளும் கிருத்துவக் கல்லூரி இருக்கிற இடம். பெருந்தன்மையாக எதிர்ப்பை காலேஜுக்குள் தெரிவித்துக் கொண்டிருந்தார்களே தவிர வெளியே வரவில்லை. ஸ்டேஷனில் ஏதோ நடந்திருக்கலாம். அன்றைக்கு ஸ்டேஷனுக்கு தாம்பரம் பொது மக்கள் செல்லவே இல்லை. கல்லூரி மாணவர்களும் விடுதிக்குள் இருந்தார்கள். இப்படிப்பட்ட நிலையில் எல்லோரையும் சித்திரவதை செய்கிற அளவுக்கு வேலைக்குப் போகின்றவர்களையெல்லாம் பிடித்து அடித்திருக்கிறார்கள். "நான்

ரயில்வேயில் வேலை செய்கிறேன்" என்று கார்டைக் காட்டினாலும் பிடித்து உள்ளே தள்ளினார்கள். "ஐயா, நான் இந்த இடத்தில் வேலை செய்கிறேன்" என்று அடையாள அட்டையைக் காட்டினாலும் கூட அதை எடுத்துக்கொள்ளாமல் போலீஸார் அடித்திருக்கிறார்கள். தாம்பரத்திற்கென்று ஒரு ஆர். டி. ஓ.-வை வைத்தாவது விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் மத்திய சர்க்காரில் இருக்கிற ஊழியர்களுக்கும் நம் மாநிலத்தில் இருக்கிற ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுகிறபடி சரிசமமாக் இல்லை. என். ஜீ. ஓ.-க்களுக்கு மேலும் நல்ல ஆர்வத்தோடு நாட்டுப் பணியினை செய்ய அவர்களுக்கு மத்திய சர்க்கார் ஊழியர்கள் பெறுகிற அளவுக்குப் படியினை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கோரி இருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். ஒரு வாரமாக, சட்ட மன்றத்திலே பட்ஜெட் விவாதத்தின் போதும், மான்யக் கோரிக்கை ஆகிய இன்றும் கடந்த மாதத்திலே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கு குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பொறுத்த வரையிலும் கூட அதற்கு எதிர்க்கட்சியிலே அதிக முக்கியத்துவம் கொடுத்து அதைப் பற்றிப் பேசவில்லை. கடந்த நிகழ்ச்சியிலே முதல் அமைச்சர் அவர்கள் பேரிலே எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள் பல குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். பலர் ஏளனமாகக் கூட முதல் அமைச்சரைப் பற்றிப் பேசினார்கள். முதல் அமைச்சர்தான் இத்தனைக்கும் காரணம் என்று குற்றம் சாட்டினார்கள். நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக பதில் கொடுத்தார்கள். இன்றைக்கும்
10-00 a. m. ஆரம்பத்திலே புலவர் கோவிந்தன் அவர்கள் கண்டித்தார்கள். ஆரம்பத்திலே அவர் ஒன்றை விளக்கமாகச் சொன்னார்கள். தேன் கூட்டிலே கல்லை விட்டு அடித்தால் தேனீ கொட்டும் என்று அழுத்தமாகச் சொன்னார். கொட்டும், வாஸ்தவம் தான். ஆனால் தேன் கூட்டில் கல்லை விட்டு அடித்தவர் யார் என்று அவர் சிந்திக்கவில்லை என்று நான் எண்ணம் கொள்கிறேன். தேன் கூட்டில் தி.மு.க. கட்சிக்காரர்கள் கல்லை விட்டு அடித்து, தேனை வெளியே சிதற விட்டதனால் ரோடில் போகக்கூடிய அப்பாவி மக்களைத் தேனீக்கள் கொட்டியதை நாம் பார்க்கிறோம். நன்றாக தேன் கூட்டைக் கட்டிக்கொண்டு, நல்ல தேனை சேகரித்துக்கொடிருக்கக் கூடிய நேரத்தில் வழிப் போக்கன் ஒருவன் தேன் கூட்டில் கல்லை விட்டு எறிந்ததால் ரோடில் போகக்கூடிய அப்பாவி மக்களையெல்லாம் தேனீக்கள் கொட்டியிருக்கிறது என்பதை, தங்கள் கட்சி செய்த குற்றத்தை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் தி.மு.க. கட்சி அல்லாது வேறு அரசியல் கட்சிகளில் ஒரு சிலரும் இருக்கலாம். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தான், அதிலும் முக்கியமான பொறுப்பு தி.மு.க. காரர்களுக்குத் தான் உண்டு என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கைது செய்யப்பட்டவர்கள் யார்? அந்த நிகழ்ச்சிகளில் கைது செய்யப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அங்கத்தினர்கள் என்று குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் இருந்து பார்க்கும் பொழுது, கலவரத்தை தூண்டிவிட்டு, பிறகு அதிலிருந்து வரக்கூடிய சம்பவங்களையெல்லாம் எடுத்து முதல் அமைச்சர் அவர்கள் தலையிலே போட்டு, எப்படியாவது ஏதாவது ஒரு வகையிலே மந்திரி சபையின் மீது வெறுப்பு ஏற்படுத்திவிட வேண்டும் என்ற ஒரே நோக்கம் அல்லாது, வேறு என்ன நோக்கம் இருக்கும் என்பதைப் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைத்து, அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில்



இந்த நாட்டிலே உள்ள எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் அரசாட்சி சுமுகமாக நடைபெறுகிறது, திட்டங்களை நன்றாகச் செய்திருக்கிறார்கள். திட்ட காலத்திற்கு முன்பாகவே திட்டங்களை நிறைவேற்றிய பெருமை தமிழகத்திற்கு இருக்கிறது என்று நம்முடைய பாரத மக்கள் மட்டுமல்ல, அயல் நாடுகளிலிருந்து வந்திருப்பவர்கள் கூடச் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் அது எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சற்று பொறாமையாகத் தான் இருக்கும். அந்தப் பொறாமையினால், என்ன செய்வது, இவர்களை எப்படி கவிழ்ப்பது, எந்தத் தேர்தல் வந்தாலும் காங்கிரஸ்காரர்கள் அதிகமாக வந்து விடுகிறார்களே, வேறு எதிர்க்கட்சியினர் வருவதற்கு முடியாமல் போகிறதே, பலமான எதிர்க்கட்சியாக வருவதற்கு லாயக்கு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறதே, இதற்கு என்ன செய்தால் முடியும் என்று ஒரு சதியை உருவாக்கினார்கள். இன்றைக்கு, நேற்றைக்கு செய்த சதியல்ல இது. 26-ம் தேதி நடந்த சதியல்ல இது. இதற்கு முன்பே திட்டமிட்டுப் பார்த்தார்கள். திராவிட நாடு பிரியவேண்டும் என்று மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி எப்படியாவது திராவிட நாடு என்று மொழி அடிப்படையில் பிரித்து விடலாமா என்று பார்த்தார்கள். அதற்கு முடியவில்லை. அதற்கு நாம் வழியும் விடவில்லை. திராவிட நாடு என்று கேட்டால் உங்களைக் கம்பி எண்ண வைப்போம் என்று சட்டம் செய்யப்பட்டது. இந்தச் சட்டம் வந்தபிறகு, பயந்துகொண்டு, பெருமையுடன் இந்தக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம் என்று ஒரே வார்த்தையில் சொல்லி மக்களை ஏமாற்றி விட்டார்கள். எதை வைத்து மக்களிடம் வோட்டு கேட்பது, திராவிட நாடு வாங்கிக் கொடுக்கிறோம் என்று கேட்க முடியாது, முடியவில்லை. அதற்காக ஒரு சதியை உருவாக்கினார்கள். எப்படியாவது மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கு வேறு என்ன வழி இருக்கிறது, காங்கிரஸ்காரர்கள் பேரில் வெறுப்பு ஏற்படுத்துவதற்கு என்ன வழி இருக்கிறது என்று எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் 24-ம் தேதி நடந்தது பற்றிச் சொன்னார்கள். ஒரு இடத்தில் ஒன்று கூடி திட்டத்தை உருவாக்கி யிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். திருச்சியில் நடந்த மொழிப் பிரச்சினை சம்பந்தமான மகாநாடு இந்தச் சதி திட்டத்தை உருவாக்கியது. இதில் பங்கு கொள்வது, முன் நின்று செய்வது யார் என்று தான் இவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு. சுதந்திரா கட்சி முன்னின்று நடத்துவதா, திராவிட முன்னேற்றக் கழகம் முன்னின்று நடத்துவதா என்ற சர்ச்சை ஏற்பட்டு, எப்படியாவது, தி.மு.க. முன்னின்று நடத்தி பெயரை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, காங்கிரஸ்காரர்கள் மீது வெறுப்பு ஏற்படுத்தவேண்டும் என்று கருதி, இந்தச் சதி திட்டத்தில் தி.மு.க. ஈடுபட்டது என்பதைப் பற்றி இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்த அளவிலே செய்துவிட்டு, இந்த நிலையிலே முதல் அமைச்சர் அவர்கள் பேரில் மாணவர்களை அவர் சந்திக்கவில்லை, மாணவர்களைச் சந்தித்து இருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்ற ஒரு குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். அவர்கள் கோட்டையில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டும் கூட, மாணவர்களை அவர் சந்திக்கவில்லை, சந்தித்து இருந்தால் கலவரம் ஒன்றும் நடந்திருக்காது என்ற ஒரு நிலையை மக்களிடத்திலே சொல்லிக்கொண்டு, முதல் அமைச்சர் அவர்கள் பேரில் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுத்தக்கூடிய முறையில் இவர்கள் செய்தார்கள் என்று தான் சொல்ல வேண்டுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் தனியாக நின்று, ஒரு போராட்டத்தை நடத்தி, மந்திரி சபையைக் கவிழ்த்து, காங்கிரஸ்காரர்கள் பேரில் வெறுப்பு உண்டாக்கிவிடலாம் என்பது தான் எண்ணம். தமிழகத்தில் எத்தனையோ போராட்டம் நடத்தினார்கள். விலைவாசிப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் எல்லாம் செய்து பார்த்தார்கள். இவ்வளவு போராட்டங்களையும் நடத்திப் பார்த்து விட்டார்கள். ஆனால் ஆட்டம் கண்டு விட்டது. ஆட்டம் கண்ட பிறகு நாம் என்ன செய்யவேண்டும் என்று யோசித்து, மாணவர்களை எப்படி

யாவது தூண்டி விட்டு, எதிர்க்கட்சியினர் நேராக கலந்து கொண்டால், முதல் அமைச்சர் அவர்கள் தைரியமாக எதிர்க் கட்சியினரை நசுக்கி விடுவார்கள் என்று கருதி, மாணவர்களை என்ன செய்ய முடியும் என்று எண்ணி, மாணவர்கள் போர்வையிலே நுழைந்து கொண்டு எப்படியாவது மந்திரி சபையைக் கவிழ்த்துவிடலாம் என்பதாக மாணவர்களைக் கூப்பிட்டு, மாணவர்களிடம் சொல்லி, "நீங்கள் இதைச் செய்யுங்கள், உங்களுக்குப் பின்னாலே சமூக விரோதக் கும்பலை உங்களுக்குத் துணையாக அனுப்பு கிறோம். ஆகையினால் நீங்கள் பயப்படவேண்டியதில்லை" என்று அவர்கள் தூண்டிவிட்ட காரணத்தினால் தான் இந்தச் செயல்களெல்லாம் இந்தத் தமிழகத்தில் ஏற்பட்டது என்று நன்றாகக் கூற முடியும்.

காங்கிரஸ்காரர்கள் வெளியிலே வருவதற்கு முடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்று சொல்லுவதற்கு நான் பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். எதிரில் வரக்கூடியவர்கள், நம்முடைய பிள்ளைகள், நம்முடைய சகோதரர்கள், பள்ளிகளில் படிக்கிறவர்கள், உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிறவர்கள், 14, 15 வயதுள்ள மாணவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது ஒரு கல்லை எடுத்து வீசினால் நாம் என்ன செய்யவேண்டும் என்று திகைத்துக் கொண்டு நாங்கள் பேசாமல் இருந்தோம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து எங்களுக்கு ஏதாவது கட்டளை வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஒன்றும் வரவில்லை. அவர் என்ன பார்த்தார், என்ன கட்டளை இடுவது இந்தக் குழந்தைகளுக்கு நாம், என்னுடைய கட்சிக்காரர்களுக்குக் கட்டளை என்ன சொல்லுவது, நான் பார்த்துக்கொள்கிறேன். கோட்டையிலே ஊன்றி நின்று எப்படியாவது சமாளித்து விடலாம் என்று இருந்து விட்டார்கள். ஒரு அரசியல் கட்சி என்று சொல்லி, கிளர்ச்சி செய்ய தைரியம் இருந்தால், நேர்மை இருந்தால், கொள்கை இருந்தால், எங்களோடு நேருக்கு நேராகப் போரிட வேண்டும். நேருக்கு நேராக நின்று தி.மு.க.வினர் இதைச் செய்கிறோம், காங்கிரஸ்காரர்களை அடக்கிவிடுகிறோம் என்று உணர்த்தியிருந்தால், நாங்களும் திருப்பிப் பார்த்துக் கொள்வதற்கு எங்களுக்கும் சக்தி இருக்கும். நாங்கள் அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் தான். வெள்ளைக்காரர்களை நாட்டை விட்டு வெளியேற்றினவர்கள் தான். வெள்ளைக்காரர்களுக்கு அடி பணிந்தவர்கள் அல்ல. காளான் பூத்த மாதிரி உதயமான கட்சிகள் எங்களைப் பார்த்து வெளியே வரக்கூடாமல் செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். மாணவர்களைத் தூண்டிவிட்டுச் செய்த காரியம் தான் இது. மேற்கொண்டு எதிர்காலத்தில் இம்மாதிரி சம்பவங்கள் நடந்தால் என்ன செய்வது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். மதிப்பிற்குரிய திரு. முனு ஆதி அவர்கள் ரிமாண்டில் இருக்கும்பொழுது தண்ணீர் கூடக் கொடுக்கவில்லை என்று வேதனையோடு சொன்னார்கள். திரு.முனு ஆதி அவர்களுக்கு நெஞ்சு எப்படி வெந்திருக்கிறது என்பதை இன்றைக்குப் பார்த்தேன். ரிமாண்டில் இருப்பவருக்குந் தண்ணீர் கொடுக்கவில்லை என்று சொன்னார். நான் ஒன்று திருப்பிக் கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு சப் இன்ஸ்பெக்டர் கால், கை வெந்து போய்விட்டது, வெந்த நிலையிலே அவர் தாகத்திற்குத் தண்ணீர் என்று கதறுகிறார். அவருடைய வாயிலே பெட்ரோலை ஊற்றித் தீயை வைத்துக் கொளுத்தினார்கள் பாதகர்கள். (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி : அதற்காகத்தான் எம். எல். ஏக்கு தண்ணீர் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறீர்களா). திரு முனு ஆதி சொன்னதைப் பற்றி சொல்லுகிறேன். அந்த சப் இன்ஸ்பெக்டருடைய மனைவி, பிள்ளைகள் என்ன நினைத்திருப்பார்கள் ? அந்த அம்மையார் என்ன நினைத்திருப்பார், 'ஐயோ என்னுடைய கணவர் தாகசாந்திக்கு தண்ணீர் கேட்டாரா, பெட்ரோலை ஊற்றி தீ வைத்தார்களே பாதகர்கள்" என்று அந்த அம்மையார் நினைக்கமாட்டார்களா ? அந்த அம்மையார் பீதியடைந்த மனத்துடன் தூண்டிவிட்ட எதிர்க்கட்சியை பற்றி நினைத்தால் இவர்கள் என்ன ஆவார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா ? தமிழகத்திலே நடக்கக்கூடாதது நடந்து விட்டது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து விட்டு இங்கு வந்து இரண்டு புலவர்கள் குறளையும் மற்றதையும் சொல்வதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. (மணி யடிக்கப்பட்டது) தமிழகத்தின் பெருமை, பண்பு எல்லாம் பறந்து போய்





விட்டது. 26-ம் தேதிக்குப் பிறகு தமிழகத்தின் மானமும் மரியாதையும் பறந்து போய் வடக்கே இருப்பவர்கள் சிரிக்கும் அளவில் தான் நிலைமைகள் ஏற்பட்டன. இதற்கெல்லாம் காரணம் யார் என்று பார்த்தால், இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் தான் என்பது தெரியவரும். என்றைக்கும் நடக்காத நிகழ்ச்சிகள், வரலாற்றிலேயே நடைபெற்றிராத நிகழ்ச்சி, தமிழருக்கும் தமிழருக்கும் பூசல் ஏற்பட்டு, அடித்துக்கொள்ளும், சாகடித்துக்கொள்ளும் நிலைமை கேவலமாக ஏற்பட்டதற்குக் காரணம் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் முதல் அமைச்சர் அவர்களை கோவிலுக்குப் போ என்று சொன்னார்கள். கோவிலுக்குப் போவார். அதற்கும் அவர்களே பதில் சொல்லி விட்டார்கள். கோவிலைப் பற்றி, இவ்வளவு தீக்கொளுத்திய பிறகாவது ஆண்டவன் நினைப்பு நம்பிக்கை அவர்களுக்கு வந்ததற்கு மகிழ்ந்து ஆண்டவன் அவர்களுக்கு இன்னும் நல்ல புத்தி கொடுக்கட்டும் என்று வேண்டுகிறேன்.

திருச்சி மாநாட்டிற்குப் பிறகு எதிர்க்கடசிக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பேசினார்கள். "சபாஷ்" என்றார்கள் மாணவர்கள் செயல்களைப் பார்த்து. அப்படி சபாஷ் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள், எது வரையிலும், 12-ம் தேதி வரையிலும். ஆனால் அதுவரை ஒரு அரசியல் கட்சியும் இந்த வன்செயல்களைக் கண்டிக்கவில்லை.. மாணவர்களோடு வேறு சமூக விரோதிகளும் சேர்ந்துகொண்டு விட்டார்கள் அதன் பிறகு என்னவாயிற்று ? பல தீங்குகளும் இழைக்கப்பட்ட பிறகு, எங்கும் தீயை மூட்டி எரியவிட்ட பிறகு, வன் செயல்களைக் கண்டிக்கிறேன் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னார் என்று பெருமையாகப் பேசுகிறார்கள். இதில் என்ன அர்த்தம் இருக்கிறது. குழந்தையையும் கிள்ளுவது, தொட்டிலையும் ஆட்டுவது என்பது போலத்தான் இருக்கிறது. 26-ம் தேதி வரை குழந்தையைக் கிள்ளி விட்டு விட்டு அதன் பிறகு ஒரு மாதங்கழித்து, இப்பொழுது 20-ம் தேதி மாணவர்களெல்லாம் வன்செயல்களைச் செய்ததைக் கண்டிக்கிறேன் என்று சொல்லுவது எவ்வளவு பொருத்தம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுதந்திராக் கட்சி திருச்சி மாநாட்டில் இப்படித் தூண்டி விட்டு விட்டு, இன்று சொல்கிறார்கள் வன்செயல்கள் செய்யக்கூடாது என்று. இந்த ஹெர்குலிஸ் போய் பம்பாயில் அவர்கள் கட்சி மகாநாட்டில், அவர்களுடைய கட்சி காரியக் கமிட்டி கூட்டத்தில், ஹிந்தி வரக்கூடாது, ஆட்சி மொழியாகக் கூடாது என்று ஹெர்குலிஸாக இருந்தால் சொல்லியிருக்க வேண்டும். நான் சொல்லுவேன், இது ஹெர்குலிஸ் அல்ல, ஹென், பெட்டைக்கோழி என்று. ஹெர்குலிஸ் என்று சொன்னால் தைரியமாக ஒரு வார்த்தை அங்கே ஏன் சொல்லவில்லை என்பதைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

இனி முடித்து விடுகிறேன். அதே மாதிரிப் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒரு சட்ட மன்ற உறுப்பினர் வீட்டில் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால்..........

**திரு. செ. மாதவன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இது கோர்ட்டில் இருக்கும் விஷயம்.

**கனம் உதவி சபாநாயகர் :** அதைப் பற்றிய விவரங்கள் கோர்ட்டில் இருப்பதால் கனம் அங்கத்தினர் அதைப் பற்றிக் குறிப்பிடக்கூடாது என்று தெரிவிக்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அதற்காகத்தான் நான் யார் பெயரையும் குறிப்பிடவில்லை..................

**திரு. ப. உ. சண்முகம் :** அதனால் தான் கூடாது. அது தப்பு.

[9th March 1965

**திரு. ஜே. மாதா கவுடர் :** நான் யார் பெயரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. லைசென்ஸ் இல்லாமல் வைத்திருந்த துப்பாக்கி வெஸ்ட் ஜெர்மனியிலிருந்து வந்திருக்கிறது என்று சொன்னால்..............

SRI V. KRISHNAMOORTHY: On a point of order, Sir. The case is pending in Court. The hon. Member is going beyond his limits. May I request you, Sir, to instruct the hon. Member to abstain from making reference to that ?

**திரு. ஜே. மாதா கவுடர் :** நான் ஒருவரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத் தான் சொல்லுகிறேன். லைசென்ஸ் இல்லாத வெஸ்ட் ஜெர்மனித் துப்பாக்கி இருக்கிறது என்றால், அவர்களுக்கும் சைனாக்காரர்களுக்கும் உறவு இருக்கிறதோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

பாரத நாட்டிலே, தமிழ் நாட்டிலே எதிர் காலத்திலே மக்கள் நன்றாக, செம்மையாக நடக்கவேண்டும் என்று சொன்னால், சமூக விரோதக் கட்சிகளை, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சட்டவிரோதமான கட்சி என்று தடை செய்து விட்டால், இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் ஏற்படாது என்று சொல்ல விரும்புகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினருடைய நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஒரே ஒரு வார்த்தை என் மாவட்டத்தைப் பற்றி. இரவு இரண்டு மணிக்கு காந்தி மகான் சிலையை இடித்துத் தள்ளிவிட்டார்கள். இவர்கள் காந்தி மகானைப் பற்றி மேடையில் பேசுகிறார்கள். காந்தி மகானின் பெருமை யாருக்குத் தெரியாது ? சிறு குழந்தைகளுக்குக்கூட காந்தியார் பற்றி நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட மகானின் சிலையை இடித்து விட்டார்கள். இதை மாணவர்களா செய்தார்கள் ? இல்லை. அரசியல் கட்சி, குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கட்சி தான் என்று குற்றம் சாட்டிக்கொண்டு, முடிக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஸார், 'அவர்களுக்கும் சைனாக்காரர்களுக்கும் உறவு இருக்கிறதோ என்று சந்தேகப்படுவதாக" கனம் மாதா கவுடர் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அது மிகவும் வருந்தத்தக்க செய்தி. எங்களுக்கும், சீனாக்காரர்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. அங்கத்தினர் ஏதாவது ஸ்பெஸிஃபிக் ஆகச் சொன்னால், அதற்குக் கட்டுப்படுகிறோம்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் (மாதா கவுடர்) ஒரு குறிப்பிட்ட கட்சியைப் பற்றிப் சொல்லவில்லை. அது மாதிரி வெளிநாட்டிலிருந்து வந்த துப்பாக்கி வைத்திருப்பவரைப்பற்றிச் சொன்னார்கள்.

**திரு. ப. உ. சண்முகம் :** 'சைனாக்காரர்களுக்கும் அவர்களுக்கும்" என்று சொன்னார்கள். வெஸ்ட் ஜெர்மனி துப்பாக்கி என்றால், வெஸ்ட் ஜெர்மனிக்கும் சைனாவுக்கும் உறவா ?

**கனம் உதவி சபாநாயகர் :** அதைப்பற்றியெல்லாம் ஒன்றுமில்லை.

**திரு. ப. உ. சண்முகம் :** சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சிக்கும் இடையிலே நடைபெற்று வரும் விவாதத்தைப் பார்க்கும்போது, ஆளும் கட்சி ஹிந்திக்கே போராடுவது போலும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியே கூடாது அதைத் தீர்த்து முடித்தே தீருவோம் என்று இந்த மொழிக் கிளர்ச்சியில் இரண்டு கட்சிகளும் இருப்பதை நாட்டிலே மக்கள் தெரிந்துகொள்வார்கள். ஆனால், முதல் அமைச்சர் நேற்றைய பதிலிலே இந்த மன்றத்திலே ஹிந்தியைப் பற்றி தெளிவாக்கி இருப்பார்களேயானால் நலமாக இருந்திருக்கும். டெல்லிக்குச் சென்ற முதல் அமைச்சர், போகும்போது இருமொழிக் கொள்கையைக் கட்டாயம் வலியுறுத்தி வெற்றி காணப்போவதாக நம்பிக்கையோடு பேசினார்கள். டெல்லிக்குப் போய் சென்னைக்குத் திரும்பிய கனம் தொழில் அமைச்சர் கூட, அங்கே முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. சீக்கிரமே முடிவு ஏற்படும் என்று எதிர் பார்க்கிறேன், என்று பத்திரிகைக்காரர்களிடம் சொன்னதாகப் படித்தேன். ஆனால் இவ்வளவு நாட்கள் ஆகியும், மத்திய சர்க்கார் நாட்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போவதைப் பார்த்தால் உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. அருள் கூர்ந்து, மொழிக் கிளர்ச்சிக்கு, தமிழகத்திற்கு, நியாயம் வழங்க வேண்டும் என்று நம் மாநில சர்க்கார் வடக்கே டெல்லி சர்க்காருக்குச் சொல்லி, சீக்கிரமே பரிகாரம் தேடினால் அன்றிக் குழப்பம் நீடித்தே தீரும் என்பதை நாம் உணரவேண்டும்................



**கனம் உதவி சபாநாயகர் :** அதுவும் நம் சர்க்கார் தானே.

**திரு. ப. உ. சண்முகம் :** டெல்லி சர்க்கார் என்றுதான் சொன்னேன். ஆகவே, அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தேர்தலைப் பற்றி இந்த மானியத்தில் இருக்கிறது. தேர்தல் அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்ற, அவர்களுக்கு சர்க்கார் உத்தரவுகள் கொடுக்கப்படுவதில்லை என்பதற்கு ஒரே ஒரு சான்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். நல்ல முறையில் விளக்கியிருந்தால் பல கேடுபாடுகள் இந்தத் தேர்தலில் ஏற்பட்டிருப்பதற்கு நியாயம் இல்லை. பொதுத்—தேர்தலில் நடைபெறாத சம்பவங்கள் கூட சாதாரண ஊராட்சி மன்றத் தேர்தலில் நடைபெற்றுவிட்டது. ஒரு ஊராட்சி மன்றத் தேர்தலுக்கு மனு தாக்கல் செய்தார்கள். குறிப்பிட்ட வார்டைச் சேர்ந்த ஒருவர் வேறு வார்டிலே நிற்கிறார். எந்த வார்டிலே நிற்கிறாரோ அந்த வார்டைச் சேர்ந்த மக்கள் தான் அவருடைய பெயரைச் பிரேரேபிக்க வேண்டும். ஆனால், அந்த வார்டைச் சேர்ந்த மக்கள் பிரேரேபித்திருந்தும் கூட, தேர்தல் அதிகாரியாக உள்ளவர், 'உன் வாக்காளர் பட்டியல் எந்த வார்டில் இருக்கிறதோ அந்த வார்டு மக்கள் தான் பிரேரேபிக்கவேண்டும்" என்று சொல்லி அபேட்சா பத்திரத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அவசர அவசரமாகத் தேர்தல் அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்து, தேர்தல் முறையைப் பற்றி விளக்கியதன் விளைவாக இவ்வாறு பயங்கரத் தவறுகள் ஏற்பட்டுவிட்டன என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே சட்டமன்றத்தில் நேற்றையதினம் விவாதிக்கப்பட்ட பிரச்சினை இன்னும் கனம் சபாநாயகர் அவர்களால் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. தீர்ப்பைப்பற்றிப் பேசாவிட்டாலும் ஒன்றே ஒன்றை மட்டும் விளக்க விரும்புவது, மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிற, உத்தமபாளையத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் நண்பர் திரு. இராசாங்கம் அவர்களைப் பற்றியதாகும். "அவர் தாக்கப்பாட்டார்" என்று நேற்று இதே மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டபோது, புனித இதயத்தோடு தான் பேசுவதாகச் சொல்லும் முதலமைச்சர் அவர்கள் எழுந்து, 'சட்ட மன்ற உறுப்பினரை மட்டுமல்ல, சாதாரண மனிதனைக்கூட போலீசார் கொடுமைப்படுத்துவது கிடையாது' என்று சொன்னார்கள். அவருடைய மேலான உள்ளத்தை நான் பாராட்டுகிறேன். சாதாரண மனிதனைக்கூட கொடுமைப்படுத்தக்கூடாது என்பது அவருடைய எண்ணம் என்று சொன்னாலும், சட்ட மன்ற உறுப்பினரைக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். இது நாட்டிலே நடந்திருக்கும் செய்தி. நாங்கள் விளக்கிச் சொல்லிய பிறகும் கூட, 'அதற்குப் பரிகாரம் தேடுகிறேன், என்ன என்று விசாரிக்கிறேன்' என்று சொல்வதற்கு மனம் இல்லாமல், "அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. மேற்கொண்டு எதையும் சொல்ல மாட்டேன்" என்று முடித்துவிட்டார்கள். நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். வெளியிலே நடக்கின்றவைகளையும், சர்க்கார் அலுவலகங்களில் செய்யப்படுகிற பல்வேறு தவறுகளையும் எடுத்து, நாங்கள் இந்த மன்றத்தில் தைரியமாக, யாருக்

கும் அச்சப்படாமல் சொல்வதற்கு எங்களுக்குத் துணிவு இருக்கவேண்டுமென்றால், இது போன்ற கொடுமைகள் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது எங்களுக்குத் தான் நடைபெற்றது என்று கருதிவிடவேண்டாம். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ..........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள், 'நேற்று புகார் கூறப்பட்டது, அதைப்பற்றி முதலமைச்சர் அலட்சியம் செய்து புறக்கணித்துவிட்டார்' என்று கூறினார்கள். அதை அப்போதே நான் என்னிடமிருந்த தகவல்களைக் கொண்டு மறுத்தேன். ஆனால், பின்னால், நேற்றிரவு இரண்டு மூன்று முறை தீர விசாரித்ததைக் கொண்டு இப்பொழுது நான் கூறத் தயாராயிருக்கிறேன். கனம் அங்கத்தினர் சொல்லிய புகார் முற்றிலும் தவறு. அம்மாதிரி புகாருக்குக் கொஞ்சம் கூட ஆதாரம் இல்லை என்று நான் கூறத் தயாராயிருக்கிறேன். நேற்றிரவு நான் நன்றாக விசாரித்த பிறகு தான் இதை இப்பொழுது சொல்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதை நான்............

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் அந்தச சட்டசபை உறுப்பினரைச் சிறையிலே நேரில் சந்தித்தேன். அம்மாதிரி............

MR. DEPUTY SPEAKER : There need not be any debate over this matter.

**திரு. ப. உ. சண்முகம் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் தனக்கு வந்திருக்கும் தகவலை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். நேரில் பார்த்துவிட்டு வந்தவர்கள் பேசுகிறார்கள். அவர் அடிப்பட்டது உண்மை. காயம் இருப்பது உண்மை. மத்திய சிறையில் அவர் அடிப்பட்டது உண்மை. நேற்றையதினம் இந்த மன்றத்தில் பேசிய நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், 'இந்த மன்றத்திலே கொண்டு வந்து அவரை நிறுத்துவீர்களா ? போலீஸ் பாதுகாப்போடு அவரைக் கொண்டு வாருங்கள், விடுதலைக் கூடச் செய்யவேண்டாம், கொண்டுவந்து காட்டிவிட்டு, திரும்ப எடுத்துச் செல்லுங்கள்' என்று சொன்னார்கள். அதற்கும் பதில் இல்லை. நேரில் பார்த்துவிட்டு வந்த கனம் உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னார்கள். அதற்கும் பதில் இல்லை. நாங்கள் சொல்லுவது தான் தவறு என்று முதலமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், இதே மன்றத்தில் நேற்றையதினம் பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'எனக்கும் அந்தத் தகவல் தான் வந்தது. அவர் அடிப்பட்டது உண்மை'. என்று அவர்கள் சொன்னார்கள். இதையுமா அலட்சியமாகப் புறக்கணித்து. 'இல்லை' என்ற ஒரே சொல்லை வைத்து, முழுவதையும் மறுப்பதென்றால், இந்த நாட்டில், இந்தத் தமிழகச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வருங்கால சந்ததியாருக்கும் என்ன பாதுகாப்பு தேடப்போகிறீர்கள் ? என்று நான் அவர்களைக் கேட்கின்றேன். தீர விசாரித்துச் சொல்வதாக நமது முதலமைச்சர் கூறுகிறார்கள். ஒரு வேளை அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் தகவல் அதுவாக இருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் நடந்திருப்பது உண்மை. இந்த உண்மையை நாங்கள் இவ்வளவு அழுத்த திருத்தமாகச் சொல்கிறோமோ அதற்காகவேனும் மனமிரங்கி, 'இல்லை, விசாரிக்கிறேன்' 'யாரையாவது அனுப்பி, பார்த்துவிட்டு வரச் சொல்கிறேன்' என்று சொன்னால் மன ஆறுதலாக இருக்கும்.

சட்ட மன்ற உறுப்பினர் நாட்டில் நடப்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் பலன் இல்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நண்பர் கனம் உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். 'என் வீட்டில் கலவரம் என்று முதலமைச்சருக்குத் தொலை



பேசிமூலமாகப் பேசினேன். முதலமைச்சர் அவர்கள் அதற்கு, 'என்னிடம் பேசுகிறீர்களே, போலீசுக்கு போன் செய்யுங்கள்' என்று சொன்னதும், 'போலீசுக்கு போன் செய்தும் போலீஸ் வரவில்லை என்று சொன்னவுடன், அவர் போனை வைத்து விட்டார்கள்' என்று சொன்னார்கள். ஒரு முதலமைச்சர் அவர்கள் ஒரு சட்ட மன்ற உறுப்பினரிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்து அரசியல் கட்சி என்ற முறையில், சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நாங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கின்றோம். அரசியலிலே ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு இருக்கலாம், அரசியல் கருத்து மோதல்கள் இருக்கலாம். இருந்தாலும், அவற்றையெல்லாம் பேசும் இடம் இதுவாக நாம் வைத்துக் கொண்டிருக்கும் காரணத்தால், நாட்டிலே நடைபெற்ற சம்பவங்களை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லலாம். என்றாலும், இங்கே வந்து சொல்வதற்கு முன்பாக, நடந்த சம்பவத்தை முதலமைச்சருக்கு அன்று அவர் தெரிவிக்காமலிருந்திருந்தால், 'அப்போதே என்னிடத்தில் சொல்லியிருக்கக்கூடாதா ?' என்று அவர் ஒருக்கால் கேட்கக் கூடும். அதைக் கருதித்தான் முதலில் நண்பர் திரு. இராஜேந்திரன் அவர்கள் முதலமைச்சருக்குத் தொலைபேசியில் தகவல் கொடுத்தார்கள். அதற்கு, 'என்னிடம் ஏன் சொல்கிறீர்கள், போலீசுக்கு போன் பண்ணுங்கள்' என்று சொல்வதோடு நிறுத்திக்கொள்வதா ? இதை முதலமைச்சர் அவர்கள் சரி என்று கருதுகிறார்களா ? இதை எந்த வகையில் நியாயம் என்று ஒத்துக்கொள்வது என்று எனக்குப் புரியவில்லை.

நண்பர் திரு. இராசாங்கம் அவர்களைப் பற்றிய செய்தி ஒரு புறம் இருக்கட்டும். இதே மன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவராக வீற்றிருந்த திரு. கருணாநிதி அவர்களைப் பாளையங்கோட்டை சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நான் பேசவில்லை. இருந்தாலும் கூட, நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரள கம்யூனிஸ்டுத் தலைவர்களையெல்லாம் உள் துறை அமைச்சர் திரு. நந்தா அவர்கள் பிடித்து அடைத்தார்கள். அடைத்ததற்கு பிறகு, பாராளுமன்றத்திலே, 'ஏன் அடைத்தேன்' என்பதற்கு வெள்ளை அறிக்கை கொண்டுவந்து தாக்கல் செய்தார்கள். நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, தமிழக மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன், கருணாநிதி அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார் என்ற வெள்ளையறிக்கையை இந்த மன்றத்தில் வைக்க அவர் தயாராக இருக்கிறாரா ? அவர் தாயாராக இருந்தால், அத்தகைய வெள்ளையறிக்கையை இந்த மன்றத்தில் வைத்தாக வேண்டும். இந்த மன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார், எத்தகைய கலவரங்களை அவர் தூண்டினார், எதற்காக அவர் கைது செய்யப்பட்டு, நாற்பது பேர்கள் இருக்கவேண்டிய ஹாலில் தனியாக அவர் பூட்டப்பட்டிருக்கிறார் என்பதற்கு வெள்ளையறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் இந்த உரிமை கூட மறுக்கப்பட்டால், குடியரசு ஆட்சி என்று இதை ஒத்துக்கொள்ள எப்படி மனம் வரும் ? இதை அராஜக ஆட்சி என்று சொல்லாமல் நான் வேறு எப்படிச் சொல்வது ? இதை எப்படிக் குடியரசு ஆட்சி என்று சொல்ல முடியும் ? அருள் கூர்ந்து யோசித்துப் பாருங்கள். இந்த மாமன்றத்தின் சட்ட மன்ற உறுப்பினரை ஒரு கேடியைப் பிடிப்பது போல் பிடித்து, எங்கோ பிடித்துச் செல்கிறதைப்போல, லாரியில் 400 மைல் இழுத்துச் சென்று அடைத்து, நெஞ்சு வலி என்று சொன்னதையும் கேட்காமல், லாரியிலே கொண்டு சென்று பயங்கரமாகச் சிறையில் பிடித்து வைத்து விட்டார்கள். அப்படியெல்லாம் செய்ததற்குக் காரணம் என்ன என்று நான் கேட்கிறேன். நீதி மன்றம் என்ன தீர்ப்பு வழங்குமோ, அது பற்றிக் கவலை இல்லை. விடுதலை செய்யலாம் என்றாலும் கவலை இல்லை. சர்க்கார் செய்தது சரி என்றாலும் அதைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால், இப்பொழுது நான் கேட்பது இதுதான். அவர் ஏன் கைது செய்யப்பட்டார் ? அவரைக் கைது செய்ததன் காரணம் என்ன ? அதை

விளக்கி இந்த மன்றத்தில் ஒரு வெள்ளையறிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்கிற கோரிக்கையை மறுப்பதற்கு நியாயமே இல்லை. பாராளுமன்றத்தில் ஒரு முறை அல்ல, இரு முறை உள்துறை அமைச்சர் அத்தகைய வெள்ளையறிக்கைகளைத் தாக்கல் செய்திருக்கிறார். அதுபோல் இங்கே ஏன் வெள்ளையறிக்கை தாக்கல் செய்யக்கூடாது ? வெளிநாட்டு சீனாக்காரனுக்கு உடந்தையாக இருந்ததாக தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்கு ஆட்பட்டவர்களைப் பொறுத்தே கூட, ஏன் கைது செய்தோம் என்ற காரணத்தை வெள்ளையறிக்கை மூலம் விளக்கிவிட்டார்கள் என்றால், கருணாநிதியை கைது செய்ததற்கான காரணத்தைச் சொல்ல ஏன் மறுக்கவேண்டும் ? நான் கேட்பது முதலமைச்சருக்கு வேண்டுமானால் வருத்தமாக இருக்கலாம். ஆனால், கேட்காமல் இருக்கமுடியவில்லை. வெளியே இருக்கிறவர்கள், ஏன் 'கேட்கவில்லை' என்று நிர்ப்பந்திக்கிறார்கள். மனச்சாட்சி குத்துகிறது. எப்படிக் கைது செய்யப்பட்டார், ஏன் கைது செய்யப்பட்டார் என்ற காரணம் எங்களுக்குப் புரியவில்லை. சதி வழக்கிலே அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்று ஆட்சியாளர்கள் கருதினாலும், தயவு செய்து சர்க்காரை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்—இந்த மன்றத்திலே கொண்டுவந்து வைத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர்கள் வெளியே வந்து சுற்றுப் பயணம் செய்து, பொதுக் கூட்டத்தில் பேசுகிறார்கள். அதைக் குற்றம் என்று நான் சொல்லவில்லை. கூட்டத்தைக் கூட்டி, தாராளமாக அதில் கலந்துகொள்ளட்டும். அதை மறுக்கவில்லை. ஆனால், பொறுப்புள்ள மந்திரிமார்கள் வந்து, ஓரிடத்தில் கூட்டம் போட்டுப் பேசும்போது எந்த முறையைக் கையாளவேண்டும் ? மந்திரிகளுடைய தரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காவது தங்களோடு மேடையிலே இருந்து பேசுகிறவர்களைக் கொஞ்சம் அடக்கத்தோடு பேச வைக்கவேண்டும். சமீபத்தில் தலத்துறை அமைச்சர் கனம் திரு. மஜீத் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்தார். சென்னையைவிட்டு அவ்வளவு தூரம் வந்தாரே, என்ன பொன்மொழிகளை உதிர்த்தார் என்று கேட்பதற்கு ஆளை விட்டு 'என்ன பேசினார் என்று கேளுங்கள்' என்று சொன்னேன். மறுநாள் கிடைத்த தகவல் என்ன ? நான் உள்ளபடியே சொல்கிறேன். என்னைத் தாக்கித் திட்டினார் என்பதற்காக அல்ல, அமைச்சர் இருக்கிற கூட்டத்தில் இருந்து ஒருவர் அப்படிப் பேசிவிட்டாரே என்று நான் வருத்தப்பட்டேன். அமைச்சர் கலந்துக்கொண்டிருக்கக்கூடிய கூட்டத்தில் இப்படியெல்லாம் பேச விடுகிறார்களே, ஒரு அமைச்சர் இருக்கிற ஒரு இடத்தில் இப்படியெல்லாம பேச அனுமதித்தால், உள்ளபடியே ஜனநாயகத்தை எப்படி இவர்கள் வளர்க்கிறவர்கள் ஆவார்கள் என்று எனக்குப் புரிய
10-30 a.m. வில்லை. 'தரம், தரம், தரம்' என்கிறார்களே, அந்தத் தரம் எங்களுக்கு மட்டும் அல்ல. முதலமைச்சரோடு இருக்கும் சகாக்களுக்கும் இருக்க வேண்டும், அருள் கூர்ந்து அந்தத் தரத்தை அவர்களுக்கும் எடை போட்டுக் காட்டுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல மாநில நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற கவர்னர் அவர்கள் இந்த மாநிலத்தின் தலைமைப் பதவியை ஏற்கிறார். அவர்கள் அரசியல் கட்சிக்கு வேறுபட்டவராக இருந்தாலும் நிர்வாகத்தின் மூலம் அரசியல் தொடர்பு கொண்டவராகவும் இருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே கவர்னர் பதவிக்கு தக்கவரை தேர்ந்தெடுக்கும்போது உயர்நீதி மன்றத்தில் உள்ளவர்களை நிரந்தரமாக இங்கே கொண்டு வருவதன் மூலம் உயர்நீதி மன்றத்தில் அரசியல் உணர்வு புகுந்து கொள்வதற்குத் தயவு செயது இடமளிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை இங்கே இழுத்து வந்து நியமனம் செய்துவிடாதீர்கள். உயர்நீதி மன்றத்தை அரசியல் உணர்வுக்கு இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* Sri S. NANJUNDA ROW : Mr. Deputy Speaker, Sir, to-day three Demands have been moved by the Hon. the Chief Minister and cut motions have also been moved by the hon. Members of the Opposition. I wish to speak on all the Demands, but I do not





want to spend my time in making political accusations. Yesterday the Hon. the Chief Minister has replied in such a bold and straightforward way that I wish to take the opportunity now to thank him for the great essay in 'Peruasion and Political diplomacy'. I should not call it as political diplomacy but should call it as 'political straightforwardness'. The Hon. Chief Minister was trying to convince the people as also the hon. Members of the Opposition who refuse to be convinced. When hon. Members refuse to be convinced, I do not wish to say anything more against the cut motions. The cut motions have no value at all. The hon. Members on the Opposite side are repeating what they have stated during the general discussion on Budget speech here. I oppose the cut motions and in support of the Demands I wish to say a few words.

As regards Demand No. VI—State Legislature, I wish to say a few words about our Library which is intended for the use of the legislators. Of course, a new building is going to be constructed for the Dibrary and a new hostel is also going to be constructed. But till that comes into being, I request the Legislature Department to improve the facilities in the Library. There should be more natural light. Of course, electric lights are there, but natural light is also necessary. Free air is also necessary. Now no one feels like going and spending some time there reading books, etc. If we want any reference books or records, it takes about an hour to take that book because of the inadequate staff there. The staff should be increased. The Watch and Ward staff, who are deputed here by the Police Department, get very low rates of daily allowance. They have to put on a neat white dress. I request the Legislature Department or the Police Department to give a little more daily remuneration to them.

Then I wish to make another request on behalf of the legislators. So far as the Members of Parliament are concerned, they have free Railway passes to go anywhere. I am not pleading for that. I feel that our correspondence with Government offices—I am not speaking of our correspondence with the public—may be made free. We are getting very good envelopes from the Assembly Department. The communications from the Legislature Department are sent to us now in very good envelopes consistent with our respectability. I congratulate the Legislature Department for that. Such envelopes may be given to us free of cost and the Postal Department should not insist on affixing any postage stamps for communications sent by us to Government and Government offices. I am making this request only in respect of our correspondence with Government offices and not the public.

I wish to make another request. It is a new request. Our great Prime Minister Mr. Nehru passed away on the 27th May 1964. The first anniversary is going to come on the 27th May 1965. How to celebrate it? I have thought over it and I wish to say that on that day our Legislature must meet and we should all solemnly dedicate ourselves for strengthening our democracy because

[Sri S. Nanjunda Row] [9th March 1965

without him, there would not be this democracy. It should be observed as a 'day of democracy'. Of course, 15th August is observed as 'Independence Day' and 26th January is observed as 'Republic Day'. But on those days, the Legislatures do not meet. But my request is that on Nehru's Death Anniversary Day, the Parliament, the State Legislative Assemblies and the Legislative Councils should all meet and we must all dedicate ourselves for strengthening the cause of democracy. I request our State Legislature to convince the Legislatures all over India and also the Parliament and celebrate this memorable day.

I want to make another request. We, the Legislators and Members of Parliament, elect the President of our Indian Union, who is the Head of the State. The President is not only the Head of the State so far as the executive is concerned but he is the Head even so far as democracy is concerned. Whenever a new President is elected and installed it is an occasion like the King's or Queen's Coronation Day. In the same way, whenever a new President assumes office, I request that the Government of India may be pleased to send invitations to all the legislators who have elected him. After all, there will be about 3,000 legislators all over India and at least once in five years they must have an opportunity to go to the seat of the Government and participate in that function. In the interests of democracy and the oneness of our country, this is a good suggestion which I am making and I hope that our Legislatures will press for this. We should be officially invited and our travelling allowance for the journey must be paid. I also request that like the Commonwealth Parliamentary Association, an All-India Legislators' Association may be formed. Immediately after participating in the inauguration function of the President, we can participate in the meeting of the All-India Legislators' Association and we should all reaffirm our faith in democracy and discuss how we can strengthen our democracy. There is the question of the privilege of the Legislatures and the Supreme Court. It would give an opportunity for all the members of the Legislatures all over India to meet once in five years and discuss these matters I therefore request our Government and the Legislature to take steps to form an All-India Legislators' Association. I also reiterate my request that invitations might be extended officially to all the legislators for the President's inaugural ceremony.

As regards the Demand relating to Elections, I wish to state that the de-limitation of Constituencies is going on. Some new areas will be added to each Constituency and old familiar areas will be going away. In this context I wish to make a request to the Election Department that the preparation of the voters list may be done quickly and efficiently and that applications for inclusion in the voters lists may be made freely available to Panchayats and Village Officers. I also feel that all the elections—the Municipal elections, the Panchayat elections and the General Elections—should be under the control of one Department. I do not know what the present arrangement is. I am suggesting this because



9th March 1965] [Sri S. Nanjunda Row]

all the unnecessary Writs regarding Panchayat elections could have been avoided. The Election Department should have control over all the elections. I am making this request in the interest of the efficient conduct of elections.

As regards the Demand relating to the Head of State, I wish to make a request. Whenever a new Governor assumes charge of his office, the Members of the Legislature should be officially invited, and they should be paid travelling allowance for that. That is a very important occasion for all the Members of the Legislature, as the Governor is the Head of our State. Further, the Governor should be pleased to tour all the constituencies. He can tour two or three constituencies in one day. There may be about 240 constituencies under the new delimitation and the Governor can cover them in about seventy or eighty days. The Head of the State is the representative of the President of India. So he must be easily seen by all the peace-loving and democracy-loving people in the State. The Governor's visit to each constituency will be very much appreciated by all the common people in the village side.

In this connection, I wish to make another representation. During the general discussion on the Budget, I congratulated the Government on their giving additional dearness allowance to not only the Non-gazetted Officers but also the Gazetted Officers. The Gazetted Officers also are happy that they too are getting the dearness allowance. There is a Tamil saying 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்'. In that way, they too feel that along with the non-gazetted officers they are also getting a little more money. So, everbody is happy. They feel, however, that so far as Madras city is concerned, the house rent allowance at present given is very inadequate. But, I am not saying that more house rent allowance should be given. I only request that more houses should be constructed and let out to the non-gazetted officers on liberal conditions.

Another way in which we can help the non-gazetted officers is this. At present, cheap season tickets are issued by the railways at concessional rates. This is beneficial to those who travel by train. The same concession may be extended to travel by bus also. No doubt, season tickets are issued in buses also. I only request that in the case of N.G.Os. the tickets may be issued at a little more reduced rates.

As for the cutting of red-tapism, requests have been made both by the members belonging to the Opposition parties and also by those belonging to the ruling party that steps should be taken to cut red-tapism.

I wish to remind the House of the great, last, and open Will of the late Prime Minister, Sri Jawaharlal Nehru. It is an instruction so to say to the bureaucracy to wipe out red-tapism and

[Sri S. Nanjunda Row] 9th March 1965

delay. These are the lines of the famous verse of the American Poet Robert Frost which were written in his own hand and kept before him (Sri Nehru) always :—

> " The Woods are lovely, dark and deep,
> But, I have promises to keep,
> And I have miles to go before I sleep,
> And I have miles to go before I sleep ".

I am not explaining the philosophical theme behind these lines. In my view, it only lays emphasis on the practical aspect, viz., that delay must be avoided and every man should do his duty.

There is another great quotation which I wish to make in this context. It is from Edmund Burke (1729-1797), one of the greatest British Parliamentarians. This is what he says :

> " Those who carry on great public schemes must be proof against the most fatiguing delays, the most mortifying disappointments, the most shocking insults, and what is worst of all, the presumptuous judgments of the Ignorant."

It will be seen from the above that both Robert Frost and Edmund Burke had clearly stressed the need for avoiding delay and red-tapism. Thank you, Sir.

*** திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே, எங்களுடைய கட்சியை, நாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறலாமென நினைக்கிறேன்.

முதலாவதாக இந்த மன்றத்தினுடைய தலைவராலும், உதவித் தலைவராலும் இயக்கி வைக்கப்படுகின்ற சட்டசபைக் காரியாலயத்தைப் பாராட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே இருந்து எந்தக் கட்சி அங்கத்தினர்கள் வந்தாலும், அவர்கள் கோருகின்ற புள்ளி விவரங்களையும், மற்றத் தகவல்களையும் பாரபட்சமற்ற முறையிலே நம்முடைய சட்டசபைக் காரியாலயம் கொடுத்து சிறந்த முறையிலே பணிபுரிவதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், இந்த மந்திரிசபையைப்பற்றி, அமைச்சர்களைப்பற்றி, ஹெட்ஸ் ஆப் ஸ்டேட்ஸ் டிமாண்டுகளைப்பற்றிக் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில், நாங்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், 50 சட்ட மன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய கழகத்தார்கள், ஆளும் கட்சியாக வரக் கூடிய எண்ணம் கொண்டவர்கள். ஆகையினால்தான் இந்த அமைச்சர்கள் பேரிலே நாங்கள் காணும் குறைபாடுகளைச் சொல்கிறோம். அவர்களுடைய நோக்கங்கள், அவர்களுடைய கொள்கைகள், அவர்களுடைய முறைகள் ஆகியவைகளைக் கண்டிக்கிறோம் என்பதையெல்லாம் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்கள் பணியாற்றுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினர்களாக இருக்கின்ற 50 பேர்களும், இன்னும் மற்ற மேலே இருக்கின்றவர்களையும் சேர்த்துச்சொல்கிறேன், நாங்கள் இந்த மன்றத்தில் பொறுப்பான எதிர்க்கட்சியாகவும், பண்பாட்டோடு உள்ள எதிர்க்கட்சியாகவும், நல்ல எதிர்க்கட்சியாகவும் பணியாற்றி வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



9th March 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

வெளி மாநிலங்களிலே பார்க்கிறோம். மந்திரிகளின் பேரிலே லஞ்சக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன ; பல குற்றச்சாட்டுகள் வெளி மாநிலங்களிலே உள்ள மந்திரிகளைப்பற்றி வந்திருக்கின்றன. ஆனால், உரிமையோடு சொல்வேன், இந்த மாநிலத்தில் மட்டும்தான் மந்திரிசபையைப் பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநிலத்தில் இந்த மந்திரி லஞ்சம் வாங்கினார், இந்த முறையிலே வாங்கினார் என்ற குறைகளைச் சொல்லாத ஒரு நல்ல பண்பாட்டோடு வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான், இந்தியாவின் சட்டமன்றங்களிலேயே அப்படி இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள முடியும். காரணம் என்ன ? நாங்கள் பொது முறையிலே அவர்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகைகள் காட்டுகிறார்கள் என்று சொல்லலாம் ; கட்சிக்குக்கட்சி உள்ள மாறுபாடான போக்கைக் காட்டாலம் ; மாணவர்களின் பேரிலே கையாண்ட முறையைக் கண்டிக்கலாம் ; ஹிந்தியைப் பற்றி மாணவர்களுக்குள்ள இக்கட்டான நிலையைப் பற்றிக் கூறலாம். நாங்கள் இவ்வளவையும் அரசியல் மட்டத்திலேயே பேச விரும்புகிறோம். கீழ்த்தரமான நிலையில் எங்களால் சொல்ல முடியாதா ? அப்படி நாங்கள் சொல்லாததற்குக் காரணம், நாங்கள் பொறுப்பான எதிர்க்கட்சியாக விளங்குகின்றோம். மேலும் ஆளவேண்டுமென்று நினைக்கின்றோம். எனவே, அந்த நினைப்புக்கு ஆக்கம் தருகின்ற முறையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றுகிறது. நான் அமைச்சர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் விவாதங்களைப் பேசுகின்றபொழுது காரசாரமாகப் பேசுகிறோம் என்பதால் அதை மனதிலே வைத்துக்கொண்டு நாங்கள் அமைச்சர்களைக் காண வருகின்ற சமயத்திலே, உறுப்பினர்கள் அவர்கள் தங்களுடைய தொகுதிகளைப் பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொல்கின்ற சமயத்தில், அவர்களிடம் வேறுபாடாக நடந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதிகளுக்கு வேண்டியவைகளைச் செய்துகொள்ள ஜனநாயகத்திலே நீங்கள் வழிவகுத்துத் தரவேண்டும். பார்லிமெண்டில் உள்ள அங்கத்தினர்களுடன் மத்திய அமைச்சர்கள் பேசுகின்ற மாதிரி—அதைப்பற்றி என்னுடைய கட்சிச் செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் விவரமாகப் பேசுவார்கள்—இங்குள்ள அமைச்சர்களும் நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்குள்ள மந்திரிகள் அப்படி இல்லை. மந்திரிகளுக்குக் கடுதாசி எழுதினால் பதில் உண்டா ? கிடையாது. அதிகாரிகளுக்கு எழுதினால் பதில் வருகிறது. ஆனால் மந்திரிகளுக்குத் தபால் எழுதினால் பதில் கிடையாது. உள்துறை அமைச்சர் திரு கக்கன் அவர்களுக்கு நான் 1962-இல் விண்ணப்பங்கள் கொடுத்தேன். இதுவரை பதில் இல்லை. மந்திரி மஜீத் அவர்களிடமும் கொடுத்தேன். பதில் கிடையாது. அதுபோல் உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எழுதினேன். பதில் கிடையாது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதினால் அவர்களிடமிருந்து பதில் வருகின்றது. நாம் ஒரு நல்ல ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி, அவர்கள் 1967 வரையில் அந்தந்தத் தொகுதிகளுடைய உறுப்பினர்கள்தான். அதாவது ரெப்பிரசென்டேடிவ் தான். அந்தக் கருத்துடன் நாம் செயல்பட்டால் ஜனநாயகம் சீர்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு உதாரணமாக எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அவர்கள் நேரு அவர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நேரு அவர்கள் வளர்த்த ஜனநாயகத்தைப் பேணிக் காக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்று நமது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். நான் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூற விரும்புகிறேன். 1963–லே என்னுடைய தொகுதியிலே இருந்த வெங்கடேசன் என்ற மாணவன் அகில இந்திய மெடிகல் காலேஜில் படிப்பதற்காகச் சென்றான். நான் அவனைப் பார்த்தது கூடக் கிடையாது. அந்த மாணவனின் தந்தைக்கு

50 சென்ட் நிலம் கூடக் கிடையாது. அவர் சாதாரண விவசாயக் கூலி. ஏதோ அந்த மாணவனுடைய புத்திசாலித்தனத்தின் காரணமாக எம்.பி.பி.எஸ். கோர்சில் சேர்ந்து விட்டான். ஏதோ இருந்த சொத்தை விற்று ஆறு மாதம் படிக்க வைத்த பிறகு மேற்கொண்டு படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அவர் எனக்குக் கடிதம் எழுதினார். நான் அந்த மாணவனுக்கு ஏதாவது படிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கோரி ஒரு கடிதம் எழுதி ஹரிஜன நல இலாலகா டைரக்டர் அவர்களிடம் கொடுத்தேன். வெளியிலே போய்ப் படிக்கின்றவர்களுக்கு உதவி ஒன்றும் கொடுப்பதில்லை : இந்த மாகாணத்திலேயே இருந்தால்,நான் உதவி கிடைக்கும் என்று சொல்லிவிட்டார். இதை அந்த வயதான பெரியவரைப் பார்த்துச் சொன்னேன். அவர் மீண்டும் கண்ணீர் வடிக்கிறார். சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே ஏதோ ஒரு முறை ஐம்பதோ நூறோ கொடுக்க முடியுமே தவிர மாதா மாதம் 50 ரூபாய் கொடுப்பது என்றால் என்னால் முடியாது. பிறகு நான் மந்திரி கக்கன் அவர்களைப் பார்த்து அவர்களிடத்தில் நிலைமையை விளக்கினேன். ஏதாவது ஒரு நிதியிலிருந்து அந்த மாணவன் படிப்பதற்கு வழி செய்யுங்கள் என்று கேட்டேன். அவன் படித்து வந்தால் நம்முடைய மாகாணத்திற்குக் கூட நல்ல பெருமை ஏற்படும் என்று கூறினேன். நம்முடைய அமைச்சர் கூட மறுத்து விட்டார். அவர் கை விட்டதற்குப் பிறகு கடைசியாக மார்ச் மாதம் 18-ம் தேதி 1963-ம் ஆண்டில் இங்கிருந்து நான்கு வரி கொண்ட ஒரு கடிதத்தை நம்முடைய பிரதம மந்திரி நேரு அவர்களுக்கு எழுதினேன். 'என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு ஏழைப் பையன் உங்களுடைய தலைநகரிலே படிக்கிறான். அவன் ஏழை. எவ்வளவோ முயற்சி செய்தும் இங்கிருந்து அவனுக்கு உதவி கிடைக்கவில்லை. தயவு செய்து அவனைப் படிக்க வையுங்கள். உங்கள் நிதியிலிருந்து பணம் கொடுங்கள், என்று ஒரே ஒரு கடிதம் தான் எழுதினேன். அவர்களிடமிருந்து வந்த பதிலைப் பார்த்து எனக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது. அதே மாதம் 28-ம் தேதி பதில் வருகிறது. அந்த மாணவன் படிக்கின்றதைப் பார்த்து, அந்தக் கல்லூரி முதல்வரிடம் நிலைமையைக் கேட்டு அறிந்து உடனே தன்னுடைய பிரதம மந்திரி நிதியிலிருந்து 600 ரூபாய்க்கு ஒரு டிராப்ட் அந்தக் கல்லூரி முதல்வருக்கு அனுப்பியிருப்பதோடு, அந்த மாணவன் மேற்கொண்டு படிப்பதற்கு அவன் படிக்கின்ற காலம் பூராவிற்கும் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் பிரதம மந்திரி நிதியிலிருந்து கொடுக்க வகை செய்திருப்பதாகவும் நேரு அவர்களிடமிருந்து பதில் வந்தது. பத்து நாளைக்குள் இந்தப் பதில் வந்தது. நான் எங்கே ? பண்டித நேரு எங்கே ? என்னை யார் என்றே தெரியாது. ஒரு சட்ட மன்ற உறுப்பினர் பிரதம மந்திரிக்கு எழுதுகிறார். பொதுவான காரியத்தைச் சொல்கிறார் என்பதை உணர்ந்து நமது பிரதம மந்திரியவர்கள் எவ்வளவு பொறுப்பாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 600 ரூபாய்க்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா டிராப்டை அனுப்பியதோடு, மாதம் 100 ரூபாய் அவன் படிக்கும் காலம் வரை கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். அந்தத் தன்மை இங்கே இந்த அமைச்சர்களுக்கு இருக்கிறதா ? இந்த அமைச்சர்களுக்கு எழுதுகின்ற கடிதத்திற்கு பதில் கிடைக்கின்ற நிலைமை எங்கே இருக்கிறது ? ஆகவே, பண்டித நேரு அவர்களைப் பற்றிப் பேசி விட்டால் மட்டும் போதாது : அவர் வளர்த்த ஜனநாயகத்தை முறையாகக் காப்பாற்ற, வழிமுறைகளைக் கடைப்பிடிக்க நல்ல முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மந்திரிகள், தொகுதிகளுக்கு வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, காங்கிரஸ் ஆகிய எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் வரும்போது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறார். அந்தமாதிரி அமைச்சர்கள் வரும்போது எங்களைக் கூப்பிடக் கூடாதா ? கனம் பூவராகன் அவர்கள் என்னுடைய தொதிக்கு இதுவரை 50, 60 தடவை வந்திருப்பார். ஆனால் எங்களுக்கு அப்போது ஒரு இன்விடேஷன்கூடக் கிடையாது. இது கேவலமாக இல்லையா ? இதனால் காங்கிரசின் பேரிலே அதிருப்தி வளருமே தவிர, செல்வாக்கா வந்துவிடும்.





**கனம் திரு. பூ. கக்கன் :** நான் பல முறை இவருடைய தொகுதிக்குப் போயிருக்கிறேன். இவர் வந்ததே கிடையாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கொடுக்கின்ற கடுதாசியை நீங்கள் குப்பைக் கூடையில் முதலில் போடாதீர்கள். நம்முடைய அமைச்சர்கள் நல்லவர்கள்தான். அந்த ஃபங்கஷனை நடத்துகிற அதிகாரிகளுக்கோ, கமிஷனர்களுக்கோ 'நீங்களும் வாருங்கள்' என்று கூப்பிடுகிற திறன் கிடையாது. கிருஷ்ணமூர்த்தியைக் கூப்பிட்டால் 'கமிஷனரும் டி.எம்.கே. என்று நினைத்து விடுவார்களோ' என்று பயப்படுகிறார்கள். நான் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கொடுக்கின்ற கடுதாசிகளைக் குப்பைக் கூடையில் போடாதீர்கள் என்று.

இன்னொன்றையும் நான் நம்முடைய அமைச்சர் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன். சமீபத்திலே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அவர்கள் அதைப் பற்றி எழுதிய கருத்துக்களுக்காக அமைச்சர் அவர்கள் பத்திரிகைகளின் மேல் பாய்வது நல்லது அல்ல. வெளி மாநிலங்களில் இது இந்த அமைச்சரவையின் மீது தவறான எண்ணங்களை ஏற்படுத்துகிறது. ஜனநாயகத்தில் பத்திரிகையின் பொறுப்பு என்ன ? 'வாச் டாக் ஆப் டெமாக்ரசி' என்று கூறுவார்கள். அவர்களுக்கு இருப்பது காங்கிரஸ் மந்திரி சபையா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரி சபையா என்று பார்ப்பதில்லை. தனிப்பட்ட முறையில் கனம் பக்தவத்சலம் பேரில் வெறுப்பு, இன்னொருவர் பேரில் ஆசை என்று இல்லை. தமிழ் மக்களின் பொதுவான அபிப்பிராயங்களை அவர்கள் திரட்டிக் கொடுக்கிறார்கள் என்றால் நாம் திருந்துவதற்குப் பதில் அந்தப் பத்திரிகைகளைப் பார்த்துக் கோபப்படுவதில் பயன் இல்லை. அநேகமாக இரண்டு மூன்று பத்திரிகைகளைத் தவிர மற்றப் பத்திரிகைகள் மீதெல்லாம் டி.'.பென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ்படி நடவடிக்கை எடுத்தாகிவிட்டது. இன்னும் இரண்டு மூன்று பத்திரிகைகளைத்தான் விட்டு வைத்திருக்கிறார்கள். கொஞ்ச காலத்திற்குள் பத்திரிகைகள் எல்லாம் ஸ்ட்ரைக் செய்தாலும் செய்யக்கூடும். வேலூர் நகராட்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருக்கிறார். அங்கே மாணவர்களுக்காக அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் போட்டார்கள். போட்டது வெறும் அனுதாபத் தீர்மானந்தான். அனுதாபத் தீர்மானம் போட்டதற்காக வேலூர் நகராட்சியை ஏன் கலைக்கக் கூடாது என்று அரசாங்கத்திலிருந்து கேட்கிறார்கள். இந்த நிகழ்ச்சி தென்னை மரத்தில் தேள் கொட்டினால் புன்னை மரத்தில் நெறி கட்டுமாம் என்று சொல்வதைப் போல் இருக்கிறது. 'சைனாவுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்' என்று தீர்மானம் போட்டார்கள். நாட்டினுடைய பாதுகாப்புக்கு விரோதமாகவா தீர்மானம் போட்டார்கள் ? இந்த மாகாண சர்க்காரிலே போடப்பட்டிருக்கிற பட்ஜெட் பணம் பூராவும் எங்களுக்குத்தான் என்று தீர்மானம் போட்டார்கள் ? ஒரு அனுதாபத் தீர்மானம் போட்டால் 'உங்களுடைய முனிசிபாலிடியைக் கலைக்கப் போகிறேன்' என்று தாக்கீது போகிறது. இந்தச் செயல் மந்திரிகளின் பண்பாட்டையா காட்டுகிறது ? இதில் எல்லாம் நீங்கள் உங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். பண்டித நேருவைப்பற்றிப் பேசிப் பயனில்லை. மாதா கவுடர் காந்தியைப் பற்றிப் பேசுகிறார். நாங்கள் எல்லாம் காந்தியைப் பெரிதும் மதிக்கின்றவர்கள். காந்தியின் படத்தை மேலே மாட்டிவிட்டு கீழே உட்கார்ந்து கள்ளக் கணக்கு எழுதுகிற ஆட்கள் அல்ல நாங்கள். காந்தி பெயரைச் சொல்லி, நேரு பெயரைச் சொல்லி மோசடி செய்கிறவர்கள், திரு. மாதா கவுடர் போன்று நேரு "சாம்பல்" மோசடி செய்தவர்கள் காந்தியைப்பற்றியும் நேருவைப்பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் உங்களைப் பார்த்து லஞ்சம் வாங்குகிறீர்கள் என்று சொல்லவில்லை. அவ்வளவு பண்பாட்டோடு நடந்து கொள்கிறோம். அதே போன்று நீங்களும் நடந்து கொள்ளுங்கள். நாங்களும் லட்சக் கணக்கான மக்களின் பிரிதிநிதிகள்தான். எங்களைத் திடீரென்று இரவு $12\frac{1}{2}$ மணிக்கு வந்து பிடித்துக் கொண்டுபோய் லாக்கப்பில் தள்ளுகிறார்கள். ஏதோ போலீஸ்காரர்களுக்குப் பெட்ரோலைக் கொடுத்தார்கள் என்று கூறினார்கள் ? அப்படி யார் செய்திருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுங்கள். ஆனால் அதற்காக சிறையில் தண்ணீர் கேட்டால்.

கொடுக்க மாட்டோம் என்று எம்.எல்.ஏ.வைப் பழி வாங்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மூன்று மானியக் கோரிக்கைகளையும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகம் பலவித முன்னேற்றங்களுககுப் பேர்போன தமிழகம். தமிழக அரசு நல்ல முறையில் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிய அரசு என்ற பெயரையும் பெற்றிருக்கிறது. நமது இந்தியாவிலே எந்த மாநிலமானாலும், அந்த மாநிலம் தமிழகத்திலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் முறையைப் பார்தது அந்த முறையில் தங்களுடைய மாநிலங்களிலும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கூறப்படுகிற அளவுக்கு நம்முடைய அரசு செயலாற்றி வந்திருக்கிறது. நம்முடைய அமைச்சர்களைச் சந்தித்து இங்கே திட்டங்களை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்பதை அறிநது செல்வதற்காக தூதுகோஷ்டிகள்
11-00 a.m. எல்லாம் இந்தத் தமிழகத்திற்கு வருகிறார்கள். ஆகவே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தமிழக அமைச்சரவை எவ்வளவு திறமையுடன தமிழ் நாட்டில் செயலாற்றிக்கொண்டு வந்திருககிறது என்பதைத்தான் நாம் உணர முடிகிறது. தமிழ் நாட்டில் ஒரு உறுதியான மந்திரிசபை, நிலையான மந்திரிசபை இருப்பதால் அந்த நிலையான இடத்திற்குச் சென்று தொழில்கள் ஆரம்பித்தால் நல்ல முறையில் தொழில்கள் வளரக் கூடும் என்ற முறையில் வெளிநாட்டினரும் வந்து தமிழகத்தில் பெரிய பெரிய தொழில்களை எல்லாம் முதல் போட்டு அமைக்க முன் வருகிறார்கள். அவ்வளவு பெயர்போன, அவ்வளவு உறுதியான அமைச்சரவையாக இருக்கிறது என்பதற்காக தமிழக அமைச்சரவைக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஜனநாயகம் இல்லை, ஜனநாயகம் இல்லை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகிறார்கள். அப்படி ஜனநாயகம் இல்லை என்று சொன்னால் இந்தச் சட்டசபையில் வந்து நம் அமைச்சர்களைப் பார்த்து கன்னாப்பின்னா என்று பேசியும், வெளியே அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசவும், பத்திரிகைகளில் கண்டபடி வசை எழுதவும் இருந்திருக்க முடியுமா என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயக முறையை அமைத்திருக்கிறார்கள். இந்த முறை இந்த நாட்டில் ஓங்க வேண்டும். இதை யாரும் தடுக்க முடியாது. யாரும் அதைக் குறை கூறவும் முடியாது. ஆனால் ஜனநாயகத்தில்கூட பண்பாடான ஜனநாயகம் வளர வேண்டும் என்பது தான் எல்லோருடைய கருத்தாக இருக்க வேண்டும். இம்மாதிரி தனிப்பட்டவர்களை ஏசவோ, பேசவோ அல்லது பாடை கட்டி எரிக்கவோ, இம்மாதிரியான நிலையில் ஜனநாயகம் வளரும் என்றால் வருங்காலத்தில் ஜனநாயக முறை எப்படி பண்போடு இருக்க முடியும் என்பதைப்பற்றிய கவலை நாட்டிலுள்ள அத்தனை நல்லவர்களுக்கும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அமைச்சர்கள் தேர்தலுக்கு முன்பாக தங்களுடைய பதவியை விட்டுவிட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக அரசாங்க வேலைகளுக்காக வெளியே செல்லக் கூடாது என்றும் எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். சென்ற தேர்தலைப் பார்க்கும்போது நம் அமைச்சர்கள் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே அரசாங்க அலுவல்களுக்காகச செல்வதை நிறுத்தி விட்டார்கள். தங்களுடைய கட்சிக்காக, தங்களுடைய கட்சிப் பணிகளுக்காக மட்டுமே தேர்தலுக்காக வந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் ஞாபக மூட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, சட்டசபை உறுப்பினர்களுககு இன்னும் பல வசதிகள் ஹாஸ்டலில் செய்யப்பட வேண்டும். அதற்காக இப்போது ஒரு பெரிய கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்காக வரும்போது அங்கு ரூம்களுக்கு வாடகை வசூலிக்கப்படுகிறது. அந்த வாடகையை வசூலிக்காமலேயே இருந்து விட்டால் நலம் என்று நான் கருதுகிறேன். அண்மையில் இருக்கிற மைசூர் ராஜ்யத்தில், நான் பெங்களூருக்குச் சென்றபோது பார்த்தேன். அங்கு சட்டசபை நடக்கும் போது சட்டசபை உறுப்பினர்கள் வந்தால் அங்கு வாடகை எல்லாம்





வாங்கப்படுவதில்லை. அவர்கள் இருந்து கொள்வதற்கு மிக மிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறன. சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு, ரெயிலுக்கு செல்பவர்களுக்கு அழைத்துக் கொண்டு வரவும், கொண்டுபோய் விடவும் சட்டமன்ற ஹாஸ்டலுக்காக இரண்டு கார்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் நம் ராஜ்யத்திலும் அப்படி கார்கள் வாங்கி வைக்கப்பட்டு ரெயிலுக்குச் செல்வதற்கும், வருவதற்கும், போவதற்கும், வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹாஸ்டலில் போன் வசதி, போன் செய்வதற்குள்ள வசதி மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதுவும் பழைய ஹாஸ்டலைப் பார்த்தால் அங்கு போய் நின்று ஒரு இடத்திற்கு போன் செய்யவேண்டுமென்றால் கால் மணி நேரம் நின்றால்தான் போன் செய்ய முடிகிறது. அங்கு நேரடியான தொடர்பு கிடையாது. நியூ ஹாஸ்டலுக்கு போன் செய்து அங்கு நம்பர் சொல்லி அவர்கள் தொடர்பு வாங்கிக் கொடுத்து அதற்கப்புறம் பேசுவதற்கு மிக மிக நேரமாகி விடுகிறது. ஆகவே ஒவ்வொரு அறைக்கும் ஒரு போன் வைக்க முடியாவிட்டாலும் சில சில பகுதிகளாகப் பிரித்து நாலைந்து கனெக்ஷன்ஸ் வைத்துக் கொடுத்து விட்டால் ஆங்காங்கே அவர்கள் போன் செய்து கொள்ளலாம். அதை தற்சமயம் ஏற்படுத்தினால் நலமாகயிருக்கும் என்று கூறிக் கொள்கிறேன். சமீபத்தில் நான் இருக்கிற 1-ம் நம்பர் ரூமை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இப்போது எனக்கு ஒரு பாத் ரூம், லட்ரின் கட்டியிருக்கிறார்கள். கட்டியிருக்கிற பாத் ரூமையும், லட்ரினையும் பார்த்தால் தளம் ஒன்றில் காலில் மண் எல்லாம் குத்துகிறது. அந்த அளவிற்கு தளம் போட்டிருக்கிறார்கள். ஒரு கவர்ன்மெண்ட் கட்டியிருக்கிற கட்டடத்தில், அந்தக் கட்டடத்திற்குச் சென்று பார்த்தால், ஓல்ட் ஹாஸ்டலில் பாத் ரூமெல்லாம் மார்பிளில்தான் இருக்கும். இந்த பாத் ரூமைப் பார்த்தால் ஒரு எளிய வீட்டில் எப்படிக் கட்டிக் கொடுப்பார்களோ அந்த முறையில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு உடனடியாக நல்ல தளத்தைப் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இலாகாக்களில் நாம் கொடுக்கிற ஒவ்வொரு மனுக்களும் அவை பரிசீலனை செய்யப்பட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு நாட்களாகும் என்பதைப்பற்றிய தகவல் தெரிய பல மாதங்களாகின்றன. அது தவிர்க்கப்பட வேண்டும். அது தவிர்க்கப்பட்டால்தான் லஞ்ச ஊழல், லஞ்ச ஊழல் என்று சொல்கிறார்களே, அந்த லஞ்ச ஊழல் குறையும் என்பதுதான் என் கருத்து. ஒவ்வொரு இலாகாவும் மனுக்கள் பேரில் எந்தளவு காலம் எடுக்கும் என்று பரிசீலித்து, அந்தக் காலத்திற்குள்ளாக இந்த பேப்பர்கள் பரிசீலிக்கப்பட்டு அதன் மீது முடிவு எடுக்க வேண்டுமென்று மந்திரிசபை, அவர்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்லி விட்டால் லஞ்சம் என்று சொல்லப்படுகிறதே அது பாதி குறைந்துவிடும் என்பது என் கருத்தாகும். ஆகவே உடனடியாக இம்மாதிரி பரிசீலனை செய்யப்படுவதற்குரிய உத்தரவுகளை அமைச்சரவை இடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல இலாகாவினர் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். ஆனால் காலதாமதம் காரணத்தினால் அவர்கள் நல்ல முறையில் வேலை செய்தாலும், துரிதமாக வேலை செய்தாலும்கூட காலதாமதம் ஆவதால் அவர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அடுத்தபடியாக, லஞ்ச ஊழல் தடுப்புக் கமிட்டி என்று வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யார் லஞ்சம் வாங்கினார்கள் என்று பரிசீலனை செய்து அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆனால் லஞ்சம் வாங்குகிறவர்கள் மட்டும் குற்றவாளியாக இருக்கக் கூடாது. லஞ்சம் கொடுப்பவர்களையும் குற்றவாளிகளாக்கி விட்டால் ஓரளவு லஞ்சம் கொடுப்பதற்கும், லஞ்சம் வாங்குவதற்கும் ஒரு பயந்த சூழ்நிலை இருக்கும் என்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த நாடு, ஜனநாயக நாடு, ஜனநாயகம் வளர வேண்டும், ஜனநாயகம் வளர வேண்டுமென்று சொன்னால் இம்மாதிரியான குற்றங்கள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். இம்மாதிரிக் குற்றங்கள் முன்பும் நடந்திருக்கலாம். ஆனால் அன்று மறைவாக இருந்திருக்கிறது. அப்போது உண்மையான ஜனநாயகம், இவ்வளவு

விரிவான ஜனநாயகம் இருந்ததில்லை. ஆகவே அந்தக் காலத்தில் நமக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டு வந்தது. இப்போது விரிவான ஜனநாயகம் இருப்பதால் குற்றம் செய்தால், அது பெரிதாக வெளியிடப்படுகிறது, பெரிதாக்கிச் சொல்லப்படுகிறது. ஆகவே ஜனநாயகம் வளருவதற்கு இம்மாதிரி சிறு குற்றங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொழிப் பிரச்னைபற்றி பேசப்படுகிறது. சமீபத்தில் ஆறு தினங்கள் வரை மொழி சம்பந்தமாக எல்லோரும் பேசி இருக்கிறார்கள். ஆனால் நாம் இப்போது செய்யக் கூடிய கடமை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நம் நாடு ஒன்றான ஒரு நாடு. இந்த நாட்டைப் பிரிக்க முடியாது என்று நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டோமானால் எல்லா மாநிலங்களும் சேர்ந்து, எல்லோருடைய கருத்துக்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டு அதன் பேரில்தான் நாம் முடிவு எடுக்க வேண்டுமே தவிர இந்த நாட்டில் நம் மாநிலம் ஒன்றுதான் இருக்கிறது, அதன் கருத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், அதன் கருத்துத்தான் உண்மையான கருத்து என்று நினைப்பது உண்மையில் இந்த நாடு ஒன்று என்று ஒத்துக் கொள்வதற்கு முடியாத ஒரு கருத்தாகி விடும். ஆகவே மொழிப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்றால் எல்லா மாநிலத்தில் உள்ளவர்களும் ஒன்று சேர்ந்து அதைப் பற்றி சிந்தித்துப் பார்த்து ஒருவருக்கொருவர் நல்ல முறையில் சிந்தித்துப் பார்க்கக் கூடிய முறையில் ஆலோசித்து முடிவு எடுக்கப்பட வேண்டுமே தவிர நாம் சொல்வதுதான் சரி என்று சொல்வது சரியாகாது. அந்த முறையில் மொழிப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். அதற்கு எல்லாக் கட்சியினரும் உதவவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** கனம் தலைவர் அவர்களே; எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நமக்கு முன்னால் இருக்கின்ற முக்கிய பிரச்னை இந்திதான். இதன் காரணமாகத்தான் மாமூலாக நடைபெற வேண்டிய இந்த பட்ஜெட் விவாதத்தில் எல்லோரும் இந்திப் பிரச்னையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். காரணம் இந்தப் பிரச்னை தீராத ஒரு பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் சபையில் பேசும்போது, இந்தச் சபையின் உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் சிறையில் தாக்கப்பட்டிருக்கிறார், எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கப்பட்டிருக்கிறது, முதுகில் காயம் இருக்கிறது, நான் நேராக மதுரை மத்திய சிறையில் போய்ப் பார்த்தேன், மிகவும் மயக்கமுற்ற நிலையில் இருக்கிறார், மூன்று நாட்களாகப் பட்டினியோடு இருக்கிறார், மூன்று நான்கு தடவை மயக்கம் போட்டு விழுந்திருக்கிறார், பின்னாலும் எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். இதை விசாரிக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு நேற்று பதில் அளிக்கின்ற முறையில் அமைச்சர் அவர்கள், 'எனக்கு வந்திருக்கின்ற தகவல்படி அது உண்மை அல்ல' என்று சொன்னார்கள். சாதாரணமாக முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிகள் ஏதாவது சொன்னால் அதை நம்பி நடவடிக்கை எடுப்பார்கள் என்ற பெயர் இருந்து வருகிறது. ஆனால் சமீப காலத்தில் இந்த இந்தி எதிர்ப்பு விவகாரங்கள் ஏற்பட்ட பின்னால் பல உண்மைகளைச் சொன்னாலும்கூட, இவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள மறுத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தலைவர் அவர்களே, இந்த சட்டசபை உறுப்பினர் ஒருவர் தாககப்பட்டிருக்கிறார், துன்புறுத்தப்பட்டிருக்கிறார் என்பதை நானே நேரில் சென்று பார்த்தேன், நான் சொல்வதில் ஏதேனும் தவறு இருக்குமானால், கனம் உறுப்பினர் அவர்களை இங்கே வரவழைத்து பார்வையிடலாம் அதற்கு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நான் பார்த்து நாலைந்து நாளாகிவிட்டது. இப்போது காயம் ஆறிப்போயிருக்கும். இருந்தாலும் தழும்பு இருக்கும். இதையாவது பார்வையிடலாம். இதற்காக அவர் எவ்வாறு இருக்கிறார் என்பதைப் பார்த்தறிய சில அங்கத்தினர்கள் சேர்ந்து போய் பார்ப்பதற்கு





வேண்டிய நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை தங்கள் மூலமாக நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.

நேற்று, கனம் அமைச்சர் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மகாநாடுதான் இத்தனைக்கும் காரணம் என்றும், அதில் நான் பங்கு கொண்டதைப்பற்றியும் பேசினார்கள். அங்கு அந்த மகாநாடு பகிரங்கமாகத்தான் நடைபெற்றது. ஏதோ இந்த ஆட்சிக்கு விரோதமாக சதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு நடக்கவில்லை. இந்த மகாநாட்டில் பல பெரியார்களும், பொது மக்களும் கலந்து கொண்டார்கள். தீர்மானம் போட்டார்கள். இன்றைக்கு நாம் வைத்துக் கொண்டிருக்கின்ற சுதந்திரத்திற்காக சேவை செய்த பலர் அன்றைய மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். இந்த நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள், தேச ஒற்றுமையில் அக்கறை கொண்டவர்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு நல்ல படியாகத்தான் பேசினார்கள். இந்தி நமக்குத் தேவையில்லை என்கின்ற உணர்ச்சியை நாம் காட்டுகின்ற வகையில் நாம் போராடுகிறோம். ஆனால் நாம் காட்டுகின்ற உணர்ச்சியை வடக்கேயுள்ளவர்கள் உணர மறுக்கிறார்கள். நேருவின் வாக்குறுதியை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மறுக்கிறார்கள். உண்மையில இங்கேயிருந்து போய்ச் சொல்லுகின்ற மந்திரிகளுக்கு வடக்கேயுள்ளவர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை, அது மிகவும் தவறு என்பதைத்தான் எல்லோரும் சுட்டிக் காட்டிப் பேசினார்கள். நான் சமீப காலத்தில், வடக்கே போய் இருந்த போது, உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள இடதுசாரி தலைவர்களைப் பார்த்தேன். அப்போது அவர்கள் சொனனார்கள், இந்தியாவை நல்ல முறையில் ஆளவேண்டும் என்றால் முதலாவது உத்தரப் பிரதேசத்தை சரியான முறையில் ஆள வேண்டும்..............'If you want to rule India, first you must rule U.P.' இந்தியாவை ஆளவேண்டுமென்றால், உத்தரப் பிரதேசத்தை ஆளவேண்டும், உத்தரப் பிரதேசத்தினுடைய கலாச்சாரம்தான் இந்தியாவின் கலாச்சாரம், உத்திரப் பிரதேசத்திலுள்ள ஆட்கள்தான் மத்திய அரசாங்கத்தை நடத்த முடியும், என்று அங்கேயுள்ள தலைவர்கள் சொல்வதை நான் நேரில் பார்த்தேன், இதையும் நான் திருச்சி மகாநாட்டில் சொன்னேன். வடக்கேயுள்ளவர்கள் தென்னகத்திலுள்ளவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அது மட்டுமல்ல. தமிழ் நாட்டிலுள்ளவர்கள் சொல்வதை அவர்கள் புறக்கணித்து வருகிறார்கள். நம்முடைய போராட்டம் எல்லாம் சோஷியல் எக்னாமிக் ரெவலியூஷன் என்ற முறையில் இருந்தது. மொழி போராட்டம் என்ற முறையில் இப்போதுதான் நடந்திருக்கிறது. 15 வருட காலத்தில் இதைப் பற்றி முடிவெடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது. இதைப்பற்றி நாட்டிலுள்ளவர்கள் கேட்பதற்கு ஜனநாயக முறையில் உரிமை இருக்கிறது. பாஷை என்பதும் பொருளாதார முன்னேற்றத்தில் சேர்ந்தது தான். அந்த முறையில், பாஷையைப்பற்றி சொல்லப்படும் கருத்துக்களுக்கு, அதிலும் இந்த தேசம் ஒன்று என்று சொல்லக் கூடியவர்களின் கருத்துக்கும் வடக்கே சிறிதும் மரியாதை கிடையாது. அதே போல் தான், கனம் சுப்பிரமணியம் அவர்கள் ராஜிநாமா என்றால் அவர்களுடைய கருத்துக்கு வடக்கேயுள்ளவர்கள் மதிப்பு வைக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. அவர்களுக்குள் நடந்த விவாதத்தில் தியாகி போன்றவர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். என்னவெல்லாமோ நடந்திருக்கிறது. ஒன்றுக்கொன்று முரணாக நடந்திருக்கிறது. இதன் காரணமாக ராஜிநாமா செய்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய ராஜிநாமாவைப்பற்றி மத்திய அமைச்சர் ஒருவர் என்ன சொல்லியிருக்கிறார், 'வேண்டுமென்றால் குடக்கூலிக்காரன் வீட்டை விட்டுப் போகட்டும், குடக்கூலிக்காரன்தான் வெளியே போக வேண்டும், நாங்கள் எதற்காக பயப்பட வேண்டும், என்று சொல்லி யிருக்கிறார்கள். யார் குடக்கூலிக்காரன், யார் சொந்தக்காரன் என்று தெரியவில்லை, இங்கே பேசப்பட்டது மொழி வெறி யிருக்கிறது என்று, அங்கே திட்டவட்டமாக சொல்லிவிட்டு, லாபியில் இங்கிலீஷ் அறிக்கைகளை எரித்தார்களே, அவர்களுக்கு இல்லாத வெறியுணர்ச்சியா நம்மிடத்தில் இருக்கிறது? இதுவரை

சொல்லிப் பார்த்தோம், தீர்மானங்கள் போட்டுப் பார்த்தோம், எல்லாவற்றையும் நாம் எடுத்துக் காட்டினோம், இருந்தாலும் மதிப்பதாக இல்லை. அத்தனைக்கும் பிறகுதான் இவ்வாறு எதிர்ப்பு காண்பிப்பது என்று வந்தோம். அந்த முறையில் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திருச்சியில் மகாநாடு நடத்தப்பட்டது. இந்திப் பிரச்னை என்பது ஒரு சில குறிப்பிட்ட கட்சிகளுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுப் பொது மக்களுடைய பிரச்னை, அந்த முறையில் தான் பொது மக்களுக்கும் அதற்கான உரிமை இருக்கிறது என்ற நிலையில் திருச்சியில் மகாநாடு கூட்டப்பட்டது. அதுவல்லாமல் ஏதோ சதி நடந்தது என்றெல்லாம் கூறுவது தவறு. முக்கியமாக நீங்கள் சொல்லுகிற கருத்துக்கு, நீங்கள் சொல்லுகிற வார்த்தைக்கு மதிப்பு இருக்க வேண்டும் என்ற வகையில் தான் மக்கள் இந்தத் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்களே தவிர இதை ஏன் நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக நான் முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று, முக்கியமான விஷயம், சமீபத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தோடு போய் பாஷையைப் பற்றி விவாதித்துவிட்டு வந்தார்கள். எதையோ பற்றி நினைத்துக்கொண்டு நிச்சயமாக வெற்றி அளித்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் என்னென்ன நடந்தது என்பதை வெளியில் சொல்லவேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசுவதற்குப் போனார்கள் என்றால், சாதாரணமாகப் போய்விடவில்லை. இத்தகைய ஒரு நிலை ஏற்பட்ட பின்னால், திருச்சி மகாநாட்டுக்குப் பின்னால், இத்தனை விவகாரங்களும் நடந்த பின்னால், அவர்களுக்குத் தக்க பலம் கிடைத்திருக்கிறது, அதையெல்லாம் அவர்கள் தவறாக எடுத்துக்கொள்ளாமல் சாதகம் என்று எடுத்துக்கொண்டு பார்த்தால், இங்கு நடந்த விவகாரங்கள் எல்லாம் அவர்களுக்குப் பிரயோசனம் இல்லையா என்று கேட்கிறேன். போய்விட்டு வந்தார்கள், ஆனால் திடீரென்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்தியை எப்படியும் நிச்சயமாக கட்டாய பாடமாக வைக்கத் தீர்மானித்ததாகிவிட்டது. முக்கியமாக சென்னையில் இந்தி புகுத்தப் படும் என்பதை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அங்கே உள்ளபடியே என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் உங்களுக்கு இந்த மக்கள் மீது நம்பிக்கையிருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக நீங்கள் சொன்னது என்ன என்பதைத் தெரிவிக்கவேண்டும் இதையெல்லாம் தெளிவாகச் சொல்லாமல் இருப்பதின் விளைவுதான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணம், இத்தனை கோளாறுகளுக்கும் காரணம், இவையெல்லாம் உங்களுடைய தவறுதான். திட்டவட்டமாக இதைப் பற்றி தயவு செய்து அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்தி புகுத்தப்படும் என்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவ்விதமான ஒரு நிலைமைதான் இங்கு இருக்கும் என்றால் இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். இந்தி சம்பந்தமாக ஒருமித்த கருத்தோடு (யுனானிமஸ்) இந்தி எதிர்ப்பைப்பற்றித் தீர்மானம் முதலியவைகள் நிறைவேற்றி அனுப்பவேண்டும். இது முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க பலத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாணவர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். மிகவும் வரவேற்கத் தக்க விஷயம். இதற்குக் காரணம் துணைவேந்தர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விடுதலை செய்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த சம்பவங்களில் பலர் உயிர் இழந்திருக்கிறார்கள். போலீஸ் காரர்களில் உயிரிழந்தவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று உயிரிழந்த அத்தனை பேர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களை விடுதலை செய்யப்போகிறேன் என்பதை கனம் முதலமைச்சர் அவர்கள் சனிக்கிழமையன்று சொன்னார்கள். அன்றைய தினம் காலையில் இந்தச் சபையில் அந்த முடிவைச் சொல்லக்கூடாதா ?. இந்தச் சபைக்கு அந்த மதிப்பைத் தரக்கூடாதா ? இங்கே அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல்



வெளியே அறிக்கைவிட்டிருக்கிறார்கள். நேற்று முன்தினம் லீவ்வாக இருந்தது, அதற்கு முந்தின தினமே இங்கே சொல்லியிருக்கலாம், சட்டசபையைக்கூட மதிக்காத நிலையில் வெளியில் இதைப்பற்றி அறிக்கை வெளியிட்டார்கள்....

**கனம் திரு. எம். பக்தவத்ஸலம் :** இதைச் சட்ட சபையிலே வைக்க வேண்டும் என்ற நிமித்தம் இல்லை. சட்ட சபைக்காகக் காத்து கொண்டிருந்து பிறகு விடுதலை செய்யவேண்டுமென்று சொல்லுவது முறையல்ல. கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கே பேச வேண்டியதைப் பத்திரிகைகளில் அறிக்கை விடுத்தார்கள் சட்டசபை கூடிய காலத்திலேயே. அது தவறே தவிர, நான் செய்தது தவறு அல்ல.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** தலைவர் அவர்களே, ஏதோ வைஸ் சான்ஸ்லர் கேட்டுக்கொண்ட காரணத்தினால் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்ட சபையிலேயே அதிமான பேர்கள் அத்தகைய அபிப்பிராயத்தைச் சொன்னார்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னார்கள் என்று இரண்டையும் சேர்த்துக் கூடச் சொல்லியிருக்கலாம்.

ஹாஸ்டல் விஷயம் பற்றி கனம் அம்மையார் பேசினார்கள். அது ஹாஸ்டல் மாதிரி இல்லை, ஹாஸ்பிட்டல் மாதிரி இருக்கிறது. அதிகத் தொகை போட்டுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள். அது இருக்கட்டும். இங்கு நடப்பதைப் பார்த்தால் அங்கத்தினர்கள் ஒழுங்காக இருந்து காரியத்தைச் செய்து, ஏதாவது படித்துப் பேசுவதற்குத் தயார் செய்து கொள்ளக் கூட முடியாது இருக்கிறது. மூன்று வருஷமாக அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பழைய ஹாஸ்டல் கண்ட ஆபீஸுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாகாணம் பிரிக்கப்படுவதற்கு முன்னால் ஹாஸ்டல், ஹாஸ்டலாக இருந்தது, இப்போது ஆபீஸ்களாகக் காட்சி அளிக்கிறது. ஒவ்வொரு ரூமிலும் பார்த்தால் ஹாஸ்பிட்டலில் கட்டில் போட்டுப் படுக்க வைத்த மாதிரி இருக்கிறது. வசதிக் குறைவாக இருக்கிறது. ஆபீஸ்களைக் காலி செய்வதாக அமைச்சர் ராமையா அவர்கள் சொல்லி மூன்று வருஷங்கள் ஆகி விட்டன. ஹவுஸ் கமிட்டியில் கூடத் தீர்மானம் போட்டது கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் போக மறுக்கிறார்கள். அவைகளையெல்லாம் காலி செய்ய ஏற்பாடு செய்து மெம்பர்களுக்கு வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக......

11-30 a.m.

***திரு. ஆ. துரையரசன் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எங்களுடைய கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, ஒரு நாட்டிலே, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு இல்லை என்று சொன்னால், பண்டை மன்னர்கள் காலத்தில் இந்த ஒரு நிலைமை இருந்தது. மக்கள் மன்னர்களைக் குறை கூறிக்கொண்டு இருந்தார்கள். மன்னர்களுக்கு பிறகு இந்த நாட்டிலே வெள்ளையர்கள் ஆண்டுகொண்டிருந்தார்கள். நாட்டிலே ஏன் பஞ்சம் என்று கேட்டால், ஏன் மழை இல்லை என்று கேட்டால், வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறான் என்று நாம் எல்லாம் சொன்னோம். பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து நமது நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறான் வெள்ளைக்காரன், நம்மவர்கள் ஆட்சி வந்தால் நாடு நலம் பெறும், மக்கள் வாழ்வு வளம் பெறும் என்று சுதந்திரத்திற்குப் பாடுபட்ட நமது தலைவர்கள் சொன்னார்கள். அதன்படி வெள்ளையர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அதன் பிறகு 17 ஆண்டுகளாக, சுதந்திரம் என்ற பெயரால் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. 17 ஆண்டு காலத்தில் பல திட்டங்கள் இந்த நாட்டிலே போடப்பட்டிருக்கின்றன. வெள்ளையன் ஆண்ட காலத்தில் ஆந்திர, கன்னட, கேரள, தமிழ் ஆகிய நான்கு மாநிலங்

களும் சேர்ந்து கொடுக்கப்பட்ட வரி 16 கோடி. இப்போது அந்த மூன்று மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு தமிழக மக்கள் கடந்த ஆண்டு வரையில் கொடுத்திருப்பதை, தமிழக மக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியைப் பார்த்தால் 128 கோடி ரூபாய்க்கு மேல் இந்த நாட்டு மக்கள் வரிப்பணமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தனை வரியைத் தந்துகொண்டிருக்கிற மக்களுக்கு எந்த அளவுக்கு வசதிகள் பெருக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால், விவசாயிகளுக்கு இந்த நாட்டிலே நல்ல திட்டங்களைச் சொன்னாலும், போட்டாலும், கோடிக் கணக்கான ரூபாய்களை அதற்காகச் செலவிட்டாலும், விவசாயிகளின் வேதனைகள் இந்த நாட்டிலே தீர்க்கப்பட்டதா என்று சொன்னால், எந்தக் கிராம விவசாயியைப் பார்த்துக் கேட்டாலும் "ஏதோ வாழ்கிறேன்" என்று சொல்லுகிறார்களே தவிர, தங்கள் வேதனை தீர்ந்ததாகச் சொல்லுவதாக இல்லை. இந்த நாட்டிலே வாழுகின்ற தொழிலாளர் நிலைமையும் இப்படித்தான். நம் நாட்டிலே லட்சக்கணக்கான தொழிலாளர்கள், அவர்களுக்குப் பல சட்டங்கள் இருக்கின்றன, பல திட்டங்கள் இருக்கின்றன, ஆனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அன்றைக்கு எப்படி இந்த நாட்டிலே வாழ்ந்தார்களோ அதே போலத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த 17 ஆண்டுக் காலத்தில் நாட்டிலே முன்னேற்றம், முன்னேற்றம் என்று சொல்லுகிறார்களே தவிர, என்ன முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால், கள்ளச் சந்தை வியாபாரிகள் பெருகி இருக்கிறார்கள், கள்ளக் கடத்தல் பேர்வழிகள் பெருகியிருக்கிறார்களே தவிர, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடியதாக இந்த ஆட்சி இல்லை என்று நான் உண்மையிலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் தீர்மானங்கள் இந்த நாட்டிலே நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்றால் இல்லை. கராச்சியில் அன்றைய தினம் தீர்மானம் போட்டார்கள். நம்மவர்கள் ஆட்சிக்கு வந்தால். அமைச்சராக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்காது என்று தீர்மானம் போட்டார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சருக்குச் சம்பளம் எவ்வளவு? 1,500 ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் நம் முதல் அமைச்சருக்கு இந்தியாவில் தயார் ஆகின்ற சுதேசிக் கார் கூட பிடிக்காமல், லட்ச ரூபாய் காரில் நான் பவனி வந்துகொண்டிருக்கிறார்கள். இது எளிய நாடு என்று எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? ஏழைகள் வாழ வழி செய்திருக்கிறார்கள் என்று எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? இதே மாதிரித் தான் நம் நாட்டிலே பர்மாத் தமிழர் வாழ்க்கைப் பிரச்னை இருக்கிறது. இதே மாதிரித்தான் நம் நாட்டிலே இலங்கைத் தமிழர் வாழ்க்கைப் பிரச்னை இருக்கிறது. இதே மாதிரித்தான் நம் நாட்டிலே பொற்கொல்லர் பிரச்னை இருக்கிறது. இன்னும் என்.ஜீ.ஓ.–க்கள், வணிகப் பெருமக்கள், மற்றும் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், ஆசிரியர்கள், மற்றவர்கள், இப்படி எல்லா மக்களுக்கும் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை, முன்னேற்றம் இல்லை, என்ற நிலைமையைப் பார்க்க முடிகிறது.

அண்மையில் நடந்த கிளர்ச்சி பற்றித் தொடர்ந்து விவாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் தொடர்ந்து 5, 6 தினங்கள் தஞ்சை நகரில் இருக்கும் நிலைமை எனக்கு ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் திறமையாக, எந்தவித பலாத்காரமும் இல்லாமல் சமாளித்திருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, எதிர்பாராத விதமாக மன்னார்குடியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. காரணம் என்ன என்று பிறகு விசாரித்ததில், அமைதியாகத்தான் மாணவர்கள் ஊர்வலம் வந்திருக்கிறார்கள். வந்த ஊர்வலத்தினர் பாராளுமன்ற (ஆளும் கட்சி) உறுப்பினர் இருக்கக்கூடிய தெரு வழியாக அமைதியாகச் செல்லுகிறோம் என்று, அந்த வழியாகச் செல்லவேண்டுமென்று சொன்னவர்களைப் போலீசார் தடுத்திருக்கிறார்கள். அப்படித் தடுத்த காரணத்தினால் கலவரம் ஏற்பட்டு, எனது நகரத்தைச் சேர்ந்தவர், கூட்டத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்தவர் மீது, ஒரு குண்டு, அந்தக் குண்டு சுவற்றில் பட்டு, அதனுடைய வேகம் குறைந்து, அவர் மீது கையில் அடித்து இப்போது தஞ்சை மருத்துவ மனையில் இருக்கிறார். அகரமாங்



குடியில் இந்த மாதிரித் தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. நமது உணவு அமைச்சர் அவர்களுடைய புதுக்கோட்டையில் அன்றைய தினம் எதிர்பாராத விதமாக இருக்க நேரிட்டது. நான் பஸ்ஸைவிட்டு இறங்கும்போதே அங்கே அமளியாக இருந்தது. புதுக்கோட்டையில் அன்றைய தினம் போலீசார் காட்டாட்சி தர்பார் நடத்தி, மிருகத் தனமாக நடந்திருக்கிறார்கள். பஸ்ஸுக்குப் போகிறவர்களையும் வருகிறவர்களையும் விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். கல்லூரிக்கு வெளியே வந்தவர்களை 4, 5 மைல் விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியின் பிரின்ஸிபால் ரொம்பவும் அமைதியானவர்கள், நல்லவர்கள் என்று அங்கே உள்ளவர்கள் சொன்னார்கள். அவர்கள் போலீஸாரிடம் மாணவர்களை அடிக்க வேண்டாம் என்று சொன்னதற்காக அவரே தாக்கப்பட்டார். அவர் கூட சர். வி. பி. அவர்களுடைய உறவினர் என்று நான் கேள்விப்பட்டேன். நடந்து முடிந்த கிளர்ச்சிக்குக் காரணம் அந்தத் தரப்பில் உள்ளவர்கள் முன்னேற்றக் கழகம் தான் காரணம் என்று சொன்னாலும் வெளியே ஒரு சில ஆளும் கட்சி உறுப்பினர்கள், அமைதியாக முதல் அமைச்சர் அவர்கள் நிலைமையைச் சமாளித்திருக்க முடியும், அவர்கள் பேச்சுத்தான் காரணம் என்பதை வெளிப்படையாக ஒரு சிலர் என்னிடத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். முன்னேற்றக் கழகம் எந்தப் பிரச்னையானாலும் எந்தப் பிரச்னையை முன்னிட்டு போராட்டத்தில் இறங்கினாலும், தென்னாட்டு காந்தி என்று நாட்டு மக்களால் போற்றப்படுகிற அண்ணா அவர்கள் அதைப் பற்றி செயற்குழுவில் முடிவு எடுத்து, பொதுக்குழுவில் முடிவெடுத்து இன்னஇன்ன இடத்தில், இன்ன இன்ன முறையில், இன்னார் இன்னார் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, அதைப் பற்றித் திட்டவட்டமாகப் பத்திரிகைகளுக்கு அறிவிப்புக்கொடுத்து, அந்த நிலையில் தான் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. முன்னேற்றக் கழகம் இப்படிப் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. ஆனால் நடத்தப்பட்ட போராட்டத்தினால் மக்கள் செத்ததாகவோ, மக்கள் உயிருக்குப் பாதகம் ஏற்பட்டதாகவோ, மக்கள் சொத்துக்கு அல்லது அரசாங்க சொத்துக்கு எந்த வித சேதமும் இல்லாமல், அமைதிக்குப் பங்கம் இல்லாமல், சட்டத்திற்குக் கட்டுப்பட்டுத் தான் எந்தப் போராட்டத்தையும் நடத்தியிருக்கிறார்கள். இப்போது நடந்த போராட்டத்தைப்பற்றி தலைமைக் குழுவிலிருந்து ஒரு அறிக்கை விடப்பட்டது. திட்டமிட்டபடி நடப்பதற்கு முன் போலீசாரால் கைது செய்யப்பட்டால் அந்த நிகழ்ச்சி நடைபெற்றதாகக் கருதிக்கொண்டு அமைதியாக நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய தலைவர் அறிக்கையில் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், வேண்டுமென்றே முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிட வேண்டுமென்ற எண்ணத்திலே தான் இங்கே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முன்னேற்றக் கழகத்திற்கும் இந்த நாட்டில் நடைபெற்ற இந்தக் கலவரங்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று நிச்சயமாக அறுதியிட்டுக் கூற முடியும். இப்படிப் பேசித்தான் முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது அல்ல. மக்களை நம்பித் தான் முன்னேற்றக் கழகம் வளர்ந்துகொண்டிருக்கிறது. இதர சில கட்சிகளைப்போல ஒரு தனி நபரை, தலைவரை நம்பி இயங்குகிற இயக்கம் அல்ல. முன்னேற்றக் கழகம் மக்களுடைய இயக்கம், மக்களை நம்பித் தான் அது வளர்ந்துகொண்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் பள்ளிகள் திறக்க வேண்டிய நேரத்தில் சிறைச்சாலைகளைத் திறந்துவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட எல்லையிலே வந்த சீனாக்காரனை விரட்டவேண்டிய படைகளை இங்கே ஏவிவிட்டு, மாணவர்களையும், பச்சிளங்குழந்தைகளையும், அப்பாவி மனிதர்களையும் விரட்டி விரட்டி அடித்தார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்த ஆட்சி நல்ல ஆட்சி என்று எப்படிச் சொல்லமுடியும், நம்முடைய அமைச்சர்கள் நல்லவர்கள் என்று எப்படிச் சொல்லமுடியும் என்பதை இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற நாம், ஜனநாயகம் உண்மையிலேயே வளரவேண்டும் என்று நம்முடைய அமைச்சர்கள் ஆசைப்பட்டால், எதிர்த்தரப்பிலிருந்து சொல்

னுகிற கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். நேற்றிலிருந்து தொடர்ந்து சொல்லுகிறார்கள். உத்தமபாளையம் திரு இராசாங்கத்தை சிறையில் அடித்திருக்கிறார்கள், எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த மன்றம் நீதி மன்றத்திற்குச் சமம் தானே? அந்த அங்கத்தினரை இந்த மன்றத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லுகிறோம். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு மௌனம் சாதிப்பதற்குக் காரணம் என்ன? உண்மை நிலைமை வெளி வந்துவிடும் என்பது தான் காரணமா? இந்த நிலைமை உங்களுக்குத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும், நாட்டு மக்கள் அதை நிச்சயமாக புரிந்துகொண்டிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டில் நிச்சயமாக நாட்டு மக்கள் உங்களுக்கு பாடம் கற்பிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு எம். எஸ். செல்வராஜன் :*** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன். இதற்கு முன்பெல்லாம் கடந்த 10 வருஷ காலத்தில் இந்தச் சபையில் நான் இருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த மான்யக் கோரிக்கையின்போது எதிர்த்தரப்பிலிருந்து வரக்கூடிய வாதங்களெல்லாம், கவர்னர் அவர்கள் தேவையில்லை, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமும், மற்றச் செலவுகளும் அவசியமா, மேல் சபை அவசியமா, அது 6 விரல்கள் இருப்பது போல் அல்லவா என்பவை தான். கடந்த சில வருஷ அனுபவத்திற்குப் பின்னர் எதிர்க்கட்சியினர் அவற்றின் தேவையை உணர்ந்தபிற்பாடு மௌனமாயிருக்கிறார்கள். எந்தத் தரப்பிலிருந்து கொடுக்கக்கூடிய கட் மோஷனை பார்த்தால்கூட, ஒரு வார்த்தை கூட அதைப்பற்றி இங்கே இல்லை.

எதிர்க்கட்சியின் முக்கியமான அங்கத்தினர் இங்கே பேசுகிறபொழுது, மறைந்த மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் தன்மையை எடுத்துச் சொல்வதற்கு இத்தனை ஆண்டுகள் காலம் கடக்கவேண்டியிருந்திருக்கிறது அவர்களுக்கு. அத்தகைய பெரிய மனிதனிடம் பெரிய நம்பிக்கை வைத்து, அவர்கள் சொல்லுகிற வார்த்தை கூட வேத வாக்கு, எந்த நிலையில் கூட அந்த வார்த்தையைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி அந்தப் பெரிய மனிதனுக்கு இருந்தது என்று கருதித் தான், இந்த நாட்டுப் பொது மொழி சம்பந்தமாக அவர் கொடுத்த வாக்கை நிச்சயமாக காப்பாற்றக்கூடியவர் என்ற துணிவான எண்ணம் இந்த ராஜ்ய அரசாங்கத்திற்கு இருந்திருக்கிறது. மக்களுக்கும் இருந்தது. அந்த மாபெரும் மனிதர் மறைந்த பிற்பாடு, மக்களுடைய எண்ணத்தில் எப்படியாகிலும் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் இருக்கவேண்டிய ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று கருதி இந்த ராஜ்ய அரசாங்கம் தன்னுடைய கோரிக்கையை முறையாகக் கொடுத்து, நாட்டில் இருக்கக்கூடிய மற்ற மாநில அரசுகளும் ஒத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இந்த நாடே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட இங்கே மொழிப் பிரச்னையைப்பற்றி பேசியிருக்கிறார்கள். சில எதிர்க்கட்சியினர் பொது மொழியாக இந்தி தேவை தான் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கில நீடிப்பு எப்படி, எவ்வளவு காலத்திற்கு அது இருப்பது, எந்த முறையில் வைத்துக்கொள்வது என்பதைப் போன்று பாதை வகுப்பதிலே தான் அவர்களுக்கிடையே வழிமாற்றம் இருக்கிறதே ஒழிய, பொது மொழியை ஒத்துக்கொள்கிற பொதுவான நிலையிலே எந்த விதமான வித்தியாசமும் இல்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட இங்கே பேசும்பொழுது பொது மொழியாகக் கூட இந்தியை ஒத்துக்கொள்ளாதது போல கடந்த பல வருஷங்களாக இந்த இடத்தில் பேசிக்கொண்டிருப்பதை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு பெரிய தலைவர் இமய மலையை அடுத்திருக்கிற டெல்லி நகருக்குச் சென்ற பிற்பாடு, இமயத்தை அடுத்து ஞானம் பெற்றது போல, சமீபத்தில் சில நாட்களில் இந்தி பொது மொழி இந்த தேசத்தில் என்பதை ஒத்துக்கொள்கிறேன், ஆனால் எந்த அளவுக்கு என்று வரை

Y211,31 N65



N65-27-1

யறுப்பதிலே, எந்த வழியாக இந்த நாட்டு மக்களை ஒத்துக்கொள்ளச் செய்வது என்பதிலே தான், வழி முறையிலே தான் வித்தியாசம் என்று உணர்த்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவர் உள்பட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய பெரிய தலைவர் அவர்களுக்கும் ஏதேனும் அபிப்பிராயத்தில் வித்தியாசம் இருக்கிறதா, குழப்பம் இருக்கிறதா என்பதைத் தான் இந்த நாடு தெரிந்துகொள்வதற்கு நினைக்கும் என்று நான் நம்புகிறேன். இன்னும் சில நாட்களில் பொதுவாக இந்த ராஜ்ய அரசாங்கமும், இந்த நாடும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான முடிவை, தி.மு.க. உள்பட இந்த நாட்டில் எல்லோருமே ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் புரிந்துகொள்வதற்குச் சிறிது காலம் ஆகிறது. அவ்வளவு தான் வித்தியாசமே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று நான் கருதுகிறேன். இந்தப் பொது மொழி பற்றிய விவகாரங்களெல்லாம் கூட அமைதியாகத் தீர்க்கப்படுவதற்கு, அமைதியான நல்ல முடிவு ஏற்படுவதற்கு உறுதி ஒரு புறம், அறிவு ஒரு புறம் இரண்டும் வேலை செய்து, இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற மொழிச் சிக்கல் எதிர்காலத்தில் ஏற்படக்கூடாத அளவுக்குப் பக்குவமான வழி வகுக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே எதிர் காலத்தைக் கருதி, அமைதியான நிலைமை இந்த நாடு முழுவதிலும் ஏற்பட மாணவர்கள் உள்பட நாட்டு மக்கள் எல்லோரும் வழி செய்ய வேண்டும் என்பது தான் கோரிக்கை.

ராஜ்ய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய அமைச்சர் அவை இயங்கும் முறைகள் கூட இந்த மான்யத்திலே அடங்கும். இந்த ராஜ்ய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக, குறைந்த தொகை அமைச்சர்கள் உள்ள அமைச்சர் அவையாக இருப்பதினால், அடிக்கடி ஒன்றுகூடி சிறிய, பெரிய விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்து முடிவு எடுக்கக்கூடிய நல்ல நிலை அமைந்திருக்கிறது. மேல் சபை இருக்கவேண்டும் என்று சொல்லுகிறது காங்கிரஸ் கட்சி. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் என்ற நிலையிலே அன்றைக்கு மேல் சபையில் நடந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அங்கே உள்ள எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியார் அவர்கள், யுனிவர்ஸிடி உப அத்தியக்ஷகராகவும் பொறுப்பு வைத்துக்கொண்டிருப்பவர், அந்தப் பெரியவர் ரொம்பவும் உருக்கத்தோடு வேண்டிக்கொண்டார். இந்தச் சட்ட சபையில் தெரிவிப்பதற்கு முன்பே, 8-ம் தேதி மாணவர்கள் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் செல்லவேண்டியது அவசியமாக இருப்பதினால், கனம் முதல் அமைச்சர் அவர்கள் அன்றைய தினமே அந்த எதிர்கட்சித் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கக்கூடிய அளவுக்கு, அவருடைய உருக்கமான வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு சில வாக்குறுதிகளைக் கொடுத்தார். அந்த வாக்குறுதியைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு மாணவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் செய்தார் என்ற நல்ல செய்தி கிடைத்தது. சென்னையிலே நடமாடுகிற ஒரு பத்திரிகை ஆசிரியர் கூட மாணவர்கள் சிலரை அழைத்து மறுபடியும் கூட தூபம் போடுவதற்கு முயற்சி செய்தார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதை மிகவும் கண்காணிப்போடு கவனிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். மாணவர்கள், மாணவர் தலைவர்களுக்கு நடமாடுவதற்குப் பண உதவி செய்யக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டிருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. இந்த துர்பாக்கியமான நிலைமையைத் தவிர்க்க, இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு, பத்திரிகை ஆசிரியர்கள், வசதி உள்ளவர்கள். இந்த நாட்டின் நலனைக் கருதி அவர்களெல்லாம் தங்களைத் [illegible] திருத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்டசபையைப் [illegible] பொறுத்தமட்டில், சட்ட சபையிலும், ராஜ்ய அரசாங்கத்தில் இருக்கக் [illegible] கூடிய மற்றச் சிறிய இலாக்காக்களிலும் கூடத் தமிழ் மொழிக்கு எந்த [illegible] விதமான முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ராஜ்யங் [illegible] களிலும் அவரவர்களுடைய பிராந்தியத்தில் பிராந்திய மொழிக்கு முக்கியத் [illegible] துவம் கொடுக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை எடுத்துக்கொண்டது [illegible] இணங்க, எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்குச் சிறப்பான முறை [illegible] யில் இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் மொழி வேகமா [illegible]

எல்லா இலாகாக்களிலும் பரிமளிக்கக்கூடிய வழிவகைகளை இந்த ராஜ்ய அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. சட்ட சபை நடவடிக்கைகளிலும் இது துரிதமாக அமல் நடத்திக்கொண்டு வரப்படுகிறது. மொழி சம்பந்தமாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நியதியை முறையாக இந்த ராஜ்யம் கடைபிடிக்கின்றது என்று நான் கருதுகிறேன்.

சட்டசபை அங்கத்தினர்களுக்கான "லவுஞ்ச்" என்பது நூல் நிலையத்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். நூல்நிலையம் எல்லா அங்கத்தினர்களும் முறையாக பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வசதியாக இல்லை. எந்த இடத்தில் இருந்தாலும்கூட, 'லவுஞ்ச்' என்பதும், நூல்நிலையமும் சேர்ந்து அங்கத்தினர்கள் பொதுவாக உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

இங்கே இருக்கிற ஹோட்டலிலே பல காலமாக இருக்கக்கூடிய குறை ஒன்று. நல்ல தண்ணீர் எல்லா நேரமும் கிடைக்கவில்லை என்பது. நல்ல தண்ணீராகிலும் எப்பொழுதும் கிடைக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பில் இருக்கும் மராமத்து அமைச்சர் கூட சமீபகாலத்திலே ஹாஸ்டலுக்கு வந்து, பார்த்தபின் நல்ல நிலையிலே பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிதாகக் கட்டுமானம் ஆகிவரும் ஹாஸ்டல் இருக்கிறது என்றாலும், இப்பொழுது இருக்கக்கூடிய ஹாஸ்டலிலும் ஏற்கனவே கேட்டிருக்கும் வசதிகளைச்செய்து கொடுப்பது நலமாக இருக்கும். ஒரு போர்ட்டிக்கோ, மத்தியில் க்ளாக் டவர் வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதோடு கூட, ஒரு சுகாதார அதிகாரியையும் ஸ்பெஷலாக நியமித்து, சுத்தம், சுகாதார வேலைகளைச் கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இப்பொழுது இருக்கும் ரூம்களையும் பின்புறம் பாத் ரூம்கள் அட்டாச்சட் ஆகச் செய்வது நலமாக இருக்கும். எங்கெங்கிருந்தோ இங்கு வந்து பலர் தங்குவார்கள். புதிய கட்டடத்தில் இவைகள் இருக்கும் என்றாலும், இந்தக் கட்டடத்திலும் இருப்பது நல்லது.

ஜில்லாவில் கலெக்டருக்குப் பல்வேறு விசேஷப் பொறுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. என்னுடைய ஆசை, கோரிக்கை, ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் தலைவராக ஜில்லா கலெக்டர் இருப்பது நியாயம் இல்லை. அந்த நிலையை மாற்றி, ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியே தலைவராக வரக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். ஜுடீஷியலும், எக்ஸிக்யூடிவும் தனியாகப் பிரிந்தாலும்கூட, கலெக்டர் இன்னமும் எல்லாவற்றிற்கும் மையம் போல் இருக்கிறார் என்ற நிலைமைதான் இருக்கிறது. டெக்னிகல் அதிகாரிகள், பப்ளிக் ஒர்க்ஸ் எஞ்ஜினியர், ஹைவேஸ் எஞ்ஜினியர், அக்ரிகல்சுரல் எஞ்ஜினியர், மற்றத் தலைமை அதிகாரிகள் இவர்களிடையே கான்ஃப்ளிக்ட் ஏற்படுகிறது. தங்களுக்குக் கலெக்டர் தலைவரா என்று ஒரு எண்ணம் தோன்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எங்கள் திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரை முறையாக ஜில்லாவிலே ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமைகளைப் பற்றி இந்த அரசாங்கத்திற்கு எடுத்துத் தகவல் தந்தார்களா என்று சந்தேகிக்கிறேன். ஆகவே, அங்கு ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமையைத் தவிர்க்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

தாலூகா ஆபீசிலேயே ஒரு ரிஸப்ஷன் ஆபீசர் போட்டு, தாலூகா ஆபீசுக்கு வரும் கிராம மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். தாலூகா ஆபீசிலே பென்ஷன் மனுக்கள் ஆயிரம் ஆயிரம் தேங்கிக் கிடக்கின்றன. இலங்கை, பர்மா அகதிகள் கடன் மனுக்களெல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, அதற்கென்று ஸ்பெஷல் அதிகாரியை நியமித்துப் பரிசீலனை செய்து வழிவகைகள் செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய தமிழக சர்க்கார், தமிழ் மாநிலத்திற்கு மட்டுமல்ல, தமிழர்கள் எங்கு இருந்தாலும், அவர்களுக்கும் பிரதிநிதி





யாக இருக்கவேண்டும் என்ற கருத்தினை இந்தச் சட்ட மன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன். வெளி நாடுகளிலே தமிழர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவ்வளவு நாடுகளுடனும், அந்த வெளிநாடுகளுடன், தமிழக சர்க்கார் தொடர்புகொள்ள வேண்டும், தமிழக அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப்போகும்போது, தமிழர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுடைய குறைகளைக் கேட்டு, தமிழருக்கே பிரதிநிதித்துவம் உள்ள சர்க்காராக இந்த சர்க்கார் அமையவேண்டும். வெளிநாட்டுப்பிரஜைகளாகவும் இருக்கிறார்கள். இந்திய பிரஜைகளாகவும் இருக்கிறார்கள். இந்திய பிரஜைகளாக இருப்பவர்கள் சம்பந்தமாக, நமது மத்திய சர்க்கார் பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், மத்திய சர்க்காரை எந்த விஷயத்திலும், இந்த அன்னிய நாட்டுத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட வரை, வற்புறுத்தும் வாய்ப்பு நம்முடைய மாநில சர்க்காருக்கு இன்றைக்கும் இருக்கிறது. ஆனால், நமது சர்க்கார் தன் கடமையில் தவறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. வெளி நாட்டிலே இருந்து இந்த நாட்டுக்குப் போக்குவரத்து இல்லாமல் தமிழர்கள் கஷ்டப்படுகிறார்கள் ; அதைப்பற்றி எடுத்துக் கூற கனம் முதல் அமைச்சர் முழு முயற்சி எடுக்கவேண்டும். அப்படி எடுக்கத் தவறினால் வெளிநாட்டுத் தமிழர்கள் உரிமைகள் புறக்கணிக்கப்படும் சூழ்நிலைதான் உருவாக்கப்பட்டு வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய இந்திய நாடு விடுதலை பெற்றபோது, காங்கிரஸ் கட்சியின் அடிப்படை நோக்கம் அரசியல் அமைப்பு ஒரு ஃபெடரல் அமைப்பாக இருக்கவேண்டும் என்பதுதான். கூட்டாட்சி என்ற வகையில் தான் விடுதலைக்கு முன்னால் தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போதும், அதேதான் நிலைமை. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமை என்னவென்றால், ஃபெடரல் என்ற நிலைமை மாறி, யூனிடரி கான்ஸ்டிட்யூஷன் என்ற அமைப்பை இன்றைக்கு உருவாக்கிக்கொள்ள மத்திய அரசு முயற்சி எடுக்கிறது. இந்த மாநில சர்க்காரைப் பொறுத்த வரையில், அரசியல் அமைப்பில் அவர்களுக்கு உள்ள உரிமையை விட்டுக்கொடுக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை இங்கே வைக்க விரும்புகிறேன். அவர்களெல்லாம் ஒரே கட்சி. மத்திய சர்க்காரிலும், மாநில சர்க்காரிலும் அவர்களேதான் ஆட்சியில் இருப்பதால், அந்தக் காரணத்தால், இப்படிப் பட்ட நிலைமைதான் இருக்கிறதோ என்று அச்சம் ஏற்படுகிறது. மாநில சர்க்கார் தங்களுடைய உரிமைகளைப் பாதிக்கும் அளவில் எந்த ஏற்பாட்டையும் ஒருக்காலும் ஒத்துக்கொள்ளக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய சர்வீஸ் பற்றிச் சொல்லவிரும்புகிறேன். அப்படிப் பல்வேறு போஸ்டுகள் இருக்கின்றன. ஐ.பி.எஸ். ஐ.ஏ.எஸ், முதலிய போஸ்டுகள் இருக்கின்றன. இவை ஏற்கனவே இருக்கும் சர்வீஸ்கள். இன்றைக்கு மேலும் பல சர்வீசுகளைத் தங்களிடத்தில் வைத்துக்கொள்ள, தீர்மானங்கள் கொண்டுவாருங்கள் என்று மாநில சர்க்கார்களைக் கேட்டுக் கலந்து பேசுகிறார்கள். நம்முடைய சர்க்கார் ஒரளவுக்கு முதலில் சண்டை போட்டாலும் கூட, பின்னால் ஒத்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிடுகிறார்கள். இறுதி முடிவு என்ன ? பல சர்வீஸுகள் அகில இந்திய சர்வீஸாக மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நிலைமை உருவாகி வருகிறது. கல்வியைப் பொறுத்த வரையில், முதல் அமைச்சர் அவர்கள் அறிவார்கள், அரசியல் அமைப்பில் தெளிவாக இருக்கிறது. அது மாநில அரசின் பொறுப்பு, அந்த நிலைமையை மாற்றக் கூடிய சூழ்நிலை கூட, ஏன், அரசியல் அமைப்பையே திருத்தலாம் என்ற கருத்துக் கூட, பாராளுமன்றத்திலேயும், வெளியிலேயும் பிரசாரம் செய்யும் நிலைமை உருவாகி வருகிறது. முதல் அமைச்சர் அவர்கள் சென்னையிலே, சட்ட சபையிலே சொல்லலாம். ஆனால் அரசியல் அமைப்பைத் திருத்தக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு கருத்தை வலியுறுத்தும் நிலைமை நம் சர்க்காருக்கு ஏற்படவில்லை, நம் சர்க்கார் அத்தகைய நிலையைப் பெறவில்லை. இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக் கோர முற்பட்டால், கல்வியை மத்திய சர்க்காருக்கு விட்டு விடுமோ நம் சர்க்கார் என்ற அச்சம் மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? உண்மையான கூட்டாட்சி இருக்கவேண்டுமானால், அதிகாரங்களைப் பிரித்து, விட்டுக் கொடுக்கும்

நிலை, அந்த அளவுக்கு அமையவேண்டும், செயல் படவேண்டும். எதற்கு எடுத்தாலும் நம் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரையே எதிர்பார்க்க வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறார்கள். இன்றைக்கு ஃபைனான்ஸ் கமிஷன் வருகிறது என்றால், அதற்கும் சென்று நம்முடைய குறைகளை அவர்களிடம் சொல்லுகிறோம் என்ற நிலைதான் இருக்கிறது. நமக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால், அது குறைக்காமல் கொடுக்கப்படவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம், அல்லது கிடைக்கவில்லை என்று திரும்பிவரும் நிலையைத்தான் பார்க்கிறோம். திட்டங்கள் போடுவது பற்றி, . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஃபைனான்ஸ் கமிஷன் கூட்டம் இப்பவும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அங்கே அவர்களிடம் என்ன சொல்ல வேண்டும் என்று கனம் அங்கத்தினர் விளக்கம், யோசனை கூறினால், அதையும் யோசித்துச் செய்யலாம். ஃபைனான்ஸ் கமிஷனுக்கே போகக்கூடாது என்று சொன்னாலும், அதையும் யோசிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** திட்டங்களைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாநிலத்திற்கு திட்டக் குழு வேண்டும் என்று சொன்னோம். அதைக் காங்கிரஸ் கட்சியிலேகூட தலைவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். நாம் மட்டுமல்ல, பாராளுமன்றத்திலே, இது வ சொல்லப்படிருக்கிறது. இதுவரைக்கும் நம்முடைய சர்க்கார் அந்தப் பிரச்சினையை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்துவேயில்லை. இதுவரை போட்டது எல்லாம், மந்திரிகள் அல்லது அலுவலர்கள் இவர்கள் போடும் திட்டமாகவே இருந்து இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு ஒரு திட்டக் குழு தேவையா இல்லையா என்று பரிசீலிக்க இந்த சர்க்கார் மறுக்கிறது.

ஃபைனான்ஸ் கமிஷனைப் பொறுத்த மட்டில், நமக்கு நிதி வழங்க மத்திய சர்க்கார் வழிவகை செய்வது அவர்களைப் பொறுத்தது. அதிகம் ஒதுக்கும் நிலையில் இல்லை. மூன்றாவது கமிஷனுக்கு மாநில சர்க்கார் வேண்டுகோள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பணம் ஒதுக்குவது சரியான முறையில் பார்த்துச் செய்யப்படவில்லை என்று கூற விரும்புகிறேன். காங்கிரஸ் தலைவர் கூட பாராளுமன்றத்திலே இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த முறையிலே மத்திய சாக்காரோடு போராடக்கூடிய உரிமையை இந்த சர்க்கார் இழந்து வருகிறது. அரசியல் சட்டத்தைப் புறக்கணிக்கும் முறையில் நடந்து வருகிறது.

ஆல்-இந்தியா சர்வீஸ் பொறுத்தவரையில், மாநில சர்க்காரை அரசியல் அமைப்பில் இருக்கும் உரிமைக்காகப் போராடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு ஃபாரஸ்ட் சர்வீஸ், எஜுகேஷனல் சர்வீஸ், இவைகளை ஆல்-இந்தியா சர்வீஸ் ஆகச் செய்யப் போகிறார்கள். அப்படி ஒவ்வொரு சர்வீசாகக் கொடுங்கள், கொடுங்கள் என்று திட்டம் போடுவார்கள். இந்த முயற்சியை மாநில சர்க்கார் தடுக்கவேண்டும் என்றுதான் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

இந்தக் கருத்துக்களைக் கூறும்போது, இந்திய ஒருமைப்பாடு (நாஷனல் இன்டெக்ரேஷன்) என்ற கருத்தை நாம் சிந்திக்க வேண்டும். அதில் தத்துவ ரீதியாகக் கொள்கை வேறுபாடு இருந்தாலும் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. கூட்டாட்சியாக இருந்தால் ஒருமைப்பாடு வராது, யூனிடரி கான்ஸ்டிட்யூஷன் இருந்தால்தான் ஒருமைப்பாடு வரும் என்ற நிலையை நம்முடைய மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்கிறதா ? அப்படி ஏற்றுக்கொண்டால், ஏற்கனவே இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கூட்டாட்சித் தத்துவத்தை ஆளுங்கட்சியாகவுள்ள காங்கிரஸ் கட்சியும், சர்க்காரும் ஒத்துக்கொண்டதே, அது இல்லை என்று மறுக்க ஆசைப்படுகிறதா ? **Unity**-க்கும் **Uniformity**-க்கும் வேறுபாடு இருப்பது நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். நாம்



கூட்டாட்சியாக இருப்போம். அப்படி இருந்தும் கூட, ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெளிவாகக் கூற ஆசைப்படுகிறேன்.

எதிர்க் கட்சியினரும் ஆளும் கட்சியினரும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல முன்மாதிரி (precedent) இன்றைக்கு ஆளும் கட்சியினர் நம்முடைய நாட்டு மக்களுக்குத் தந்து செல்லவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். எதிர்க்கட்சியிலே உள்ள அங்கத்தினர்களைக் கூட மதிக்காத சூழ்நிலை இன்றைக்கு ஆளும் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைப் பல முறை நாங்கள் கூறியிருக்கிறோம். எதிர்க் கட்சிகள் உண்மையிலேயே நல்ல முறையில் வேலை செய்யவேண்டுமென்றால்,—எதிர்க்கட்சியைக் கூட நான் சொல்லவில்லை—இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களாவது மிக நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்கு ஏற்ற வாய்ப்பு வசதி செய்து கொடுக்கவேண்டும். அவர்களுக்கெல்லாம் புள்ளி விவரம் சேகரிக்கக்கூடிய ஒரு இலாகாவைத் தோற்றுவிக்கவேண்டும். இன்றைக்கிருக்கக்கூடிய சட்டசபை இலாகா போதுமான அளவு விரிவடையவில்லை. இங்கு இருக்கக்கூடிய லைப்ரரியில் கூடப் போதுமான வசதி இல்லை என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அரசாங்க இலாகாக்களில் உள்ள குறைபாடுகளை எடுத்துச்சொல்லும் போது, மந்திரிகள் தவறு செய்வதாக நாங்கள் சொல்வதாகக் கருதி விடக் கூடாது. ஒரு சட்டமன்ற அங்கத்தினருடைய தொகுதியில் உள்ள அரசாங்க அதிகாரி ஏதாவது தவறு செய்கிறார்கள் என்றால், அதை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு அந்தச் சட்டமன்ற அங்கத்தினருக்குத்தான் இருக்க முடியும். இதை எதிர்க் கட்சியிலிருந்து சொன்னால் கேட்கக்கூடாது என்ற சூழ்நிலை இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்தில் **1962**-ம் ஆண்டிலிருந்து சொல்லி வருகிறேன். போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டுவதற்காக மனை வாங்கியதில் ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தைப் பன்னிரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இன்றைய முதலமைச்சர் அன்று போலீஸ் இலாகா அமைச்சராக இருந்தார். அப்பொழுது பதில் சொன்னார்கள், 'கவனிக்கிறோம், விசாரிக்கிறோம்,' என்று. நம்முடைய அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்களும் இருந்தார்கள். அவர்களும் சொன்னார்கள், 'கவனிக்கிறோம்' என்று. இந்தச் சட்டசபையிலே அவ்வாறு சொல்லியும், இன்னும் கான்ஸிடரேஷனிலேயே இருக்கிறதே தவிர, இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் சொல்வதால் இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான விண்ணப்பம்.

எலெக்ஷன் நடத்துவதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். எலெக்டோரல் ரோல் தயார் செய்வதிலே மிகுந்த தவறு ஏற்பட்டிருக்கிறது என்று அண்மையில் உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது. மக்களுடைய தவறா ? அரசியல் கட்சியினுடைய தவறா ? அரசாங்க இலாகாவினுடைய தவறா ? என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை. எலெக்டோரல் ரோல்ஸைத் திருத்தவேண்டும் என்று, ரிவிஷன் ஆப் எலெக்டோரல் ரோல்ஸைப் பற்றி ஒரு ப்ரொவிஷன் இருக்கிறது சட்டத்திலே. தவறைத் திருத்திவருகிறார்கள். இருந்தாலும் நூற்றுக்கணக்கான பேர்கள், ஆயிரக்கணக்கான பேர்கள் கூட—இறந்தவர்கள் பெயர்கள்—ஒரு தொகுதியிலேயே வாக்காளர் பட்டியலில் இன்றைக்கும் இருக்கும் சூழ்நிலை இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. இதை உயர்நீதிமன்றமும் சுட்டிக்காண்பித்திருக்கிறது. அதையும் நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

குளித்த சின்னசாமி, அரங்கநாதன் போன்றவர்களுடைய செயல்களைப் பெருமையோடு பாராட்டிக்கொண்டார்கள். இந்தவிதமான கிளர்ச்சியைச் செய்துகொண்டு காங்கிரஸ் ஆட்சி செய்யத் தவறிவிட்டது என்று அளவிற்குத் தங்களுடைய போக்கை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் 1954-ல் என்ன முடிவு எடுத்துக்கொண்டது என்பதை நாம் இன்றைக்குச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்தின் · பெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்கள், "இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுமானால், அதை எதிர்த்துப் போராடப் போகிறவர்கள் நாம் தான்" என்ற அடிப்படையிலே, 1965 ஜனவரி 26-ந் தேதிக்குப் பிறகு மத்திய ஆட்சியிலே நேரு அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்ட நேரத்திலே துணிவாக "ஆட்சி மொழிச் சட்டத்தை மாற்றியே தீரவேண்டும்" என்று தலைவர் திரு. காமராஜ் அவர்களும் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களும், மற்றும் பெரும் தலைவர்களும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

மாணவர்கள் முதலமைச்சரைச் சந்தித்தபோது கூட, இரண்டரை மணி நேரம் விவாதம் நடந்தபோது, ஆட்சி மொழிச் சட்டத்தை மாற்றுவதற்கான அத்தனை முயற்சிகளும் எடுத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லி டெல்லிக்குத் தாக்கீது அனுப்பிக்கொண்டிருந்தார்கள். முதல் அமைச்சர் மாநாடு கூடவிருக்கிறது. முதல் அமைச்சர் மாநாட்டிலே கலந்துகொண்டு, அதிலே தங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. அதிலே கூட ஆட்சிமொழிச் சட்டத்தை மாற்றித்தான் தீரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பாகவே, மத்திய சட்ட அமைச்சர் திரு. சென் அவர்கள் திருத்தத்தின் வாசகத்தை அளிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அப்படிப்பட்ட திருத்தம் பிரேரேபிக்கப்பட்டபோது கூட முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் துணிவாக, திறமையாக இந்தி பேசாத மாநிலங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளும் வரையில் இந்தியோடு ஆங்கிலமும் நீடித்துத்தான் இருக்கவேண்டும் என்ற திருத்தத்தை அங்கே கொடுத்திருக்கிறார்கள். வங்க முதல் அமைச்சரும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அது போன்று இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படும் என்ற சூழ்நிலை உருவாகின்ற நேரத்திலே தைரியமாக எதிர்த்து நின்று, நாட்டிலே சுமுகமான சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர்கள் இந்தக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் என்பது மட்டுமல்ல, 1954-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகள் இந்தியிலே மட்டுமல்லாமல், மற்ற மாநில பாஷைகளிலும் நடத்தித்தான் ஆக வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தெளிவாகத் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியது. என்னுடைய நண்பர்களுக்கு வருத்தம் இருக்கலாம். அங்கலாய்ப்பு இருக்கலாம். மத்திய கமிட்டி தீர்மானம் இயற்றி, மத்திய மந்திரி சபை அதை ஆலோசிக்கச் செய்கிற அளவுக்குக் காங்கிரஸ் கட்சியிலே கட்டுப்பாடு, கண்ணியம் இருப்பதைப் பார்த்து, அங்கலாய்ப்பு அவர்களுக்கு இருக்குமானால், அதற்காக
நான் வருத்தப்படவில்லை. காரணம் அவர்களுக்குத் தெரியும். சாதாரண 12-00 noon.
மாக சென்னை கார்ப்பரேஷன் மேயர் தேர்தலில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகக் கட்சி பிரிந்து எதிர்க்கட்சியினர் துணை கொண்டு எப்படியாவது பதவியைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்றஆர்வம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பதை நாம் பார்க்கிறோம். தங்களுக்குள்ளே இருக்கிற கோஷ்டி பூசல், தங்களுக்குள்ளே இருக்கிற பலவீனங்கள் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு இன்றையதினம் கட்டுப்பாடாக இயங்கி வருகிற காங்கிரஸ் கட்சியைப் பார்க்கிறபோது அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இன்றையதினம் கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் மிகவும் அங்கலாய்ப்பு அடைந்தது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. காரணம் எதை எடுத்தாலும் இது இடது சாரியா, வலது சாரியா, இடது கை செய்வது வலது கைக்குத் தெரியக் கூடாது, வலது கை செய்வது இடது கைக்குத் தெரியக் கூடாது என்ற கருத்தில் புதிய புதிய காரணங்களைக் கற்பித்தார்கள். திராவிட முன்னேற்

9th March 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

அழுத்தமான வருத்தத்தை இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்கிறேன். நெடுநாளைய பிரச்சினை, பெரிதும் பாதிக்கக்கூடிய வகையில் அவசரம் அவசரமாக இரண்டு மூன்று மாதங்களிலே தீர்க்கப்பட வேண்டிய காரணம் என்ன ? அதற்கு அவசர அவசியம் என்ன ? நம்முடைய நாட்டவர்கள் இலங்கையையும் இந்தியாவையும் சேர்த்து பிரிட்டிஷ்காரர்கள் ஆண்ட காலத்தில் அங்கே போய்க் குடியேறினார்கள். இன்றைக்கு வெள்ளையர்கள் வெளியேறிவிட்டார்கள். ஆனால் இந்தியாவிலிருந்து சென்றவர்களுடைய இந்திய சந்ததியினர் இன்று அங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பாதிக்கப்படுகிறபோது நாம் அதைப் பற்றி எங்கே விவாதிக்க வேண்டும் ? காமன்வெல்த் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம், வெள்ளையர்களிடமிருந்து விடுதலை பெற்ற இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் எல்லாம் காமன்வெல்த் சபையின் உறுப்பினர்கள். பிரிட்டனும் அதில் இருக்கிறது. அங்கல்லவா இந்தப் பிரச்னையைப் பற்றி பேசி இருக்க வேண்டும் ? அங்கல்லவா இவர்களுடைய நிலையைப் பற்றி விவாதித்திருக்க வேண்டும் ? ஏன் அங்கே முயற்சி செய்யாமல் அவசர அவசரமாக இன்றைக்கு இருக்கிற சர்க்காரிடத்தில் நமக்குச் சம்பந்தம் இல்லாத ஒருவரைப் பற்றி எப்படி முடிவு செய்தார்கள் என்கிற என்னுடைய ஆட்சேபத்தைத் தெரிவிக்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நேரத்தில் ஐக்கிய நாட்டுச் சபைக்கு இந்தப் பிரச்னையை ஏன் எடுத்துப் போகக் கூடாது என்கிற கருத்து பேசப்படுகிறது. ஐக்கிய நாடு சபை நாடற்றவர்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை, இதை ஐக்கிய நாட்டு சபை எப்படித் தங்களுடைய விதி முறைப்படி விவாதிப்பது என்பதற்கு வகை செய்திருக்கிறது. குறிப்பாக அந்தச் சபையின் விதி முறைகளைப் பற்றி ஒன்றிரண்டு ஷரத்தை உங்கள் மூலமாகச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"The International Law Commission selected nationality including statelessness as a topic for codification at its first session in 1949. It prepared Draft Conventions on the Elimination of Future Statelessness and on the Reduction of Future Statelessness. The preambles after referring to the Universal Declaration of Human Rights proclaimed that everyone has the right to a nationality." என்பதாக உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு நாட்டு குடிஉரிமை வேண்டும் என்பதாகப் பிரகடனப்படுத்துகிறது.

"**Article 1 of the Draft Convention on the Reduction of Future** Statelessness provides that a child who would otherwise be stateless shall acquire at birth the nationality of the party in whose territory it is born."
என்பதாக குடியுரிமை கூறப்பட்டுள்ளது.

"Under Article 2 any person born on board a vessel at sea shall have the nationality of the State whose flag the vessel flies". என்பதாகக் கப்பலில் போகிறபோது கப்பலில் குழந்தை பிறந்திருந்தால் அந்தக்கப்பலில் பறக்கும் கொடி எதுவோ அதனுடைய நாட்டில் அந்தக் குழந்தைக்கு குடி உரிமை உண்டு.

"Under Article 3 if such birth takes place on board an aircraft, nationality is to be that of the place where the aircraft is registered".

என்பதாக விமானத்தில் போகிறபோது குழந்தைபிறந்தால் அந்த விமானம் எந்த நாட்டில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு இருக்கிறதோ அந்த நாட்டில் அந்தக் குழந்தைக்குக் குடியுரிமை உண்டு. இப்படி இன்னும் பல நல்ல ஷரத்துக்களை இந்தச் சிக்கலுக்கு வழி காணுகின்ற ஷரத்துக்களை ஐக்கிய நாடு சபை வரையறுத்திருக்கிறது.

" No person is to be deprived of his nationality on racial, ethnical, religious or political grounds ".

என்பதாக எந்த ஒரு மனிதனுக்கும் அரசியல் காரணமாகவோ, இன மொழி காரணமாகவோ, மதம் காரணமாகவோ, குடி உரிமை பறிக்கப்படக் கூடாது என்று சொல்லிவிட்டு

" A special agency has been envisaged within the United Nations to enforce the above recommendations and hear complaints of the individuals concerned."

என்று வகை செய்திருக்கிறபோது இது பற்றி ஐக்கிய நாட்டுச் சபையில் இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இவர்கள் எப்படி ஒப்பந்தம் செய்துகொள்ள முடியும் என்று கேட்க விரும்புகிறேன். நமக்கு சம்பந்தம் இல்லாதவர்களை எடுத்துக்கொள்ள நமக்கு எப்படி உரிமை இருக்கிறது ? தென்னாப்பிரிக்கா பிரச்சினையை இந்தியா ஐக்கியநாட்டுச் சபைக்கு எடுத்துச் செல்லவில்லையா ? அங்கே தென் ஆப்பிரிக்க நிற வெறிப் பிரச்னையைப் பற்றி அவர்களுக்காக பேசினோம். ஆனால், துரதிருஷ்டம் பிடித்த இந்த நாட்டைச் சேர்ந்தவர்களுடைய பிரச்னையை அங்கே கொண்டு செல்லவில்லை. ஏன் ? கொண்டு சென்றால் என்ன ? என்ன குடி முழுகிப்போய்விடும் ? என்ன தவறு நடந்திருக்கும் ? அது மட்டுமல்ல. சர்வதேச அரங்கில் தங்கள் அரசியல் சல்லாபத்திற்காக இலங்கை சர்க்காருடன் இந்திய சர்க்கார் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கையில் பகடைக் காய்களாகத் தமிழர்களை வெட்டிச் சாய்ப்பதற்கு இந்த மாநில அரசு உடன்பட்டிருக்கிறது. எனவே, இந்தப் பிரச்னையைச் சரியாகக் கவனிக்கத் தவறி விட்டது இந்த அரசு. இனிமேலாவது, இதைக் காமன்வெல்திற்கு எடுத்துக்கொண்டு போய் விவாதிக்க வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளில் இந்த அரசு இனிமேலாவது ஈடுபடவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இன்னொரு மிக முக்கியமான பிரச்னையான மொழிப் பிரச்னையைப் பற்றி என்னுடைய கருத்துக்களை இந்தச் சபையின் முன்பு வைக்கிறேன்.

இன்றைக்கு எல்லோராலும் மிக வருத்தத்துடன் பேசப்படுவது இந்த மொழிப் பிரச்னைதான். " பர்னிங் ப்ராபளம் " பற்றி எரிகிற பிரச்னை என்று சொல்லப்படுகிற இந்தப் பிரச்னையின் மீது சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அபிஷியல் லாங்குவேஜ் பாலிஸியைப் பற்றி எப்ரல் 2-ம் தேதி விவாதித்துக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 2-ஆம் தேதியல்ல. முதல் தேதி விவாதிக்கப் போகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** முதல் தேதி நான்-அபிஷியல் டே அன்று வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முதலமைச்சர் அவர்கள் மீது இப்பொழுது எல்லாம் கோபம் வருவதில்லை. பரிதாபந்தான் வருகிறது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் கோபாவேசத்துடன் இருக்கிறார்கள். அதைப் பார்க்கும் பொழுது எனக்கு மிகுந்த வருத்தம்தான் ஏற்படுகிறது. இந்த மொழிப் பிரச்னை ஒரு கட்சிப் பிரச்னையல்ல. இந்தப் பிரச்னை கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு பிரச்னையாகும். இந்தியாவினுடைய ஐக்கியமா ? ஹிந்தியா? இதுதான் பிரச்னை. ஹிந்தியா? தமிழா? என்பது அல்ல பிரச்னை. ஐக்கியமா ? ஹிந்தியா என்பதுதான் பிரச்னை. இதைப்பற்றி இந்த அரசாங்கம் முன்பே விவாதித்து இருக்க வேண்டாமா? பிப்ரவரி 27, 28 தேதிகளில் கூடி இது பற்றி விவாதித்திருக்க வேண்டாமா?

இப்பொழுது நான் ஒரு திருப்பத்தைப் பார்க்கிறேன். ஒரு மாற்றத்தைப் பார்க்கிறேன். டில்லி நகரில் மாநாடு நடந்த சமயம் நான் அங்கே போயிருந்தேன். அப்பொழுது அந்தத் திருப்பத்தை, மாற்றத்தைப் பார்த்தேன். தவறு செய்வது இயற்கைதான். ஆனால் தவறுதலைத் திருத்திக் கொண்டு மாநிலத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.



டில்லியில் மராட்டியத்தைச் சேர்ந்தவர்கள், வங்காளம், ஆந்திரம், கேரளம், பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள், ஹிந்தி வெறியர்கள் ஆகிய 100-க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை நான் சந்தித்தேன். பார்லிமெண்ட் மந்திரி திரு. சத்தியநாராயணசின்ஹா, திரு. மகாவீர்தியாகி, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களையும் சந்தித்தேன். கனம் முதலமைச்சரிடமும் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்பட்டிருக்கிற மாற்றத்தைப் பார்த்தால் கனம் பக்தவத்சலத்திற்கு ஒரு மாலை கூடப் போடலாமா என்று நான் ஆசைப்பட்டேன். ஆனால் 150-க்கும் மேலாக பிணங்கள் இங்கே குறுக்கே விழுந்துகிடக்கின்றன. அந்த நிகழ்ச்சி என்னைத் தடுத்து விட்டது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யசோதா ரெட்டி அம்மையார் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசியதைப்போல் இந்தியை எதிர்த்து இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூடப் பேசியிருக்க மாட்டார்கள். பொள்ளாச்சி உறுப்பினர் திரு. மகாலிங்கம் அவர்கள் உரையை விடவா அழுத்தமாகச் சொல்லிவிடப் போகிறோம் ? அந்த அளவுக்கு அங்கும் இங்கும் பேசினார்கள். ஆகவே, இன்றைக்கு இந்தப் பிரச்னை அவசரமாக, முக்கியமாகத் தீர்வு காணப்படவேண்டிய பிரச்னையாக இருக்கிறது. இது பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் ராஜ்ய சபையில் விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திருமதி இந்திரா காந்தி கூடச் சொல்லியிருக்கிறார்கள். " அண்ணாத்துரையினுடைய பிரசங்கம் என்னை மிகவும் கவர்ந்தது ; ஹிந்தி பேசாத மக்களை அந்தக் கருத்திற்கு உடன்படச் செய்யவேண்டிய வேலை எனக்கு இருக்கிறது " என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** அண்ணாத்துரை அவர்கள் காங்கிரஸ் ஹிந்தியைத் திணிக்காவிட்டாலும், தான் திணிக்கப்பாடுபடுவதாகத் தானே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் சொன்னது................ (மணி அடிக்கப்பட்டது).

**திரு. கே. ஏ. மதியழகன் :** இன்னும் கொஞ்ச நேரத்தில் முடித்து விடுகிறேன். ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். பாராளுமன்றக் கீழ் சபையில் திரு. மனோகரன் அவர்களும் இது பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** நேற்று நடந்த டிபேட்டில் சபையில் இல்லாதவர் பெயரைப் பற்றி இங்கே சொல்லக் கூடாது என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்புச் சொன்னார்கள். ஆளும் கட்சி அங்கத்தினராக இருந்தாலும் சரி, அவர் கனம் உறுப்பினர்தான். எதிர்க் கட்சி அங்கத்தினராக இருந்தாலும் சரி, அவரும் கனம் உறுப்பினர்தான். ஆகவே, சபாநாயகர் அவர்கள் நேற்றுக் கொடுத்த தீர்ப்பில் சபையில் இல்லாதவருடைய பெயரை இங்கு குறிப்பிடக் கூடாது என்று குறிப்பிட்டார்கள்.

**கனம் உதவி சபாநாயகர் :** அங்கத்தினர் பெயரைக் குறிப்பிடவேண்டுமென்று குறிப்பிடவில்லை. விவாதத்தின் சாராம்சத்திலே பெயர் வந்து விட்டது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். ராஜாஜி இங்கிலீஷ் ஃபார் எவர் என்று சொல்வதை திராவிட முன்னேற்றக் கழகம் அன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை, இன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை,என்றும் ஏற்றுக்கொள்ளாது. லோகியா சொல்கிறார், ஹிந்தி வேண்டும், 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாகவும் இந்தி மத்தியிலே இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும் என்று சொல்கிறார். அதுவும் எங்களுக்கு உடன்பாடு அல்ல. கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையும் எங்களுக்கு உடன்பாடு அல்ல. முதலமைச்சர் அவர்கள் கூறும், பைலிங்குவலிஸம், மும்மொழிக் கொள்கை என்பதும் இந்தப் பிரச்னைக்கு ஏற்ற பரிகாரம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை 14 மொழிகளும்

டில்லியில் ஆட்சிப் பீடத்திலே ஆட்சிமொழியாக ஆகவேண்டும் என்பது
தான். இன்றைக்கு முதலமைச்சர் உறுதி சொல்லட்டும் ; இன்றைக்கு
வாக்குறுதி அளிக்கட்டும் ; அதை டில்லிக்காரர்கள் ஒத்துக்கொள்ளட்டும்,
பதினன்கு மொழிகளையும் டில்லியிலே ஆட்சி மொழியாக்குவது என்று
உறுதி சொல்வார்கள் என்ருல், நான் கூறுகிறேன், எங்கள் தலைவர்
அறிஞர் அண்ணாவின் அனுமதியுடன் கூறுகிறேன், அந்த இடைக்காலத்
திலேகூட ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடித்து இருக்கவேண்டிய அவசியம்
இல்லை. வீணுக எங்களை ஆங்கில ஆதரவாளர்கள் என்று பழி சுமத்தா
தீர்கள்.

முன்னுள் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.
19 மொழிகள் ஹங்கேரி நாட்டில் ஆட்சிமொழியாக இருந்தன என்று
சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு கண்டு
ஐக்கியத்தைக் காப்பதற்கு முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நமது மாநிலத்தில் தமிழை ஆட்சி மொழியாக
அலுவலகங்களில், கல்லூரிகளில் செயல்படவில்லை. வழக்கு மன்றத்திலே
தமிழ் செயல்படவில்லை. ஆகவே, விரைவில் எல்லா இடங்களிலும் தமிழ்
ஆட்சிமொழியாகப் பெயரளவிற்கு இல்லாமல் உண்மையில் செயல்பட
வேண்டும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** இங்குத் தமிழ்தான் ஆட்சி
மொழியாக இருக்கிறது. அப்படியிருக்க அங்கத்தினர் தெரியாமல் பேசு
கிருரா ? அல்லது புரியாமல் பேசுகிருரா ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மையார் அவர்கள் புரிந்து கொள்ள
வேண்டிய விவரங்கள் எவ்வளவோ உள்ளன. தமிழ் டில்லியிலே ஆட்சி
மொழியாக இருக்கவேண்டுமென்பது என்வாதம். உத்திரப் பிரதேசக்
காரன் மொழி மட்டும் இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இருக்க
வேண்டாம் ; தமிழும் இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியாக இருக்க
வேண்டும். இதுதான் எங்கள் தெளிவான, திட்டவட்டமான கொள்கை,
கோரிக்கை. ஆகவே, திசை திருப்ப முயற்சிக்காமல் இந்தப் பிரச்னையில்
ஆக்கப் பூர்வமான தீர்வு காண காலம் தாழ்த்தாமல் தமிழை இந்தியப்
பேரரசின் ஆட்சிமொழியாகக் கொண்டு வருவதற்கான எல்லா முயற்சி
களிலும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை
முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கை
கள் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த
ராஜ்யத்திலே பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும், ஸ்தல
ஸ்தாபனங்களிலும் வேலை செய்யக்கூடிய பணியாளர்களுக்குப் பஞ்சப்படி
கொடுக்காமல் இருந்து வருவது அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி
யிருக்கிறது. அவர்களுக்கும் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிபெயர்ப்பு நெறியாளர்கள் அலுவலகத்திற்கு அதிகமான
தொகையைச் செலவிட்டுக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிராமப்
புறங்களை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த
ஹரிஜனங்கள் நிர்வாகத்திலே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்
கிறது. கேள்வி நேரத்திலே பதில் கூறும்போது அங்கெல்லாம் சன்னம்
சன்னமாக தமிழ் கொண்டுவரப்படும் என்று கூறினர்கள். ஹரிஜன
நல இலாகாவில் இருந்து எழுதக்கூடிய கடிதப் போக்குவரத்து அனைத்தை
யும் தமிழிலே இருக்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்
கொண்டார்களானல் மிகவும் உதவிகரமாக இருக்கும். அதே போன்று
கூட்டுறவுத் துறையிலும் அதிகமாக எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்
பொறுப்பு வகிக்கிருர்கள். அந்தத் துறையிலும் தமிழிலே கடிதப்
போக்குவரத்து நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.





சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்க
வேண்டுமென்பதற்காக புதிய சட்ட மன்ற விடுதி கட்டுவதற்குத் திட்டமிடப்
பட்டிருக்கிறது. ஆயினும் இப்போது இருக்கக்கூடிய கட்டிடத்தை எடுத்துக்
கொண்டால், பழைய ஹாஸ்டலை எடுத்துக்கொண்டால் ஏதோ ஆஸ்பத்திரி
யில் படுக்கைகளைப் போட்டிருப்பது போன்று ஒரே ரூமில் எட்டு பேர், பத்து
பேரை அடைத்து வைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே
சில அறைகளில் விற்பனை வரி அலுவலகம் போன்றவற்றை வைத்திருக்
கிருர்கள். அவர்களுக்கெல்லாம் வேறு இடம் கொடுத்தால் இன்னும்
பத்து இருபது பேர் ஹாஸ்டலில் தங்க வசதி ஏற்படும். சட்ட மன்ற
அங்கத்தினர்கள் வந்த அன்று ரூம் இல்லாமல் இரண்டு மூன்று நாட்
களுக்கு வராண்டாவிலே தங்கவேண்டிய நிலைமைகள் கூட ஏற்படுகின்றன.
அந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் பல கமிட்டிகளில் அங்கம் வகிக்கிருர்கள்.
அவர்களுக்குப் பிரயாணப்படி கொடுக்கப்படுகிறது. அதைப் பெற பாரங்
களைப் பூர்த்தி செய்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி அங்கிருந்து சரி
பார்த்து திரும்பி வருவதற்கு இரண்டு, மூன்று மாதங்கள் ஆகின்றன.
அந்த மாதிரி வந்தால்கூட சில சமயங்களில் சரியாக இருப்பதில்லை.
அதனல் கஜானக்களில் இருந்து திருப்பி அனுப்பிவிடுகிருர்கள். இப்படி
ஒரு வருஷத்திற்கு மேல் கூட ஆகி விடுகிறது. அந்த நிலைமை இல்லாமல்
செய்வதற்குக் கையில் பணமாகக் கொடுத்து விடுவது பற்றி யோசிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலை மூன்று மாதங்களுக்கு மேலாக ஒத்தி
வைத்துக்கொண்டே போகிருர்கள். பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்தல்
முடிந்த உடனேயே தலைவர்களையும் தேர்ந்தெடுக்கக்கூடிய வகையில்
மக்களே தலைவர்களையும் தேர்ந்தெடுப்பதாக இருந்தால இந்த நிலைமை
ஏற்பட்டிருக்காது. அதோடு சிலர் காலமானல் கூட ஆச்சரியப்படுவதற்
கில்லை. பொதுவாக வேலைகள் எல்லாம் சீக்கிரமாக மேற்கொள்ளப்படு
கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்கிருர்கள். நான் கேட்ட ஒரு
கேள்விக்கு 1962-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதி கனம் உள்துறை
அமைச்சர் அவர்கள பதில் சொல்லியிருக்கிருர்கள். "ஈரோடு தாலூகா
வில் மூன்று குளங்களை மராமத்து செய்வது பரிசீலனையில் இருக்கிறது"
என்று அன்றுகேட்ட கேள்விக்குப் பதில் கொடுத்தார்கள். இன்றுகூட
அதே பதிலைத்தான் சொல்லுகிருர்கள். இவ்வாறு ஆண்டுக் கணக்கிலே
பரிசீலனையிலே இருப்பதால் காரியங்கள் நடைபெற அதிகத் தாமதம்
ஏற்படுகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** இன்று நான் முழு விவரத்தையும் சொல்லி
யிருக்கிறேன். இதிலே பரிசீலனை முடிந்து கலெக்டர் சம்மதமும், எஞ்சி
னியர் சம்மதமும் பெறும் நிலையிலே இருக்கிறதென்று தெரிவித்துக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த மாதிரிக் காரியங்களில் எல்லாம்
இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய சட்ட அவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள
வெட்டுப் பிரேரணைகளையொட்டிச் சில கருத்துக்களை வழங்க நான் முற்படு
கிறேன். சட்ட மன்றத் துறையைப் பற்றிய மானியக் கோரிக்கை, இந்த
மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரை
யிலே மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவுபடக்
கூறியிருக்கிருர்கள். இந்த மன்றத்தின் மதிப்பு காப்பாற்றப்படவேண்டும் ;
மன்றம் செம்மையாக நடத்திச் செல்லப்படவேண்டும் ; ஜனநாயகம் இதன்
மூலமாக நல்ல முறையிலே நிலை நிறுத்தப்படவேண்டுமென்பதிலே

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1965

திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந் திருத்தமான நம்பிக்கையை வைத்து, அந்த முறையிலேயே செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை எப்படி இந்த மாநிலம் ஆளப்படவேண்டும்; எப்படிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆளப்படவேண்டுமென்பதை இந்த மன்றம் முடிவு செய்கிறது. இந்த மன்றத்தின் முடிவுகள் தான் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தை இயக்கி, நாட்டிலே செய்யப்பட வேண்டிய செயல்களுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, இந்த மன்றத்தை அடிக்கடி கூட்ட வேண்டியதன் அவசியத்தை வெட்டுப் பிரேரணை ஒன்றின் மூலமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். அடிக்கடி இந்த மன்றத்தைக் கூட்டுவதன் மூலமாக கருத்துக்களிலே ஏற்படுகின்ற மாச்சரியங்களையும், வெறுப்பையும் போக்கிக்கொள்ள இயலும். மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டுமென்ற வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். முக்கியமாக ஆண்டுக்கு மூன்று முறை தான் இந்த மன்றத்தைக் கூட்டுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. முக்கியமான பிரச்சினைகள் நாட்டிலே ஏற்படுகின்ற நேரத்தில், உணவுப் பிரச்னையாக இருந்தாலும் சரி, மொழிப் பிரச்னையாக இருந்தாலும் சரி, எதிர்பாராத கலவர நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருந்தாலும் சரி; அல்லது பர்மா தமிழர்கள் பற்றிய அகதிப் பிரச்சினை போன்ற எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, அந்தப் பிரச்சினைகள் உருவாகின்ற நேரத்திலே சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். மக்கள் பிரதிநிதிகளுடைய கருத்துக்களை அறிவதற்கான வாய்ப்பு ஏற்படுமானால், இந்த மன்றத்தின் மூலம் இயற்றப்படுகிற முடிவுகளை செவ்வனே நிறைவேற்றப்படுவதற்கான வழி வகைகள் ஏற்படும். இப்போதுள்ள நிலைமையில் முக்கியமான பிரச்சினைகளை ஆறப்போடுகிற போக்கு இருப்பதால், நிலைமைகள் மாறி உண்மையை அறிந்துகொள்ள முடியாத தன்மை ஏற்பட்டு விடுகிறது. அண்மையில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியைப் பொறுத்து ஏற்பட்ட பல்வேறு விவகாரங்களை உடனடியாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி விவாதித்திருந்தால் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியினரிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் இரு தரப்பிலும் கூறப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் ஆராய்ந்து, அறிந்து இம்மன்றம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். எதிர் வரிசையிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளிடையே ஒன்றுபட்ட கருத்து இல்லையே என்று பேசினார்கள். அவ்வாறு ஒன்றுபட்ட கருத்து இருக்குமானால் இங்கே பல கட்சிகளாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே கொடி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆனால் நாங்கள் எதிர்க்கட்சிகளாக அமர்ந்து இருந்தாலும், வேறுபாடான கொள்கைகளைக் கொண்டிருப்பதால் தான் தனித் தனியாக இருக்கிறோம்; எல்லோருக்கும் உடன்பாடான ஒரு சில பிரச்சினைகளிலே சேர்ந்து நிற்கிறோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை ஏதோ எதிரிகள் என்று மட்டும் கொள்ளாமல் அவர்களும் நாட்டின் பொதுவான விவகாரங்களில், முன்னேற்றங்களில் அக்கறை கொண்டவர்கள்; நம்பிக்கைக்கு உள்ளானவர்கள் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கலந்து முடிவு செய்கிற வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், பல்வேறு பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீருவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். அமைச்சர்கள் கருத்துவேறுபாடுகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.
12–30 p.m. கருத்துக்களை அணுகி ஒத்த கருத்துக்களை நிறைவேற்றுகிற முறையிலும் திட்டங்களிலும் பின்வாங்கக்கூடாது. முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு பிரச்னைகளை விவாதிப்பதன் மூலம்—அத்தனை முடிவுகளும் ஒருமித்த முடிவுகளாக அமையும் என்று நான் கூறவில்லை—ஏற்படுகிற மாச்சரியங்களைக் குறைக்கலாம். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், ஆளுங் கட்சியினரின் கருத்துக்களை எதிர்க்கட்சியினர் அறிந்து கொள்ளவும், எதிர்க் கட்சிகளின் கோட்பாடுகளை ஆளுங்கட்சி உணர்த்திக்கொள்ளவும் வழிஏற்படும். முடிவுகள் பயன் உடையனவாக அமையக் கூடும். எல்லாவற்றிற்கும் ஒருமித்த முடிவு ஏற்பட்டுவிடும் என்று கூறவில்லை. அப்படிக் கலந்து உரையாடுவதன் மூலம் மாச்சரியங்களைக் குறைப்பதற்கும் தப்பபிப்ராயங்களை நீக்குவதற்கும் வேறுபட்ட எண்ணங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும்



9th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வழி ஏற்படும். அவரவர்கள் கருத்துக்களைத் திட்டவட்டமாக எடுத்துரைப்பதற்கும், அவற்றை நாட்டிற்கு உணர்த்துவதற்கும் வழிவகை ஏற்படும். சட்ட அவை அடிக்கடி கூட்டப்பட்டால் எங்கள் உள்ளத்தை ஆளும் கட்சியினர் உணரவும், ஆளும் கட்சியின் தன்மையை எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ளவும் முடியும். சட்டசபையில் உறுதியான முடிவு ஏற்படவும் வழி ஏற்படும். அடுத்து, கேள்விக்கு அமைச்சர்களால் தரப்படுகிற கருத்துக்களின் மூலம் நிர்வாகத்தின் நிலைமைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கிற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி வாய்ப்பு ஏற்படுகிற காலத்தில் நிர்வாகத்தில் ஏற்படுகிற கோளாறுகளைப் பற்றியும், நிர்வாகத்தில் ஏற்படுகிற குறைபாடுகள் பற்றியும், ஏற்பட்டிருக்கிற குற்றங்களைப் பற்றியும் சுட்டிக் காட்டி அவற்றை எல்லாம் தவிர்க்க அரசாங்கம் வழிவகை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்த முடிகிறது.

கேள்வி நேரம் மிக முக்கியமாகப் பயன்படுகிற ஒன்றாக அமைகிறது. கேள்விகளின் மூலமாக சில உண்மைகளை நாட்டு மக்களுக்கும் ஆட்சியின் கவனத்திற்கும் கொண்டு வரவேண்டியவர்களாக எதிர்க்கட்சியினராகிய நாங்கள் இருக்கிறோம். கேட்கப்படுகிற கேள்விகள் பலவற்றிற்கு விடைகள் காலாகாலத்தில் இங்கு வந்து சேர்வதில்லை. காலா காலத்தில் கேள்விகள் கொடுக்கப்பட்டும், காலங்கடந்த நிலையிலேயே விடைகள் தரப்படுகின்றன. எந்த நோக்கத்திற்காகக் கேள்விகள் கொடுக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் காலந்தாழ்வால் ஈடேறாமல் போய் விடுகிறது. கேள்விகளுக்கு உடனடியாக விடைகள் வரமுடியாத நிலை நீடித்துக்கொண்டே வருகிறது. காரணம் கேட்டால், கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பதில்கள் வந்தபாடில்லை. கேள்விகள் எடுத்துக்கொள்ள முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அவை அந்தந்த துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தத் துறையினர் தக்க சமயத்தில் பதில்கள் அனுப்பாத காரணத்தினால்தான், சட்டமன்றத்தில் விடைகளை வைக்க வாய்ப்பு ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் இந்தக் குறைபாட்டைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி வருகிறோம். குறிப்பாகச் சொன்னால் ஜனவரி திங்களில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் உணவுப் பிரச்னை பொறுத்தும், உணவு நிலைமை பொறுத்தும், சென்னையில் செய்யப்பட்டிருக்கிற சில ஏற்பாடுகளைப் பொறுத்தும் சில அவசரக் கேள்விகளைக் கொடுத்தேன். அவைகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். அந்தத் தொடர் கூட்டத்திலேயே அவற்றிற்கு விடை அளிக்கப்படும் என்று தான் கொடுத்தேன். ஆனால் இன்றைய தினம் வரையில் எத்தகைய பதிலும் வரவில்லை. இவ்வளவு காலமாகியும் எந்தப் பதிலும் வரவில்லை. குறிப்பாகச் சில பிரச்னைகளைப் பொறுத்து நிர்வாகத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு எழுதினால் அவற்றிற்கு காலா காலத்தில் பதில்கள் வருவதில்லை. சென்னை நகரைப் பொறுத்தவரை, நியாயவிலைக் கடைகள் எவ்வளவு இடங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன ? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கின்றன ? புறக்கணிக்கப்பட்டிருப்பவர்கள் எந்த அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் ? அதற்குக் காரணம் என்ன ? கொள்கை என்ன ? எந்த எந்த இடங்களில், எந்தெந்த வட்டாரங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன ? என்ற ஒரு விளக்கம் கோருகிற கடிதம் சட்டமன்றத் துறை மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு திங்கள் கழித்துத் தான் அவற்றிற்குப் பதில்கள் வந்தன. இப்பொழுது பத்து நாட்களுக்கு முன்பு வந்து சேருகிற அளவிற்கு அந்தப் பதில்கள் வந்து சேர்ந்திருக்கின்றன.

சென்ற தொடர் கூட்டத்தில், முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்தேன். பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சட்ட எரிப்புக் கிளர்ச்சி, மறியல் கிளர்ச்சி இவைகளில் ஈடுபட்டதால் பஞ்சாயத்து தேர்தலில், அவர்கள் நிற்கமுடியாது என்று தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் 1962-ல் விடுத்த அரசாங்கக் கட்டளை மூலம் அந்தக் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், தேர்தலில் நிற்கத்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1965

திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந் திருத்தமான நம்பிக்கையை வைத்து, அந்த முறையிலேயே செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை எப்படி இந்த மாநிலம் ஆளப்படவேண்டும்; எப்படிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆளப்படவேண்டுமென்பதை இந்த மன்றம் முடிவு செய்கிறது. இந்த மன்றத்தின் முடிவுகள் தான் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தை இயக்கி, நாட்டிலே செய்யப்பட வேண்டிய செயல்களுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, இந்த மன்றத்தை அடிக்கடி கூட்ட வேண்டியதன் அவசியத்தை வெட்டுப் பிரேரணை ஒன்றின் மூலமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். அடிக்கடி இந்த மன்றத்தைக் கூட்டுவதன் மூலமாக கருத்துக்களிலே ஏற்படுகின்ற மாச்சரியங்களையும், வெறுப்பையும் போக்கிக்கொள்ள இயலும். மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டுமென்ற வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். முக்கியமாக ஆண்டுக்கு மூன்று முறை தான் இந்த மன்றத்தைக் கூட்டுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. முக்கியமான பிரச்சினைகள் நாட்டிலே ஏற்படுகின்ற நேரத்தில், உணவுப் பிரச்னையாக இருந்தாலும் சரி, மொழிப் பிரச்னையாக இருந்தாலும் சரி, எதிர்பாராத கலவர நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருந்தாலும் சரி; அல்லது பர்மா தமிழர்கள் பற்றிய அகதிப் பிரச்சினை போன்ற எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, அந்தப் பிரச்சினைகள் உருவாகின்ற நேரத்திலே சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். மக்கள் பிரதிநிதிகளுடைய கருத்துக்களை அறிவதற்கான வாய்ப்பு ஏற்படுமானால், இந்த மன்றத்தின் மூலம் இயற்றப்படுகிற முடிவுகள் செவ்வனே நிறைவேற்றப்படுவதற்கான வழி வகைகள் ஏற்படும். இப்போதுள்ள நிலைமையில் முக்கியமான பிரச்சினைகளை ஆறப்போடுகிற போக்கு இருப்பதால், நிலைமைகள் மாறி உண்மையை அறிந்துகொள்ள முடியாத தன்மை ஏற்பட்டு விடுகிறது. அண்மையில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியைப் பொறுத்து ஏற்பட்ட பல்வேறு விவகாரங்களை உடனடியாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி விவாதித்திருந்தால் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியினரிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் இரு தரப்பிலும் கூறப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் ஆராய்ந்து, அறிந்து இம்மன்றம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். எதிர் வரிசையிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளிடையே ஒன்றுபட்ட கருத்து இல்லையே என்று பேசினார்கள். அவ்வாறு ஒன்றுபட்ட கருத்து இருக்குமானால் இங்கே பல கட்சிகளாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே கொடி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆனால் நாங்கள் எதிர்க்கட்சிகளாக அமர்ந்து இருந்தாலும், வேறுபாடான கொள்கைகளைக் கொண்டிருப்பதால் தான் தனித் தனியாக இருக்கிறோம்; எல்லோருக்கும் உடன்பாடான ஒரு சில பிரச்சினைகளிலே சேர்ந்து நிற்கிறோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை ஏதோ எதிரிகள் என்று மட்டும் கொள்ளாமல் அவர்களும் நாட்டின் பொதுவான விவகாரங்களில், முன்னேற்றங்களில் அக்கறை கொண்டவர்கள்; நம்பிக்கைக்கு உள்ளானவர்கள் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கலந்து முடிவு செய்கிற வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், பல்வேறு பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீருவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். அமைச்சர்கள் கருத்துவேறுபாடுகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.
12-30 p.m. கருத்துக்களை அணுகி ஒத்த கருத்துக்களை நிறைவேற்றுகிற முறையிலும் திட்டங்களிலும் பின்வாங்கக்கூடாது. முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு பிரச்னைகளை விவாதிப்பதன் மூலம்—அத்தனை முடிவுகளும் ஒருமித்த முடிவுகளாக அமையும் என்று நான் கூறவில்லை—ஏற்படுகிற மாச்சரியங்களைக் குறைக்கலாம். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், ஆளுங் கட்சியினரின் கருத்துக்களை எதிர்க்கட்சியினர் அறிந்து கொள்ளவும், எதிர்க் கட்சிகளின் கோட்பாடுகளை ஆளுங்கட்சி உணர்த்திக்கொள்ளவும் வழியேற்படும். முடிவுகள் பயன் உடையனவாக அமையக் கூடும். எல்லாவற்றிற்கும் ஒருமித்த முடிவு ஏற்பட்டுவிடும் என்று கூறவில்லை. அப்படிக் கலந்து உரையாடுவதன் மூலம் மாச்சரியங்களைக் குறைப்பதற்கும் தப்பபிப்ராயங்களை நீக்குவதற்கும் வேறுபட்ட எண்ணங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும்



9th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வழி ஏற்படும். அவரவர்கள் கருத்துக்களைத் திட்டவட்டமாக எடுத்துரைப்பதற்கும், அவற்றை நாட்டிற்கு உணர்த்துவதற்கும் வழிவகை ஏற்படும். சட்ட அவை அடிக்கடி கூட்டப்பட்டால் எங்கள் உள்ளத்தை ஆளும் கட்சியினர் உணரவும், ஆளும் கட்சியின் தன்மையை எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ளவும் முடியும். சட்டசபையில் உறுதியான முடிவு ஏற்படவும் வழி ஏற்படும். அடுத்து, கேள்விக்கு அமைச்சர்களால் தரப்படுகிற கருத்துக்களின் மூலம் நிர்வாகத்தின் நிலைமைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கிற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி வாய்ப்பு ஏற்படுகிற காலத்தில் நிர்வாகத்தில் ஏற்படுகிற கோளாறுகளைப் பற்றியும், நிர்வாகத்தில் ஏற்படுகிற குறைபாடுகள் பற்றியும், ஏற்பட்டிருக்கிற குற்றங்களைப் பற்றியும் சுட்டிக் காட்டி அவற்றை எல்லாம் தவிர்க்க அரசாங்கம் வழிவகை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்த முடிகிறது.

கேள்வி நேரம் மிக முக்கியமாகப் பயன்படுகிற ஒன்றாக அமைகிறது. கேள்விகளின் மூலமாக சில உண்மைகளை நாட்டு மக்களுக்கும் ஆட்சியின் கவனத்திற்கும் கொண்டு வரவேண்டியவர்களாக எதிர்க்கட்சியினராகிய நாங்கள் இருக்கிறோம். கேட்கப்படுகிற கேள்விகள் பலவற்றிற்கு விடைகள் காலாகாலத்தில் இங்கு வந்து சேர்வதில்லை. காலா காலத்தில் கேள்விகள் கொடுக்கப்பட்டும், காலங்கடந்த நிலையிலேயே விடைகள் தரப்படுகின்றன. எந்த நோக்கத்திற்காகக் கேள்விகள் கொடுக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் காலந்தாழ்வால் ஈடேறாமல் போய் விடுகிறது. கேள்விகளுக்கு உடனடியாக விடைகள் வரமுடியாத நிலை நீடித்துக்கொண்டே வருகிறது. காரணம் கேட்டால், கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பதில்கள் வந்தபாடில்லை. கேள்விகள் எடுத்துக்கொள்ள முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அவை அந்தந்த துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தத் துறையினர் தக்க சமயத்தில் பதில்கள் அனுப்பாத காரணத்தினால்தான், சட்டமன்றத்தில் விடைகளை வைக்க வாய்ப்பு ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் இந்தக் குறைபாட்டைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி வருகிறோம். குறிப்பாகச் சொன்னால் ஜனவரி திங்களில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் உணவுப் பிரச்னை பொறுத்தும், உணவு நிலைமை பொறுத்தும், சென்னையில் செய்யப்பட்டிருக்கிற சில ஏற்பாடுகளைப் பொறுத்தும் சில அவசரக் கேள்விகளைக் கொடுத்தேன். அவைகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். அந்தத் தொடர் கூட்டத்திலேயே அவற்றிற்கு விடை அளிக்கப்படும் என்று தான் கொடுத்தேன். ஆனால் இன்றைய தினம் வரையில் எத்தகைய பதிலும் வரவில்லை. இவ்வளவு காலமாகியும் எந்தப் பதிலும் வரவில்லை. குறிப்பாகச் சில பிரச்னைகளைப் பொறுத்து நிர்வாகத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு எழுதினால் அவற்றிற்கு காலா காலத்தில் பதில்கள் வருவதில்லை. சென்னை நகரைப் பொறுத்தவரை, நியாயவிலைக் கடைகள் எவ்வளவு இடங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன ? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றன ? புறக்கணிக்கப்பட்டிருப்பவர்கள் எந்த அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் ? அதற்குக் காரணம் என்ன ? கொள்கை என்ன ? எந்த எந்த இடங்களில், எந்தெந்த வட்டாரங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன ? என்ற ஒரு விளக்கம் கோருகிற கடிதம் சட்டமன்றத் துறை மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு திங்கள் கழித்துத் தான் அவற்றிற்குப் பதில்கள் வந்தன. இப்பொழுது பத்து நாட்களுக்கு முன்பு வந்து சேருகிற அளவிற்கு அந்தப் பதில்கள் வந்து சேர்ந்திருக்கின்றன.

சென்ற தொடர் கூட்டத்தில், முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்தேன். பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சட்ட எரிப்புக் கிளர்ச்சி, மறியல் கிளர்ச்சி இவைகளில் ஈடுபட்டதால் பஞ்சாயத்து தேர்தலில், அவர்கள் நிற்கமுடியாது என்று தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் 1962-ல் விடுத்த அரசாங்கக் கட்டளை மூலம் அந்தக் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், தேர்தலில் நிற்கத்

திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந் திருத்தமான நம்பிக்கையை வைத்து, அந்த முறையிலேயே செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை எப்படி இந்த மாநிலம் ஆளப்படவேண்டும்; எப்படிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆளப்படவேண்டுமென்பதை இந்த மன்றம் முடிவு செய்கிறது. இந்த மன்றத்தின் முடிவுகள் நான் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தை இயக்கி, நாட்டிலே செய்யப்பட வேண்டிய செயல்களுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, இந்த மன்றத்தை அடிக்கடி கூட்ட வேண்டியதன் அவசியத்தை வெட்டுப் பிரேரணை ஒன்றின் மூலமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். அடிக்கடி இந்த மன்றத்தைக் கூட்டுவதன் மூலமாக கருத்துக்களிலே ஏற்படுகின்ற மாச்சரியங்களையும், வெறுப்பையும் போக்கிக்கொள்ள இயலும். மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டுமென்ற வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். முக்கியமாக ஆண்டுக்கு மூன்று முறை தான் இந்த மன்றத்தைக் கூட்டுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. முக்கியமான பிரச்சினைகள் நாட்டிலே ஏற்படுகின்ற நேரத்தில், உணவுப் பிரச்னையாக இருந்தாலும் சரி, மொழிப் பிரச்னையாக இருந்தாலும் சரி, எதிர்பாராத கலவர நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருந்தாலும் சரி; அல்லது பர்மா தமிழர்கள் பற்றிய அகதிப் பிரச்சினை போன்ற எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, அந்தப் பிரச்சினைகள் உருவாகின்ற நேரத்திலே சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். மக்கள் பிரதிநிதிகளுடைய கருத்துக்களை அறிவதற்கான வாய்ப்பு ஏற்படுமானால், இந்த மன்றத்தின் மூலம் இயற்றப்படுகிற முடிவுகள் செவ்வனே நிறைவேற்றப்படுவதற்கான வழிவகைகள் ஏற்படும். இப்போதுள்ள நிலைமையில் முக்கியமான பிரச்சினைகளை ஆறப்போடுகிற போக்கு இருப்பதால், நிலைமைகள் மாறி உண்மையை அறிந்துகொள்ள முடியாத தன்மை ஏற்பட்டு விடுகிறது. அண்மையில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியைப் பொறுத்து ஏற்பட்ட பல்வேறு விவகாரங்களை உடனடியாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி விவாதித்திருந்தால் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியினரிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் இரு தரப்பிலும் கூறப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் ஆராய்ந்து, அறிந்து இம்மன்றம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். எதிர் வரிசையிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளிடையே ஒன்றுபட்ட கருத்து இல்லையே என்று பேசுகிறார்கள். அவ்வாறு ஒன்றுபட்ட கருத்து இருக்குமானால் இங்கே பல கட்சிகளாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே கொடி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆனால் நாங்கள் எதிர்க்கட்சிகளாக அமர்ந்து இருந்தாலும், வேறுபாடான கொள்கைகளைக் கொண்டிருப்பதால் தான் தனித் தனியாக இருக்கிறோம்; எல்லோருக்கும் உடன்பாடான ஒரு சில பிரச்சினைகளிலே சேர்ந்து நிற்கிறோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை ஏதோ எதிரிகள் என்று மட்டும் கொள்ளாமல் அவர்களும் நாட்டின் பொதுவான விவகாரங்களில், முன்னேற்றங்களில் அக்கறை கொண்டவர்கள்; நம்பிக்கைக்கு உள்ளானவர்கள் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கலந்து முடிவு செய்கிற வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், பல்வேறு பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீருவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். அமைச்சர்கள் கருத்துவேறுபாடுகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.
12-30 p.m. கருத்துக்களை அணுகி ஒத்த கருத்துக்களை நிறைவேற்றுகிற முறையிலும் திட்டங்களிலும் பின்வாங்கக்கூடாது. முக்கியமான சந்தர்ப்பங்களில் சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு பிரச்னைகளை விவாதிப்பதன் மூலம்—அத்தனை முடிவுகளும் ஒருமித்த முடிவுகளாக அமையும் என்று நான் கூறவில்லை—ஏற்படுகிற மாச்சரியங்களைக் குறைக்கலாம். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், ஆளுங் கட்சியினரின் கருத்துக்களை எதிர்க்கட்சியினர் அறிந்து கொள்ளவும், எதிர்க் கட்சிகளின் கோட்பாடுகளை ஆளுங்கட்சி உணர்த்திக்கொள்ளவும் வழியேற்படும். முடிவுகள் பயன் உடையனவாக அமையக் கூடும். எல்லாவற்றிற்கும் ஒருமித்த முடிவு ஏற்பட்டுவிடும் என்று கூறவில்லை. அப்படிக் கலந்து உரையாடுவதன் மூலம் மாச்சரியங்களைக் குறைப்பதற்கும் தப்பபிப்ராயங்களை நீக்குவதற்கும் வேறுபட்ட எண்ணங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும்





வழி ஏற்படும். அவரவர்கள் கருத்துக்களைத் திட்டவட்டமாக எடுத்துரைப்பதற்கும், அவற்றை நாட்டிற்கு உணர்த்துவதற்கும் வழிவகை ஏற்படும். சட்ட அவை அடிக்கடி கூட்டப்பட்டால் எங்கள் உள்ளத்தை ஆளும் கட்சியினர் உணரவும், ஆளும் கட்சியின் தன்மையை எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ளவும் முடியும். சட்டசபையில் உறுதியான முடிவு ஏற்படவும் வழி ஏற்படும். அடுத்து, கேள்விக்கு அமைச்சர்களால் தரப்படுகிற கருத்துக்களின் மூலம் நிர்வாகத்தின் நிலைமைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கிற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி வாய்ப்பு ஏற்படுகிற காலத்தில் நிர்வாகத்தில் ஏற்படுகிற கோளாறுகளைப் பற்றியும், நிர்வாகத்தில் ஏற்படுகிற குறைபாடுகள் பற்றியும், ஏற்பட்டிருக்கிற குற்றங்களைப் பற்றியும் சுட்டிக் காட்டி அவற்றை எல்லாம் தவிர்க்க அரசாங்கம் வழிவகை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்த முடிகிறது.

கேள்வி நேரம் மிக முக்கியமாகப் பயன்படுகிற ஒன்றாக அமைகிறது. கேள்விகளின் மூலமாக சில உண்மைகளை நாட்டு மக்களுக்கும் ஆட்சியின் கவனத்திற்கும் கொண்டு வரவேண்டியவர்களாக எதிர்க்கட்சியினராகிய நாங்கள் இருக்கிறோம். கேட்கப்படுகிற கேள்விகள் பலவற்றிற்கு விடைகள் காலாகாலத்தில் இங்கு வந்து சேர்வதில்லை. காலா காலத்தில் கேள்விகள் கொடுக்கப்பட்டும், காலங்கடந்த நிலையிலேயே விடைகள் தரப்படுகின்றன. எந்த நோக்கத்திற்காகக் கேள்விகள் கொடுக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் காலந்தாழ்வால் ஈடேறாமல் போய் விடுகிறது. கேள்விகளுக்கு உடனடியாக விடைகள் வரமுடியாத நிலை நீடித்துக்கொண்டே வருகிறது. காரணம் கேட்டால், கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பதில்கள் வந்தபாடில்லை. கேள்விகள் எடுத்துக்கொள்ள முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அவை அந்தந்த துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தத் துறையினர் தக்க சமயத்தில் பதில்கள் அனுப்பாத காரணத்தினால்தான், சட்டமன்றத்தில் விடைகளை வைக்க வாய்ப்பு ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் இந்தக் குறைபாட்டைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி வருகிறோம். குறிப்பாகச் சொன்னால் ஜனவரி திங்களில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் உணவுப் பிரச்னை பொறுத்தும், உணவு நிலைமை பொறுத்தும், சென்னையில் செய்யப்பட்டிருக்கிற சில ஏற்பாடுகளைப் பொறுத்தும் சில அவசரக் கேள்விகளைக் கொடுத்தேன். அவைகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். அந்தத் தொடர் கூட்டத்திலேயே அவற்றிற்கு விடை அளிக்கப்படும் என்று தான் கொடுத்தேன். ஆனால் இன்றைய தினம் வரையில் எத்தகைய பதிலும் வரவில்லை. இவ்வளவு காலமாகியும் எந்தப் பதிலும் வரவில்லை. குறிப்பாகச் சில பிரச்னைகளைப் பொறுத்து நிர்வாகத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு எழுதினால் அவற்றிற்கு காலா காலத்தில் பதில்கள் வருவதில்லை. சென்னை நகரைப் பொறுத்தவரை, நியாயவிலைக் கடைகள் எவ்வளவு இடங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றன? புறக்கணிக்கப்பட்டிருப்பவர்கள் எந்த அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்? அதற்குக் காரணம் என்ன? கொள்கை என்ன? எந்த எந்த இடங்களில், எந்தெந்த வட்டாரங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன? என்ற ஒரு விளக்கம் கோருகிற கடிதம் சட்டமன்றத் துறை மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு திங்கள் கழித்துத் தான் அவற்றிற்குப் பதில்கள் வந்தன. இப்பொழுது பத்து நாட்களுக்கு முன்பு வந்து சேருகிற அளவிற்கு அந்தப் பதில்கள் வந்து சேர்ந்திருக்கின்றன.

சென்ற தொடர் கூட்டத்தில், முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்தேன். பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சட்ட எரிப்புக் கிளர்ச்சி, மறியல் கிளர்ச்சி இவைகளில் ஈடுபட்டதால் பஞ்சாயத்து தேர்தலில், அவர்கள் நிற்கமுடியாது என்று தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் 1962-ல் விடுத்த அரசாங்கக் கட்டளை மூலம் அந்தக் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், தேர்தலில் நிற்கத்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1965

தடை விதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிடப்பட்டு ஜீ.ஓ. ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அந்த ஜீ.ஓ.வை எனக்குக் காட்ட அரசாங்கம் மறுக்கிறது. அந்த ஜீ.ஓ.வின் அடிப்படையில் வற்புறுத்துவதற்காக அதன்படி ஒன்று வேண்டுமென்று நானும் எனது கட்சியினரும் கேட்டுப் பார்த்தோம். உரிய அதிகாரிகளை அணுகிக் கேட்டுப் பார்த்தோம். அந்தத் துறையினரை அணுகிக் கேட்டுப் பார்த்தோம். அவர்கள் எந்தப் பதிலும் சொல்லாததால் சட்டமன்றத் துறை மூலம், அதற்கு ஒரு படி வேண்டுமென்று கேட்டோம். சட்டமன்றத்திலகூட நான் அதை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அதன்படி ஒன்று எங்களுக்குத் தேவைப்படுகிறது— என்று கூறினேன். அதற்கு, படி கொடுக்கப்படும் என்ற பதிலும் எனக்கு இது வரையில் வரவில்லை. அது கொடுக்கப்படுவதற்கில்லை என்ற பதிலும் வரவில்லை. அல்லது அது இரகசியமாக வைக்கப்படக் கூடியதொன்று. ஆகவே தருவதற்கில்லை என்ற பதில் கூட வரவில்லை. சட்ட மன்றத் துறையை அணுகிக் கேட்கும்போது எங்களுக்கு எந்தப் பதிலும் வரவில்லை. வந்தால் உங்களுக்கு நாங்கள் அனுப்பி வைப்போம் என்று சட்டமன்றத் துறையினர் சொல்கிறார்கள். இது சாதாரணக் கட்டளையாகத்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் ஒரு படி வேண்டுமென்றால் அதைக் கொடுப்பதற்கு என்ன தடை இருக்கிறது. ? அதை ரகசியமாக வைக்கவேண்டுமென்றால் அது ரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஒன்று, ஆகவே கொடுப்பதற்கில்லை என்ற பதிலாவது வந்ததா என்றால் அத்தகைய பதிலும் வரவில்லை. கொடுக்கக் கூடியதைக் கொடுப்பதில் என்ன தடை இருக்கிறது ? இந்நிலை, பல சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றது. இது பற்றிச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அடுத்து, சட்டமன்ற விடுதியில் உள்ளவர்கள் பல்வேறு அல்லல்களைத் துயரங்களை அனுபவிக்கிறார்கள் என்று உறுப்பினர்கள் பலரும் முறையிட்டனர். சட்டமன்ற உறுப்பினர்கள் புது விடுதியிலும், பழைய விடுதியிலும் இருக்கிறார்கள். அந்த விடுதிகளில் அவர்களுக்காக ஒரு நூலகம் ஒரு படிப்பகம் ஏற்படுத்தினால் அங்குள்ளவர்கள் ஓய்வு நேரத்தை கழித்து கொள்வதற்கும் அங்கிருந்து படிப்பதற்கும் வசதி ஏற்படமுடியும். படிப்பகம் இப்போது ராஜாஜி மண்டபத்தின் கீழே இருக்கும் அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. புது விடுதியில் உள்ளவர்களும், பழைய விடுதியில் உள்ளவர்களும் ராஜாஜி மண்டபத்தின் கீழே இருக்கிற அந்த அறைக்கு வந்து உட்கார்ந்து படிப்பகத்தைப் பயன்படுத்திக்கொள்கிற தன்மையில் இல்லை. ஆகவே அந்தந்த விடுதிகளில் படிப்பகங்களை அமைக்கவேண்டும்.

உறுப்பினர்களுக்குப் பயன்படும் வகையில் விடுதிக்கு எதிராக கடியார மாடம் அதாவது டவர் க்ளாக் ஒன்று வைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டது. அது கைவிடப்பட்டதாக பதில் சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாகச் சட்ட மன்ற உறுப்பினருக்கு விடுதி ஒன்று கட்டப்படுகிறது. அந்த விடுதிக்கு முன்புறத்திலாவது "க்ளாக் டவரை" அமைக்க முன் வரவேண்டும். அதை வைப்பதன் மூலம் எல்லோருக்கும் நேரத்தை உணர்த்தவும், சட்டமன்றத்திற்குச் சரியாக வந்து சேரும்படிச் செய்யவும் முடியும். உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களைத் தட்டி எழுப்புகிற அதிக ஓசையோடு கூடிய டவர் க்ளாக் ஒன்றை வைத்தால் நன்றாக இருக்கும். சட்ட மன்றம் சீர் பெற குறிப்பிட்ட நேரத்தில் நடப்பதற்கும் அது உதவியாகயிருக்கும். பழைய விடுதியில் வைக்கமுடியாவிட்டாலும் கட்டப்படுகிற புதிய விடுதியிலாவது வைக்க முயற்சி செய்ய வேண்டும்.

பழைய விடுதியில் பல்வேறு அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அலுவலகங்களை எல்லாம் அகற்றி வேறு இடங்களில் வைப்பதற்கு முயற்சிகள் செய்யப்படுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு இடவசதி அதிகமாக இருக்கும். மன்ற உறுப்பினர்கள் சட்டமன்றம் நடக்கிற காலத்தில் தங்குகிற நேரத்தில், அவர்களுக்கு இருக்கிற வாடகைக் கட்டணம் நீக்கப்படவேண்டும் என்ற கருத்து வெட்டுப் பிரேரணை மூலம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் பலரும் அதைச் சுட்டிக் காட்டினார்கள். பலருக்கு அக விலைப் படியை உயர்த்தும் நிலையிலிருந்தாலும், சட்டமன்றம் அங்கத்தினர்களுக்கு அப்படி உயர்த்துவதற்கு வசதி இல்லை. சட்ட மன்றம் நடைபெறும் காலத்தில் விடுதியில் தங்குகிற உறுப்பினர்களுக்குக் கட்டணம் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவதின் மூலம் மன்ற உறுப்பினர்களுக்கு வசதியும், மதிப்பும் ஏற்படும். சட்டமன்றம் நடைபெரும் காலத்தில் மட்டும் உறுப்பினர்களுக்கு விடுதிக் கட்டணம் இல்லை என்றநிலை ஏற்பட்டால், அது பொது மக்களின் நோக்கில் கொஞ்சம் மதிப்பு தருகிற ஒன்றாக அமையும். மன்ற உறுப்பினர்களை இந்த அரசாங்கம் பெருமளவு மதிக்கிறது என்ற நிலையும் ஏற்பட முடியும். மைசூர் மாநிலத்தில் இருக்கிற நிலைமையைச் சுட்டிக் காட்டினார்கள் பலர். அங்குச் சட்ட மன்றம் நடைபெறும் காலத்தில் உறுப்பினர்களுக்கு விடுதியில் கட்டணம் இல்லை என்ற நிலை வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையை ஒட்டி மற்றொரு கருத்தும் ஹௌஸ் கமிட்டியில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. மன்ற உறுப்பினர்களிடம் கட்டணம்வாங்குகிற நிலையில் மன்ற அங்கத்தினர்களுடைய துணைவியர்களும், அவர்களுடைய மக்களும் வருவார்களேயானால், அவர்களுக்குத் தனிக்கட்டணம் விதிக்காமல் விலக்கு அளிக்கிற நிலையையும் ஏற்படுத்தவேண்டும். அவர்களுக்குக் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கருத்து கூறப்பட்டிருப்பதைக் கனம் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



9th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்தச் சட்ட அவையின் நடவடிக்கைகளை நல்ல முறையில் பரிசீலனை செய்யும் வாய்ப்பினை மேலவை பெற்றிருக்கிறது. இந்த அவையின் உறுப்பினர்கள் பலர் தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்றாலும், அந்தந்தத் துறைகளில் தகுதி படைத்தவர்களைத்தேர்ந்தெடுத்து அனுப்பி வைப்பதற்கு மேலவை ஏற்றதாக இருக்கிறது. மேல் அவையில் ஆசிரியர்கள், கலைஞர்கள் இவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கின்ற வகையில் அந்தந்த தொகுதியிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர் தொகுதியை எடுத்து விடுவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மேல் அவையில் தனித்தனித் துறைகளில் சிறப்புடையவர்கள் இருந்தால், அவர்களுடைய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்தந்தத் துறைகளில் வல்லுநர்களாக இருப்பவர்களுடைய பரிந்துரை நமக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. அந்த அடிப்படையில் ஆசிரியர்களுக்கென்று ஒரு பிரதிநிதி, தொழிலாளர்களுக்கு என்று ஒரு பிரதிநிதி, வணிகர்களுக்கென்று ஒரு பிரதிநிதி, கலைஞர்களுக்கென்று ஒரு பிரதிநிதி மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அதற்கான வாய்ப்பு இருக்குமானால் இத்தகைய பிரதிநிதிகள் வேறு வகையிலும் வருவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது என்றாலும் கூட, தனியாக அதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து வரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர்களுடைய கருத்துக்களை உரிமையோடும், உறுதியோடும் சொல்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே தனித் தொகுதியாக ஆசிரியர் தொகுதி, கலைஞர் தொகுதி, தொழிலாளர் தொகுதி, வணிகர் தொகுதி என்று இருப்பது நல்லது , அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கும் ஆசிரியர் தொகுதியை எந்த விதத்திலும் மாற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல்களைப் பொறுத்தவரையில் அவை நல்ல முறையிலும், சமத்துவமாகவும், சனநாயக நெறியிலும் நடைபெற வேண்டும் என்பதைப் பல முறை இந்தச் சட்டமன்றத்தில் பலராலும் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்கட்சி என்கின்ற இரு சாரார்க்கும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டியவர்கள், தேர்தல்களில் அமைச்சர்கள், தங்கள் கட்சிக் கொள்கைகளின்படி தேர்தல் பணிகளை ஆற்றக் கூடாது, உரிமையில்லை என்று நான் சொல்லவில்லை. அமைச்சர்கள் பதவியிலிருந்தாலும் கட்சிக்காகப் பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மறுக்கவில்லை. கட்சிக்காரர்கள் என்ற முறையில் மட்டும் தான் ஓரளவுக்குப் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தேர்தல் காலங்களில் தேர்தலுக்கான நாட்கள் எல்லாம் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு அமைச்சர்கள், அமைச்சர்கள் என்ற அதிகார முறையில் தேர்தல் களத்திற்கு வரக்கூடாது. அமைச்சர்களாக வீற்றிருக்கின்றவர்கள்

தேர்தல் காலத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, இவைகளை சமத்துவமாகப் பாவிக்கின்ற நிலைமையில் நடந்து கொள்ளவேண்டும். அவர்கள் கட்சித் தலைவர்களாகப் பணியாற்றலாம். ஆனால் அமைச்சர்களாக நடந்து கொள்ளக்கூடாது. தேர்தல்கள் நேர்மையாகவும், நாணயமாகவும் நடைபெறுவதற்கு வழிவகைகள் ஏற்பட வேண்டும். அமைச்சர்கள், அமைச்சர்களாக இருந்துகொண்டு தேர்தல் நேரத்தில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும்போது அதிகார முறையில் சில சலுகைகளையும், உறுதிமொழிகளையும் கொடுக்கின்றனர். இதன் காரணமாக வாக்காளர்கள் காங்கிரசு வேட்பாளரை ஒப்புக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு ஆளாக வேண்டியவர்களாகிறார்கள். தேர்தல் நடைபெறுகின்ற நேரத்தில் அரசாங்கத்தின் சார்பாகச் செய்யப்படுகின்ற திட்ட வேலைகள் அவசர அவசரமாக நிறைவேற்றப்படுகின்றன. அமைச்சர்களாக இருக்கின்ற காரணத்தால், தங்கள் அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு காரியங்களைச் செய்ய முற்படுவதால், வாக்காளர்களைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு அமைச்சர்களைக் குற்றஞ் சாட்டுவதற்குரிய இடம் ஏற்பட்டு விடுகிறது. அமைச்சர்கள், அமைச்சர்கள் என்கின்ற தோரணையில் வரும்போது, தனியாகச் சில சலுகைகள் கிடைக்கின்றன. உதாரணமாக திருவண்ணாமலைத் தேர்தலின்போது அங்கு இருக்கின்ற பயணர் விடுதிகள் அமைச்சர் தங்குவதற்கு என்றே ஒதுக்கிவைக்கப்பட்டன. தேர்தல் காலத்தில், அமைச்சர்கள் என்ற பதவி காரணமாக அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதால், தங்கும் விடுதியில் மற்றவர்களுக்கு இடம் கொடுக்க மறுக்கப்படுகிறது. அமைச்சர்கள் என்ற தோரணையில் வருவதால் அவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்க முடியும் என்றும், மற்றவர்கள் வந்தால் இடம் கொடுக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது. இந்த வகையில் மற்றவர்களுடைய கோரிக்கைகள் புறக்கணிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. மேலும் அந்தத் தொகுதியில் பிரச்சாரம் செய்யும்போது அமைச்சர்கள், காங்கிரஸ்காரர்கள் என்ற முறையில் வரவில்லை; அப்படி வருவதாக இருந்தால், அதை நான் தடுக்க முன்வர மாட்டேன். அமைச்சர் என்கின்ற சலுகையோடு அவர்கள் பிரச்சாரத்திற்கு வந்ததால், வாக்காளர்கள் தங்களுக்குச் சாதகமாக திரட்டப்பட்டார்கள். திருவண்ணாமலையில் தேர்தல் நடைபெற்ற போது, அமைச்சர்கள், அமைச்சர்கள் என்ற தோரணையில் வந்ததால் திருவண்ணாமலைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்குத் திட்டம் கொண்டு வரப்படும் என்றும், சாத்தனூர் திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படும் என்றும் உறுதிமொழி தந்தார்கள். வேண்டுமென்றால், இதைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் நிறைவேற்றி யிருக்கலாம். அல்லது தேர்தல் முடிந்ததற்குப் பின்னால் நிறைவேற்றியிருக்கலாம். இது வேண்டுமென்றே அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்வதுபோல் ஆகவில்லையா? அமைச்சர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்கள், அல்லது கட்சிக்காரர்கள் என்ற முறையில் வருவதை நான் குறை சொல்லவில்லை. அமைச்சர்கள் என்ற தோரணையில் தேர்தலில் கலந்து கொள்வதால் பல தவறுகளுக்கு வழி ஏற்படுகின்றது. ஆகவே, இந்த முறைகெட்ட தன்மையை சீர்திருத்துவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதில், இப்பொழுது இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி இந்த மன்றத்தில் இதற்கு முன்னால் நான் விளக்கமாகச் சொல்லி யிருக்கிறேன். தேர்தல் நாட்கள் அறிவிக்கப்பட்ட நேரத்தில் இந்தக் கருத்துக்கள் சொன்னதின் காரணமாக அப்போது அதை நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது. சாதாரணமாக நன்றாகப் படித்தவர்கள்கூட தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத அளவில் மயக்கம் தரக்கூடிய நிலையில் ஐந்தாறு சின்னங்களை போட்டுக் குழப்பமான நிலையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். படிக்காதவர்கள் பெரும் பகுதியினர் இருக்கக்கூடிய கிராமங்களில் இரண்டு பேர்கள், மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் பத்து பதினைந்து



பேர்களுக்குச் சின்னங்களை ஒதுக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. சாதாரண மக்கள் இன்னின்ன சின்னங்களுக்கு தங்கள் வாக்கை அளிக்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்து நினைவில் வைத்துக் கொள்வதில் தவறி விடுகிறார்கள். ஒரு வார்டுக்கு ஒரு உறுப்பினர் என்ற நிலை இருக்குமானால், ஊராட்சி மன்றத் தேர்தலிலும் சரி, பேரூராட்சி மன்றத் தேர்தலிலும் சரி, சின்னம் தேர்ந்தெடுப்பதில் குழப்பம் ஏற்படாது. இன்னின்ன அங்கத்தினர்களுக்கு இன்னின்ன சின்னங்கள் என்ற உறுதி ஏற்படும். அவற்றில் ஒரு சின்னத்தைத் தேர்ந்தெடுப்பதில் கஷ்டம் ஏற்படாது. அதோடு முதல் நாள் சின்னங்களைக் கொடுத்துவிட்டு அடுத்த நாள் தேர்தல் என்று வரும்போது, குழப்பமான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, குறைந்த அளவில் ஒரு வார காலத்திற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். ஒரு சின்னத்தை ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி பிரச்சாரம் செய்வதற்கும், அதன் அடிப்படையில் நல்ல முறையில் தேர்தலை நடத்துவதற்கும் வழிவகைகள் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து தலைவர் தேர்தல்களை ஏப்ரல் மாதத்தில் நடத்தலாம் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. இப்போது குறிப்பிட்ட தேதி அடிக்கடி மாற்றப்பட்டுக்கொண்டு வருகிறது. அவ்விதமில்லாமல் அறிவிக்கப்பட்ட நாளிலேயே நடத்த வேண்டும். அடிக்கடி மாற்றப்பட்டுக்கொண்டு வருவதை யாரும் விரும்பவில்லை. ஆகவே இனிமேலும் எந்த விதமான மாற்றமும் செய்யாமல் குறிப்பிட்ட நாளில் தேர்தல் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன்.

சென்னை மாநிலத்திற்கு ஆங்கிலத்தில் "மெட்ராஸ்" என்றிருப்பதை மாற்றி, "தமிழ்நாடு" என்ற பெயர் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மன்றத்தில் பல நேரங்களில் எடுத்துக்கூறி, அதற்கான காரண காரிய விளக்கங்களை எல்லாம் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதை மீண்டும் நினைவுபடுத்தி "தமிழ்நாடு" என்ற பெயரை ஆங்கிலத்திலும் அப்படியே வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். இந்தப் பெயர் மாற்றத்தின் மூலமாக நம்முடைய மாநிலத்தின் பெருமையையும், புகழையும் உயர்த்திக் கொள்கின்ற நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மொழிப் பிரச்னை சம்பந்தமாக, பொது விவாதத்தின் போது பல கருத்துக்கள் பரிமாற்றப்பட்டன. ஆட்சிமொழி எந்த வகையில் அமைய வேண்டும் என்பதைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டது. இதைப்பற்றி விரிவாக எத்தனையோ முறை இங்கும் வெளியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதும் எங்கள் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் டெல்லியில் கூறிய கருத்துக்கள் அனைத்தும் செய்தித்தாள்களில் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் வற்புறுத்திக் காட்டியதுபோல் தேசிய மொழிகளான 14 மொழிகளைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரு மொழிக்கு மட்டும் ஆட்சி மொழித் தகுதி கொடுப்பது முறையாகாது. இந்தியாவின் ஆட்சி மொழிகளாக 14 மொழிகளும் இருக்கலாம் என்கின்ற கருத்தைப் பலரும் வற்புறுத்தத் தலைப்பட்டுள்ளார்கள். வட்டார மொழிகள் என்ற நிலையில் இருக்கின்ற மொழிகள் எல்லாம் வளர்ச்சி பெறுகின்ற காலம் வரையில் ஆங்கிலம் உதவி மொழியாக இருக்கலாம். அந்தந்த நாட்டில் தாய்மொழியாக இருக்கின்ற மொழிகள் எல்லாம் முறைப்படி வளர்க்கப்படுகின்றன. அகில இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆட்சிமொழியாக இருக்க 14 மொழிகளும் தகுதி பெற வேண்டும். அத்தகைய தகுதி பெறும் வரையிலும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும். இந்தி இன்றைக்கு ஆட்சிமொழியாக வருவதற்குத் தகுதி பெற்றிருக்கிறது என்று சொல்லப்படுமானால், 14 மொழிகளுமே ஆட்சி மொழிகளாக இருப்பதற்குத் தகுதியுடையவை தான். ஆகவே இந்தியை இப்போது ஆட்சிமொழியாகத் திணிப்பது எந்த விதத்திலும் பொருந்தாது. ஆகவே 14 மொழிகளில்

எந்த மொழி தொடர்பு மொழியாக வருவதற்குத் தகுதி பெறுகிறதோ, அதுவரையிலும் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்து வரலாம் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்தி வருகிறது. இதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமான முறையில் பத்திரிகை நிருபர்களிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்தியைப் பொறுத்த வரையிலும் "அதை ஆட்சி மொழியாக்காமல், கட்டாயப் படுத்தாமல் இருந்தால், அதைப் பரப்புவதற்கு உதவி செய்வீர்களா" என்று பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்டதற்கு, அறிஞர் அண்ணா அவர்கள் "இந்தி ஆட்சிமொழியாக வரக்கூடாது, அது கட்டாய முறையில் திணிக்கப்படக் கூடாது; ஆங்கிலத்திற்குப் பதிலாக 14 மொழிகளுமே ஆட்சி மொழிகளாக வரலாம். இந்த 14 மொழிகளில் ஒரு மொழிதான் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்கின்ற நிலை வரவேண்டுமானால் முதலில் எல்லா மொழிகளுமே வளர வேண்டும்; வளர விடப்படவேண்டும்; அத்தகைய வளர்ச்சி வரும்போது, எது தொடர்பு மொழியாக ஆவதற்குத் தகுதி பெறுகிறதோ அப்போது தானாகத் தொடர்பு மொழியின் இடத்தைப் பெறட்டும், இது தானாக ஏற்பட வேண்டும்; இதில் நிர்ப்பந்தம் இருத்தல் கூடாது; சட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு எந்தவிதமான திணிப்பின் மூலமாகவோ இருத்தல் கூடாது; இந்த மொழிதான் இருக்க வேண்டும் என்று எந்த மொழியையும் குறிப்பிட்டு இப்போது சொல்வதற்கில்லை, இப்போது எந்த மொழி இருக்க வேண்டும் என்று மக்கள் முடிவு செய்யக் கூடிய நிலையில் இல்லை; இந்தி இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக கட்டாயப்படுத்தாத வகையில் அது சாதாரணமாக மற்ற 14 மொழிகளைப் போன்ற ஒரு மொழியாகும் என்ற தன்மையில், அது கட்டாயப்படுத்தப்பட மாட்டாது என்கிற கருத்தின் அடிப்படையில் அதைப் பரப்புவதில் உதவி செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை. இதே போன்று எல்லா மொழிகளுமே பரவி நாட்டில் வளம் பெறவேண்டும் என்பதில் எனக்கு எந்தத் தடையும் இல்லை. அந்த முறையில் அதற்கான உதவியைச் செய்வேன், உறுதியாக இந்தி ஆட்சி மொழியாக கட்டாயப் படுத்தக் கூடாது என்கின்ற கருத்தை ஒப்புக் கொள்வதாக இருந்தால் அதை பரப்புவதில், உதவி செய்ய எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை" என்னும் கருத்துப்பட கூறியிருக்கிறார்கள்.

நேற்று நான் பேசியபோதுகூட, பல மொழிகளை விரும்பிக் கற்றுக் கொள்ளுவதில் தவறு இல்லை, அரசாங்கத்தின் நேரம், பணம், உதவி, எல்லாம் ஒரு மொழிக்கு மட்டும் கொடுக்கப்படக் கூடாது. எல்லா மொழிகளுக்கும் சரி சமமான தகுதி கொடுக்கப்பட வேண்டும், இந்தி என்பதை ஒரு விருப்ப மொழியாகக் கற்றுக் கொள்ளுவதை, அதைக் கற்றுக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதை எதிர்க்கவில்லை. ஆனால் இந்தி மொழி ஆட்சி மொழியாக வருவதைத்தான் மறுக்கிறோம், வெறுக்கிறோம்; எதிர்க்கிறோம். இந்தியை, ஒரு மொழியாக விரும்பிப் பயிலுவதில் ஆட்சேபணை இல்லை என்ற அடிப்படையில்தான் அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தைத்தான் நானும் தெரிவித்திருக்கிறேன். அண்ணாவின் பேச்சின் முழு விவரத்தைப் பார்த்தால் அது தெளிவுபடும். அதை மீண்டும் வற்புறுத்துகிறேன். அந்த எண்ணத்தோடு அரசினர் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். நான் நேற்றுத் தெரிவித்த மாதிரி, மக்களின் எண்ணத்தைத் தெரிந்து, அதற்கான முறையில் அரசின் எண்ணத்தை மாற்றிக்கொண்டு காரியங்களைச் செய்தால், சுமுகமான முறையில் குழப்பத்திற்கு இடம் இல்லாமல் செய்ய முடியும். அதைச் செய்ய அரசினர் முன் வரவேண்டும். எதிர்க்கட்சி எடுத்து வைக்கிற எந்தக் கருத்தையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளுவதில்லை. தாங்கள் கொண்டிருக்கிற போக்கிலேயே போவதைக் கண்டிக்க வேண்டியிருக்கிறது. மக்களால், மக்களுக்காக, மக்களின் நன்மைக்காக இயங்க வேண்டிய அரசு காங்கிரஸ்காரர்களால், காங்கிரஸ்காரர்களுக்காக, காங்கிரஸ்காரர்களின் நன்மைக்காக ஆளப்படுகிறது என்று குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களாக நடந்து கொண்டிருக்கிறார்கள்.





இந்த அரசு மக்களால், மக்களுக்காக, மக்களின் நன்மையின் பொருட்டு ஜனநாயகப் பண்போடு நடக்க வேண்டும் என்று வற்புறுத்தி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்று விவாதிக்கப்பட்டு, கோரப்படுகிற மான்யங்கள் மூன்று. ஒன்று இந்தச் சட்ட மன்றத்தைப் பற்றியது. சட்ட மன்ற உறுப்பினர்கள், அவர்கள் வசதிகள், சட்ட மன்ற நடவடிக்கைகள் எல்லாவற்றையும் பற்றியது. அதைப்பற்றிக் கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பல விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மற்றொன்று தேர்தல்களைப் பற்றியது. மூன்றாவது மான்யம், தலைமை அலுவலகம், அமைச்சர்கள் மற்ற தலைமை அதிகாரிகள் ஆகியவைகளைப் பற்றியது. மூன்றும் சேர்த்து விவாதம் நடைபெற்றது. மூன்றிலும் பொதுவாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அமைச்சர்கள் பற்றிய மான்யமாக இருப்பதால், அமைச்சர் சம்பளம் உட்பட்ட மான்யங்களாக இருப்பதால், எல்லா நிர்வாக நிகழ்ச்சிகளுக்கும், குறைபாடுகளுக்கும், நல்லதற்கும், கெட்டதற்கும், அமைச்சர்கள்தான் பொறுப்புள்ளவர்கள்—அதை நான் மறுக்கவில்லை—ஆகவே, இந்த மான்யத்தின் மீது நடைபெற்ற விவாதத்திலே எந்தக் குறைபாடு இருந்தாலும், எந்த யோசனையாக இருந்தாலும் சொல்லக் கூடிய வாய்ப்பு இருந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு பல யோசனைகளை, அபிப்பிராயங்களை தெரிவித்தார்கள்.

நேற்று வரையில் ஆறு நாட்களாக சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிப் பேசப்பட்டது. அதையும் தொடர்ந்து சில உறுப்பினர்கள், முக்கியமாக இதற்கு முன்பு நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொள்ளாத உறுப்பினர்களும், கலந்துகொண்ட உறுப்பினர்களும் கூட, அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கூறினார்கள். இந்தச் சட்ட மன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகளை எதிரிகளாகப் பாவிக்கக் கூடாது, அவர்கள் கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும், அவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும், அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அடிக்கடி சட்ட மன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று தெரிவித்தார்கள். எப்போது வேண்டுமானாலும் சட்ட மன்றத்தைக் கூட்ட, இன்னும் அதிகமாகக் கூட்ட அரசாங்கத்திற்கோ எனக்கோ ஆட்சேபணை இல்லை. வேலை இருந்தால் கூட்டத் தயாராக இருக்கிறோம். இப்போது எத்தனைநாள் கூடுகிறதோ அதற்கு மேல் எத்தனை நாள் வேண்டுமானாலும் கூட்டலாம். இருக்கக் கூடிய வேலையைப் பொறுத்து கூட்டுகிறோம்.

(கனம் சபாநாயகர் தலைமை)

அலுவல் இருந்தால் எப்போது வேண்டுமானாலும் கூட்டத் தயார். இப்போது ஒரு மாதம் கூடுகிறது இந்தக் கூட்டம். வேறு மாதங்களில் அலுவல்கள் இருந்தால் சட்ட மன்றத்தை இந்த மாதிரி 10 நாள், 15 நாள் அதிகமாகக் கூட்டலாம். எதிர்க்கட்சியினர் உருப்படியான யோசனைகள் சொல்லுவதோடு, சொல்லக்கூடும் என்ற நிலைமை இருப்பதோடு, குற்றச் சாட்டுகளைச் சாட்டட்டும், எடுத்துச் சொல்லட்டும், உண்மையில் குற்றங்களாகப் புலப்பட்டால் நாங்கள் திருத்திக் கொள்ளலாம், அல்லது அபாண்டமான குற்றச்சாட்டுகளாக இருந்தால் அதைப்பற்றி எடுத்து விளக்கும் ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை உண்டு. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி நல்ல எதிர்க்கட்சியாக விளங்கவேண்டும் என்பதுதான் எனது அவா. சில சமயங்களில் எனக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. அவ்வாறு உருவாகவில்லையே, வேறு வழியிலே செல்லுகிறார்களே என்பதுதான் எனக்கு வருத்தத்தை அளிப்பதாக இருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்தின் வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடர் மார்ச் 1-ம் தேதி ஆரம்பம் ஆகியதிலிருந்து, நேற்றுக் கூறியபடி, நான் நூதனமான ஒரு போக்கைக் கண்டேன். அதைக் கண்டு மிக்க வருந்தினேன். வரவு-செலவுத் திட்டம் ரொம்பவும் முக்கியமானது. இந்தக் கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டங்களை விவாதித்து மான்யங்களை நிறைவேற்றுவதுதான் முக்கியமான வேலை. இந்தச் சமயத்தில் எல்லோரும் அவரவர்களுடைய

அபிப்பிராயங்களைத் தாராளமாக சொல்லக் கூடும். ஆறு நாட்கள் பொது வாக விவாதம் நடத்த நேரம் ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு ஒவ்வொரு மான்யமாக எடுத்துக்கொண்டு விவாதம் செய்வதுவழக்கம். ஒவ்வொருவரும் கருத்துக்கள் தெரிவிக்க, குற்றச்சாட்டுகளைச் சொல்ல போதிய அவகாசம் இருக்கிறது. ஒரு ஆண்டிலே நடைபெறுகிற சட்ட மன்றக் கூட்டங்களிலேயே இது முக்கியமானது. ஆனால் இங்கே முதல் நாள், இரண்டாவது நாளில் கண்டது என்ன ? வரவு-செலவுத் திட்டம் முக்கியமானது என்று குறிப் பிட்டபடி வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிற முறையில், தாங்கள் கூப்பிட்டு, தொடங்கச் சொல்லி, நானும் எழுந்து நின்று தொடங்க ஆரம்பித்தவுடன் அதைத் தடுத்து நிறுத்தி, இதை நிறுத்த வேண்டும் என்று சொல்லி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கிளப்பினார்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால், தமிழில் படிக்காமல் ஆங்கிலத்தில் படிக்கிறேன் என்றால், ஆங்கிலத்தில் படிக்கக் கூடாது, தமிழில் படிப்பதுதான் சம்பிர தாயம் என்று சொல்லுவதற்காகவோ அல்லது நான் பேசுவது காதில் விழவில்லை என்றோ சொல்லியிருந்தால் அதைபபற்றி ஆட்சேபணை இல்லை. அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இன்று வேண்டாம், அதை நிறுத்த வேண்டும் என்று கூறிவிட்டு, அதற்கு மேல் சமர்ப்பிக்கும் போதே எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எழுந்து போய்விடுவது, மறுநாள் வேறு ஒரு பிரச்னையைக் கிளப்புவது, கிளப்பிவிட்டு சபையிலிருந்து எழுந்து சென்று வெளியே பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவது என்ற முறையில் நிகழ்ச்சி கள் நடந்தன. கருத்து வேற்றுமை இருக்கலாம், அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம், பலமான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தலாம். சபையிலே சொல்லுவதற்கு இடம் இருக்கிறது. நாட்டின் நலனைக் கவனிக்க வேண் டுமே தவிர, அதிலே சிந்தனை செலுத்த வேண்டுமே தவிர, அப்படி யல்லாமல் சபையிலிருந்து வெளியே சென்றுவிட்டு பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டது சரிதானா என்று நன்றாகச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ நாங்கள் எதிர்க்கட்சியைப் பொருட்படுத்த வில்லை, வேண்டிய வாய்ப்புக் கொடுக்கவில்லை, அவர்களைக் கலந்து கொள்ளவில்லை என்று சொல்ல கொஞ்சம்கூட இடம் இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் வசதிகளைப் பற்றிப் பேசினார்கள். முக்கியமாக ஹாஸ் டல் வசதி பற்றிக் கூறினார்கள். இப்போது ஹாஸ்டல் புதிதாகக் கட்டப் படுகிறது. இப்போது இருக்கக் கூடிய ஹாஸ்ட்ல் போதிய வசதி இல்லாத கட்டடமாக இருக்கிறது என்று உணர்ந்து, அவசியமான செலவுக்குப் பல இனங்கள் இருந்தபோதிலும், இதிலே தாமதம் செய்யக் கூடாது என்று அரசாங்கம் இதற்கு உத்தரவிட்டு இந்தச் சட்ட மன்றத்திற்கென்று ஒரு விடுதி கட்டப்பட்டு வருகிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்த விடுதி போதிய வசதி அளிக்கும் என்று நினைக்கிறேன்.

க்ளாக் டவர் வேண்டுமென்று சொன்னார்கள். புதிய கட்டடத்திற்குச் சேர்ந்தாற்போல் அதையும் அமைப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

முக்கியமாக லைப்ரரி வசதி போதவில்லை என்று கூறினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். டாக்டர் நடராஜன் அவர்கள் பேசு வதற்கு அவகாசம் இல்லை என்றாலும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். உட்கார்ந்து படிக்க நாற்காலி போன்ற வசதிகள் இல்லை, வெளிச்சம் போதிய அளவு இல்லை, கரண்ட் மாகஸீன்ஸ் போதிய அளவு இல்லை, ஸ்டாஃப் போதாது, புத்தகங்கள் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன

1-00 p.m. **"Selection of books is poor, there is noise in the surrounding rooms."** என்றெல்லாம் குறைபாடுகளைக் குறிப்பிட்டு எழுதிக் கொடுத் திருக்கிறார்கள். இதெல்லாம் நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங் கள், அவை கவனிக்கப்படும் என்றே கூறுகிறேன்.

இன்னும் சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் விடு தியில் வாடகை இல்லாமல் இருக்க வேண்டும், வாடகை வசூலிக்கக் கூடாது என்று சொன்னார்கள். சட்ட மன்றக் கூட்டம் நடைபெறுகின்ற நாட்களில் அவர்களுடைய துணைவியர்கள், மற்றவர்கள், துணைவியர்களோடு சேர்ந்த



வர்கள் அவர்களும் இலவசமாக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டால் நல்லது என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் முதலில் ஹவுஸ் கமிட்டி யோசித்து எந்த அளவுக்குச் செய்யலாம் என்று முடிவு செய்ய வேண்டும். கார் கூட வேண்டும் என்று உறுப்பினர் அம்மையார் அவர்கள் சொன்னார் கள். இவைகளையெல்லாம் எவ்வளவு தூரம் செய்யலாம், " டெய்லி அலவன்ஸ் " எவ்வளவு இருக்க வேண்டும், " டெய்லி அலவன்ஸ் " இப்படியே இருந்து, இதையும் செய்யலாமா என்பதெல்லாம் யோசிக்க வேண்டிய விஷயம். முதலில் ஹவுஸ் கமிட்டியில் இதைப்பற்றியெல்லாம் யோசித்து, பிறகு எந்த அளவுக்கு அவைகளை நாம் எடுத்துக் கொண்டு செய்யலாம் என்று கவனம் செலுத்தக்கூடிய விஷயங்கள் இவை.

கேள்வி கேட்பது, விடை அளிப்பது, ஏதாவது தகவல் கேட்டால், அதைப் பெறுவதில் ஏற்படுகிற தாமதம் இவைகளைப்பற்றி சில உறுப் பினர்கள் சொன்னார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபொழு தெல்லாம் எல்லா இலாகாக்களிடமும் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு தான் வருகிறேன். இரு மன்றங்களிலும் தாமதம் இல்லாமல் விடைகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறேன். சில சமயங்களில் அவர்களுக்குத் தகவல் கிடைக்காமல் இருக்கிறது. தகவல் கோரப்பட்டிருக்கிறது, இன்னும் கிடைக்கவில்லை என்று விடை யளிப்பதில் பயன் இல்லை. சில சமயங்களில் தகவல் கிடைப்பதற்குத் தாமதம் ஏற்பட்டாலும், தவிர்க்கக்கூடிய தாமதம் ஏற்படக்கூடாது என்று தான் நான் வற்புறுத்தி வருகிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் பற்றிக் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒன்று கூற விரும்பு கிறேன். தேர்தல் தேதியை தள்ளிப்போடக்கூடாது. நிர்ணயித்தபடி தேர்தல் நடக்கவேண்டுமென்று கூறினார்கள். முன்பு தேர்தலைத் தள்ளிப் போட்டதற்குக் காரணம் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அப் பொழுது இருந்த நிலைமையிலே தேர்தல் தள்ளிப் போடப்பட்டது. பஞ்சாயத்து தேர்தல்கள் அநேகமாக முடிவடைந்துவிட்டன. பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் தான் அப்பொழுது தள்ளிப் போடப்பட்டது. இறுதி யாக இதற்கு மேல் மாறுதல் இருப்பதற்கு இடமில்லை. ஒருக்கால் நீதி மன்றங்களின் உத்தரவுப்படி தள்ளி வைத்தால் ஒழிய, எப்ரல் 17-19-ம் தேதிகளில் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலும், எப்ரல் 28, 29, 30-ம் தேதிகளில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலும் நடைபெறும் என்று இப்பொழுது திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேதிகள் மாற்றப்படுவதற்கு கொஞ்சம்கூட இடம் இருக்காது என்று நான் கூற விரும்புகிறேன்.

பஞ்சாயத்து வோட்டு முறையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எனக்குக் கூட அது திருப்தி அளிக்கவில்லை. இருந்தாலும் இதில் வோட்டு அளித்த மகாஜனங்களை நாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தனை குழப்பங்களுக்கிடையே நல்ல முறையில் இந்தச் சின்னங்களையெல்லாம், ஒரு நாள், இரண்டு நாட்களுக்கு மேல் அவகாசம் இல்லையென்றாலும், நல்லமுறையிலே மனதில் வைத்துக்கொண்டு வோட்டு செய்தார்கள். சட்ட மன்றத் தேர்தல்களில் கூட அதிகமாக " இன்வாலிட் வோட்டுகள் " வருகின்றன. கூடியவரையில் கிராமத்திலுள்ள மக்கள் நல்ல முறையில் வோட்டு செய்ததை நான் பாராட்டுகிறேன். நாம் எல்லோரும் அது பற்றி பெருமைப்படவேண்டும். என்னுடைய எண்ணமும் தனித் தொகுதி யாக இருக்கவேண்டுமென்பது தான், வார்டாக இருக்கவேண்டுமென்பது தான். ஒரு வார்டுக்கு ஒரு ஸ்தானம் இருக்கவேண்டும், அப்படியிருந்தால் குழப்பங்கள் ஏற்படுவதற்கு இடமில்லை. இம்மாதிரி இருப்பதற்கு சட்டம் நிறைவேற்றவேண்டும், சட்டத்தை மாற்றவேண்டும். மறுபடியும் தேர்தல் கள் நடைபெறுவதற்கு முன்பு சட்டத்தை மாற்றி தனித் தொகுதி ஆக்கிவிட்டால், பல சின்னங்களை மனதில் வைத்துக்கொள்ள அவசியம் இருக்காது. சின்னங்களை பெட்டியிலே ஒட்டிவிடலாம். எந்த பெட்டி

என்று அந்த சின்னத்தை நினைவு படுத்திக்கொண்டு வோட்டு செய்ய முடியும். அவ்வாறு செய்யவேண்டுமென்பது தான் என்னுடைய அவர், அரசாங்கத்தினுடைய அவா.

பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றிச் சில விளக்கங்கள் கேட்டோம். நியமனம் தவறு என்று தள்ளப்பட்டது பற்றி விளக்கம் கேட்டோம். முன்பே ஒரு உத்தரவு போடப்பட்டது, அதைக் கேட்டோம். அதைக் கொடுக்க மறுத்து விட்டார்கள் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், என்ன கோரப்பட்டது. எந்த நிலையிலே அத்தகைய ஒரு விடை அளிக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். முன்பு ஒரு விளக்கம் தான் அரசாங்கம் கூறியது. அது உத்தரவு என்று கருதுவதற்கு இல்லை. விளக்கம் என்னசொன்னது என்றால் மறியல் செய்துதண்டனை அடைந்தவர்களைப் பற்றி ஒரு விளக்கம் கோரப்பட்டது. அரசாங்கம் விளக்கம் கொடுத்தது என்றாலும், அங்கே இருக்கிறவர்கள் தான் தேர்தல் அதிகாரிகள் தான் முடிவு செய்யவேண்டும். இருந்தாலும், சில கலெக்டர்கள் விளக்கம் கேட்டார்கள், விளக்கம் கோரப்பட்டது. மறியல் செய்து, அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், அதனால் தகுதியின்மை என்பது ஏற்படாது என்று ஒரு விளக்கம் தான் கூறப்பட்டது. முன்பே இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன், முன்பு நடைபெற்ற கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்திய குற்றத்திற்குத் தண்டனை பெற்றிருந்தால் அது வேறுவிஷயம். "இன்ஸல்டு டு நாஷனல் ஹானர் ஆக்ட்" என்பது சட்டத்தின் பெயர். அது "மாரல் டெலின்குவென்ஸி" யின் கீழ் வரக்கூடும் என்று எங்களுக்கு தோன்றுகிறது. இருந்தாலும் நான் அதைச் சொல்லக் கூடாது. கோட்டினால் இந்த மன்றத்தில் விளக்கினேன். இதையெல்லாம் ரிடர்னிங் ஆபீஸர்தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இதற்கு உத்தரவு, போடுவதற்கில்லை என்பதை முன்பே விளக்கியிருக்கிறேன்.

தேர்தல் நடைபெறும்பொழுது அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சர்கள் என்ற ஹோதாவிலே செல்லவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். அதுமட்டுமல்ல அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அமைச்சர் என்ற ஹோதாவிலும் அரசாங்கத்தைப்பற்றி யாராவது தவறுதலாக குறைகூறினார்களானால், அது அப்படியில்லை என்று சொல்லக்கூடிய பொறுப்பும், அரசாங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு—உத்யோகஸ்தர்களுக்கு இல்லை—ஆனால் தேர்தலில் நடைபெறுகிற பிரசாரத்தில் அதை எடுத்துக் கூறுவதற்கு அரசாங்கத்தை நடத்துகிற அமைச்சர்களுக்கு உரிமை இல்லாமல் இல்லை. தண்ணீர்த் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். தேர்தல் வருகிறது. அதற்காக ஒரு மாதம் வைத்துக்கொண்டிருக்கலாம் என்று திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கலாம் என்று திட்டத்தை வைத்துகொண்டிருக்க முடியாது. நல்ல காரியங்களை அரசாங்கம் செய்திருந்தால், அதனால் ஆளும் கட்சிக்கு ஏற்படக் கூடிய பலனை மறுப்பதற் கில்லை. ஆளும் கட்சிக்கு அந்த உரிமை இருக்கிறது. ஆனால் ஆளும் கட்சி என்ற வகையிலே பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கம் சிறிதும் இல்லை. அவ்வாறு பயன் படுத்திக்கொள்ள மாட்டோம். நாங்கள் ஏதோ தவறு செய்துவிட்டோம் நீங்களும் ஒரு தவறு செய்துவிட்டீர்கள், தவறுதல் என்று உத்தரவு போடுங்கள், அப்போதுதான் சரிசமமாக இருக்கும் என்று யாரும் எதிர்க் கட்சியினர் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

அது மாதிரிதான், தங்கும் விடுதிகளைப் பற்றி சொன்னார்கள். அமைச்சர்களுக்கு அங்கே தங்குவதற்கு முதல் இடம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அமைச்சர்களுக்கு இருக்கவேண்டிய ஒரு நிலை, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு, அவர்கள் தேர்தலுக்குப் போனால் கூட பாதுகாப்பு இருக்கிறது, அம்மாதிரி நிலையில் அவர்களுக்குத் தங்கும் விடுதிகளில் முதல் இடம் கொடுக்கப்படுகிறதே ஒழிய, தேர்தலைப் பொறுத்த மட்டில், தேர்தல் பிரசாரத்தைப் பொறுத்த மட்டில் அமைச்சர்கள் என்று தனிசலுகை இருக்கிறது என்று கூறுவதற்கு இல்லை.





கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. மதியழகன் அவர்களும் இந்த மொழிப் பிரச்னை பற்றி குறிப்பிட்டார்கள். மொழிப் பிரச்னை பற்றிய விவாதத்திற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது இதைப் பற்றி விஸ்தாரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும், நிலை என்ன என்பதை உணர்ந்து கொள்ளக்கூடும். இருந்தாலும் நேற்றைக்கு இதுபற்றி நான் குறிப்பிட்டேன். இன்றைக்கும் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆகவே, நானும் சுருக்கமாக அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் அங்கே பாராளு மன்றத்தில் பேசியது ஒன்று அதற்கு மேலே பத்திரிகைக்காரர்களுக்கு விளக்கம் கொடுத்தார்கள். அதைப் படித்துப் பார்த்ததிலே எனக்குக் கூட கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் திரு மதியழகன் அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆனால் குழப்பம் இன்னும் தீரவில்லை. அவர்கள் என்ன தான் வேண்டும் என்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னைப் பொறுத்த மட்டில், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், ஏதோ நாங்கள் மாற்றிக்கொண்டோம் என்று சொன்னார்கள். குறை கூறினார்கள். கிண்டலாக பேசினார்கள். ஆனால் நாங்கள் ஒன்றும் மாற்றிக்கொள்ளவில்லை. எப்பொதும் ஒரே நிலை தான். அந்த நிலை தான் இன்றும், மத்திய அரசாங்கத்திற்கும் அந்த நிலைதான். எங்களுக்கும் அது தான். காங்கிரஸுக்கும் அது தான், ராஜிநாமா செய்து பாராட்டப்பட்ட அமைச்சர்களுடைய நிலையும் அது தான். வேறு வித்தியாசம் வேற்றுமை, ஒன்றுமில்லை. இந்த நாட்டிற்கு ஒரு பொது மொழி வேண்டும். அது இந்தி என்று முன்பே நிர்ணயிக்கப்பட்டது. அது தான் அரசியல் அமைப்புச் சட்டத்தில் வந்திருக்கிறது. அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வது என்றால், இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் அதற்கு நாம் தயாராக இல்லை, ஆகவே, ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நாம் கூறினோம். மற்ற மாநிலங்களும் கூறின. தென் மண்டலத்திலுள்ள மாநிலங்களெல்லாம் சேர்ந்து அந்தக் கருத்தைத் தெரிவித்தோம். அதற்கு இணங்க "அபிஷியல் லாங்குவேஜ் ஆக்ட்" என்ற சட்டம் வந்தது.

அந்தச் சட்டம் நிறை வேற்றப் பட்டபோது, நேற்று விளக்கியபடி, இது போதாது, இன்னும் கொஞ்சம் விளக்கம் இருக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. விளக்கம் கூறினார்கள். பிரதம மந்திரி உறுதிமொழி என்றால் என்ன? ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் இருக்கும் என்பதுதான் உறுதி மொழி. அதைச் சட்டமாகப் போடுவதை அப்பொழுது யாரும் விரும்பவில்லை. பிரதம மந்திரி கூறிய உறுதிமொழி இருக்கிறது. அதற்கப்புறம் அச்சம் இருந்தது. உறுதி மொழி இருந்தாலும், ஹிந்தியைத் திணிப்பார்களோ என்று அச்சம் ஏற்பட்டது. ஆனால் பிரதம மந்திரி இருந்த வரையில், பிரதம மந்திரி தவறுவார்கள் என்று யாரும் மனதில் கூட நினைக்கவில்லை. ஆனால், அதன் பிறகு, அது போதாது என்ற காரணத்தினாலே, எதிர்க் கட்சியினர் ஹிந்தியே கூடாது, ஆங்கிலம் வேண்டும், என்று கூறினார்கள். பின்னால் அச்சம் ஏற்பட்டது. உறுதிமொழி சட்ட பூர்வமாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. அதுதான் "பை-லிங்க்வலிஸம்". இரு மொழிக் கொள்கை. நாட்டுக்கு மும் மொழிக் கொள்கை. மாநிலத்திற்குத் தமிழ் முக்கியமானது. ஆங்கிலமும் வேண்டும். ஹிந்தியும் வேண்டும். அதுதான் மும்மொழிக்கொள்கை. அதை நிறைவேற்றுவதிலும் கட்டாயம் வேண்டாம் என்ற, கட்டாயம் இல்லாமல் இருப்பதால்தான், லட்சத்து ஐம்பது ஆயிரம் மாணவர்கள் இன்றைக்கு ஹிந்தியைப் படிக்கிறார்கள். இன்னும் படிக்கக் கூடும். அது அவர்களுககு நல்லது. அவர்களுடைய எதிர் காலத்திற்கு நல்லது. கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் தங்களுடைய தலைவர் பேச்சைப் பற்றி விளக்கம் செய்ததிலிருந்து, ஆங்கிலமே வேண்டாம் என்று சொல்வது போல் இருக்கிறது. 14 மொழிகளையும் வைக்க வேண்டும் என்று சொன்னால்

அது சாத்தியமில்லாத விஷயம். இரண்டு மூன்று மொழிகள் வேண்டு
மானால் வைத்துக் கொள்ளலாம். 14 மொழிகள் என்று சொன்னால்,
கான்ஸ்டிட்யூஷனையே மாற்றவேண்டும். தமிழையும் சேர்த்துப் போட்டு
விட்டால் ஹிந்தி எதற்காக ? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
" நான் கூட பிரசாரம் செய்கிறேன் " என்கிறார். அப்பொழுது பிர
சாரம் செய்ய வேண்டிய நிலை என்ன ? வங்காளி மொழியைப் பிரசாரம்
செய்யலாமே. அது ஒரு பழமையான மொழி. இனிமையான மொழி
வங்காளி மொழி. இப்படி இருக்க ஹிந்திக்குப் பிரசாரம் செய்கிறேன்
என்று சொல்லுவானேன் ? இன்னொரு மொழி என் படிக்க வேண்டும் ?
தமிழ் அகில இந்திய மொழி என்றால், ஆட்சிக்கு வேறு மொழி என்றால்
அந்த மொழியை இஷ்டப்பட்டால் படிக்கட்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, நிரு
பர்கள் இந்தியைப் பரப்புவதில் உதவி செய்வீர்களா என்று கேட்டதற்கு
அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதில்தான் குழப்பம். எந்தக்
குழப்பத்தையும் புரிந்து கொள்ள முடியும். எப்பேர்ப்பட்டவர்கள் பேசு
வதையும் புரிந்து கொள்ளமுடியும். ஆனால், அந்தக் குழப்பம்
மாணவர்களுக்கு வரக்கூடாது. சரி, தமிழ்தான் இருக்கிறது. ஆங்கிலம்
வேண்டாம், ஹிந்தி வேண்டாம் என்று அவர்கள் நினைக்கக் கூடாது.
ஹிந்திமேல் வெறுப்பு வரக்கூடாது. (குறுக்கீடு) இயக்கத்திலே இந்தி அரக்கி
என்று கொளுத்துவானேன் ? இப்பொழுது இருக்கிற நிலை
என்னவென்றால், ராஜீனாமா செய்த அமைச்சர்கள் வற்புறுத்தும் நிலை
என்னவென்றால், ஆட்சிமொழி ஹிந்திதான், என்று அரசியல் சட்டத்
திலே சொல்லப் பட்டது. அதை மாற்றும் உத்தேசம் இல்லை, மாற்றும்
உத்தேசம் அடியோடு இல்லை. அஃபிஷல் லாங்க்வேஜ் ஆக்டை மாற்ற
வேண்டும். அதிலே பிரதம மந்திரியின் உறுதிமொழியைச் சேர்க்க
வேண்டும். உறுதி மொழி என்ன ? ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்
வரை ஹிந்தியோடு ஆங்கிலமும் இருக்கும். நாம் மனதைத் திடப்
படுத்திக் கொள்ளவேண்டும். நமக்கே குழப்பம் ஏற்படுகிறது.
இதைப் பற்றி இன்னும் விளக்க சந்தர்ப்பம் இருக்கும். நாம் அரசியல்
வாதிகள். ஆனால் மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்படக்கூடாது என்பது
தான் என் கவலை. நம்முடைய மாணவர்கள் தமிழை எவ்வளவு வேண்டு
மானாலும் படிக்கவேண்டும். ஆங்கிலம் வேண்டும் வரை இருக்கும். ஆகவே
ஆங்கிலமும் படிக்கவேண்டும். நம் மாணவர்கள் வெளி மாநிலங்களுக்குச்
சென்று பதவிகள் தேடுபவர்கள். அதனால் ஹிந்தி படித்தால் நல்லது
தான். மராத்தி படித்தால் என்ன ? ஹிந்தி படிப்பது பயன் உள்ளது.
அனுகூலமாக இருக்கும். இதை மாணவர்கள், எதிர்க் கட்சி அங்கத்
தினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன். அவர்
களுடைய தலைவர் ஹிந்திக்கு பிரசாரம் செய்யத் தயாராக இருக்கிறேன்
என்று சொல்கிறார்கள். அதிலே அவர்கள் அவர்கள் மனதிலே குழப்பம்.
எவ்வளவு அறிஞர் என்றாலும், இது கஷ்டமான பிரச்சினை. அதனால்
குழப்பம் ஏற்படுவதில் ஆச்சரியம் இல்லை.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, முதல் அமைச்சர்கள்
மாநாட்டில் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தில், வற்புறுத்தியிருக்
கிறோம். அகில இந்திய சர்வீஸ் பரீட்சைகள் இருக்கின்றன. அது இப்
பொழுது ஆங்கிலத்தில் இருக்கிறது. ஹிந்தி தாய் மொழியாக இருப்ப
வர்களுக்கு ஹிந்தி பரீட்சை மொழியாக இருக்கும். மற்றவர்களுக்கு ஆங்
கிலத்தில் விடை அளிக்கலாம். அதில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்.
அதற்காகத்தான், மாடரேஷன் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.
அது மட்டும் போதாது. சர்வீஸ் பொருத்தவரை, தாய் மொழியில்,
பிராந்திய மொழிகளில் எவ்வளவுக்கு இடம் அளிக்கவேண்டும் என்று
காங்கிரஸ் வற்புறுத்தியிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.
மாணவர்கள் தமிழை நன்றாகக் கற்கவேண்டும் என்று வற்புறுத்து
கிறேன். நாம் தமிழைச் செய்திருப்பது போல் வேறு எந்த
மாநிலத்திலும் ஆட்சிமொழிக்கு ஏற்பாடு செய்யவில்லை.
அவ்வாறு இருக்கும் போது, தமிழை மாணவர்கள் நன்





றாகப் படிக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தைப் படிக்க வேண்டும்.
அதற்கு எவ்வளவு தூரம் வசதி வேண்டும் என்றாலும், அளிக்கத்
தயாராக இருக்கிறேன். அது மட்டும் போதாது. ஆங்கிலமும் வேண்டும்.
கற்காவிட்டால் என்ன பயன் ? ஆங்கிலமும்கூட வேண்டும் என்று
வற்புறுத்தவில்லை என்கிறார்கள். மத்திய ஆட்சியில் 14 மொழிகளும் வராது.
வரும் என்று எதிர் பார்க்க முடியாது. ஹிந்தியும் வேண்டாம், ஆங்கி
லமும் வேண்டாம் என்றால் என்ன அர்த்தம் ? ஆங்கிலம் வேண்டும்
என்று பின்னால் கிளர்ச்சி செய்தவர்கள் வேறு. ஆங்கிலந்தான் இருக்க
வேண்டும் என்று வற்புறுத்திய அவர்கள் வேறு, ஹிந்தி கூடாது,
ஆங்கிலந்தான் வேண்டும் என்றார்கள். இப்பொழுது ஆங்கிலமும் வேண்
டாம் என்றால், மாணவர்கள் உருப்படுவார்களா ? மாணவர்களின் எதிர்
காலம் நல்லவிதமாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான், நாட்டின்
எதிர்காலம் நல்லதாக இருக்கமுடியும். அவர்களுக்கு நல்ல வழி காட்ட
வேண்டும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். மாணவர்களைப்
பொறுத்த மட்டில், ஏதோ " கேடிகளை " ஏவி விட்டோம் என்று பேசி
னார்கள். கனம் அங்கத்தினர் புலவர் அவர்கள், எதிர்க்கட்சிப் புலவர்
அவர்கள், சிறுவர்கள் தேனீ போன்றவர்கள், தேனீ கொட்டுகிற மாதிரி
மாணவர்கள் கொட்டினார்கள் என்று மாணவர்களைப் பாராட்டுகிற மாதிரிப்
பேசினார்கள். அது மாணவர்களுக்கு நல்லவழி காட்டுவதில்லை. தூண்டி
விடுவதாகும். மாணவர்கள் தகாத காரியம் செய்தார்கள். இருந்
தாலும், பெற்றோர்கள், பொறுப்புள்ளவர்கள், சிந்திக்க வேண்டும் என்று
கூறினார்கள். அப்படிப் பாடுபட்டு பரிசீலனை செய்து தண்டிக்கப்பட்டவர்கள்
கூட எட்டாந் தேதி பள்ளிக்கூடங்கள் திறந்தவுடனே போய்ப் படிக்கட்டும்
என்று அவர்களை விடுவித்துவிட ஏற்பாடு செய்தோம். வழக்கு ஒரு
பக்கம் இருந்தாலும், ஒரு ஆண்டு போய்விடுமே, ஒரு ஆண்டு போய்
விடக்கூடாதே என்ற கவலையோடு உடனடியாக எட்டாந்தேதி திறக்கிறது
என்றால் சட்ட மன்றத்திலே வைக்க வேண்டும் என்றார்கள். அது கூட
அவசியம் இல்லை என்று 7-ம் தேதியே உத்தரவு போட்டு, விடுவித்து
விடுவதற்கு ஏற்பாடு செய்தோம். சங்கரன்கோவிலில் தவறு செய்தார்கள்.
இன்னும் அங்கே தூண்டிவிடுகிறார்கள், கட்சிக்காரர்கள். சென்னை நகரத்
திலே, கால்நடைக் கல்லூரி, தியாகராய கல்லூரி ஆகிய கல்லூரிகளைத்
தவிர, மற்றக் கல்லூரிகளில் ஏராளமான மாணவர்கள்
வந்தார்கள். ஆனால், பிற்பகலில், அவர்களைப் போய்க் கூப்பிட்டிருக்கி
றார்கள். " போகாதீர்கள் ", " படிக்கவேண்டாம் " என்று மாணவர்கள்
பிற்பகலில் சில இடங்களில் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இரணியகசிபு
காலத்தில் இருந்ததே, அது போன்று இன்னும் இருக்கிறது போலும்,
" போகாதே " என்று சொல்லுகிறார்களே, அதனால் யாருக்கு நஷ்டம்.
இது மாணவர்களுக்கு நல்லதா ? இதையெல்லாம் சொல்லவேண்டாமா
பெரியவர்களாக இருப்பவர்கள்? எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் மன்றத்திலே
ஒரு வார்த்தை அதைப்பற்றிச் சொல்லவில்லையே. எல்லோரும் போய்ப்
படிக்கவேண்டுமென்பதிலே அக்கறை இருக்கவேண்டாமா? இன்றைக்குச்
செய்தி வந்திருக்கிறதே. மதுரையிலும், தஞ்சையிலும், திருச்சியிலும்,
கோயம்புத்தூரிலும், பல மாணவர்கள் நேற்று கல்லூரிகளுக்குச் செல்ல
வில்லை என்று தகவல் வந்திருக்கிறதே. கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும்
என்று மாணவர்களுக்குச் சொல்வதற்கு இவர்களுக்கு மனம் வரவில்லையே.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நேற்று நான் சொல்லியிருக்கிறேன்.
" எல்லா மாணவர்களும் இனிப் பள்ளிக் கூடத்திற்குச் செல்லவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன் " என்று கூறி என்னுடைய உரையை
நான் நேற்று முடித்திருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேற்று சொன்னது சரி, நேற்று
பள்ளிகளும் கல்லூரிகளும் திறக்கப்பட்ட பிறகு கூட, "போகாதீர்கள்"
என்று மாணவர்களுக்குச் சிலர் சொன்னதாகச் செய்தி வந்திருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல். :** நேற்றே சொல்லியிருக்கிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேற்று சொன்னது சரி, பிறகு
யாரும் சொல்லவில்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுதும் சொல்கிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாணவர்கள் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவ்வளவு தூரம் பெரிய மனது வந்து இந்த மன்றத்திலாவது சொல்கிறார்களே, அதற்காக அந்த மாணவர்கள் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வெளிநாட்டிலுள்ள தமிழர்களைப்பற்றி கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் பேசினார்கள். முக்கியமாக கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் இலங்கைத் தமிழர்களைப்பற்றிப் பேசினார்கள். யுனைடெட் நேஷன்ஸ் சார்ட்டரைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவ்வளவு தூரம் படிக்கவில்லை. 1949-ல் இருந்த நிலைமை என்ன? 1965-ல் இருக்கும் நிலைமை என்ன ? இன்றைக்கிருக்கும் நிலைமையில், அவர்கள் இங்குமன்றி, அங்குமன்றி இருக்கிறார்கள். லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தியாவிற்கு வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தங்களுக்கு அங்கே சௌகரியம் இல்லை. ஆகவே வந்துவிடவேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லா நிலைமையையும் ஆராய்ந்துதான் மத்திய அரசாங்கத்திலுள்ள பிரதம மந்திரி அவர்களும் மற்றவர்களும் எங்களைக் கேட்டார்கள். நிலைமையை எங்களுக்கு விளக்கினார்கள். எந்த முடிவு ஏற்பட்டபோதிலும், அங்குள்ள மக்களுடைய உண்மையான நிலைமையை உணர்ந்து, அவர்களுக்கு ஏற்படவேண்டிய உண்மையான நன்மையையொட்டித்தான் இந்த முடிவு ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிச் சில கனம் உறுப்பினர்கள் மறுபடியும் பேசினார்கள். திரும்பித் திரும்பிச் சொல்வதென்றால் அதற்கு முடிவே இருக்காது. தாம்பரத்தைப்பற்றிக் கனம் உறுப்பினர் சொன்னார்கள். 12-ந் தேதி அன்று எவ்வளவு கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டது ! இரவில் வீடுகளைக்கொள்ளையடிப்பார்கள் போல் இருந்தது. கொள்ளையடித்தால் அடிக்கட்டும் என்று நினைக்கிற மாதிரி, உள்ளே அந்தக் கருத்து இருக்கிற மாதிரி தான், தோன்றுகிறது. " ஏன் போலீசார்கள் வந்தார்கள் ? ஏன் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ? ஏன் கைது செய்தார்கள் ?" என்று கேட்பது முறை அல்ல. எவ்வளவு தூரம் அன்று மக்கள் கவலைப்பட்டார்கள் ! எத்தனை கோரமான சம்பவங்களெல்லாம் ஏற்பட்டன ! " ஏன் மிலிடரி வந்தது ? படைகளை ஏன் ஏவி விட்டார்கள் " என்றெல்லாம் கேட்டார்கள். எதற்காக ஏவிவிட்டார்கள் ? இதை யோசிக்கவேண்டாமா ? மாணவர்கள் தவறு செய்தார்கள். மாணவர்களால் பஸ் கொளுத்தப்படவில்லையா ? இவ்வளவு சேதம் ஏற்பட்டதே. அது சரி என்று பாராட்டுகிறார்களா, கனம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ? அந்தப் பஸ் கொளுத்தப்பட்டதைப் போலீசார் மேலும் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமா ? நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விட்டதென்றால், இராணுவத்தை அழைப்பதில் என்ன தவறு இருக்கிறது ? திரும்பத் திரும்ப அதையே சொல்கிறார்கள் என்றால், என்ன அர்த்தம் ? நாம் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்து அராஜக நிலைமை நீடித்துக்கொண்டிருக்க வேண்டும் என்கிற கருத்து சிலருடைய மனதிற்குள்ளே ஏற்படுகிறதோ என்று தான் எனக்குத் தோன்றுகிறது. " இல்லை " என்று தான் மறுப்பார்கள். வாயளவில் மறுத்தால் போதாது. இத்தகைய பலாத்காரச் செயல்கள் நடைபெறுவதற்கு இடமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பலாத்காரத்திற்கு யார் பொறுப்பாயிருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குக் குறுக்கே யாரும் வருவது சரியல்ல. இத்தகைய அராஜக நிலைமை ஏற்படக்கூடாது. அது யாருக்கும் நல்லதல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சி என்ன நினைக்கிறது. 1967-ல் தங்களுக்கு என்ன ஆகுமோ என்ற கவலையில், நாட்டிலே அராஜகத்தை ஏற்படுத்தி, இந்த அரசாங்கத்தை மாற்றி விடலாம் என்று எண்ணினால் அது பகல் கனவு, ஜனநாயகத்தில் அது நடைபெறாது. இந்த அரசாங்கம் அதற்கு ஒருகாலும் இடம் கொடுக்கிறது. ஏதோ திடீர் என்று மாணவர்களை முன்னே வைத்துச் செய்தார்கள் என்றால், மறுபடியும் அதற்கெல்லாம் இடம் கொடுக்கமாட்டோம்.



மாணவர்கள் விஷயத்திலே கூட அதற்கு இடம் கொடுக்கமாட்டோம். மாணவர்கள் நன்றாகப்படிக்கட்டும் என்று தான் செய்திருக்கிறோம் என்றாலும், மீண்டும் யாராவது அவர்களைத்தூண்டுவதற்கு முன்வருவார்களானால், அது இனி நடைபெற முடியாது. மாணவர்களுக்கு முதலிலே ஒரு உணர்ச்சி இருந்தது. அவர்கள் அப்பொழுது உணர்ச்சி வசப்பட்டிருக்கலாம். அந்த உணர்ச்சி இப்பொழுது இல்லை. அந்த உணர்ச்சி போய்விட்டது. மாணவர்கள் எந்தத் துண்டுதலுக்கும் வசப்படாமல் எந்தத் தூண்டுதலுக்கும் அவர்கள் இடம் கொடுக்காமல், தங்கள் படிப்பிலே அவர்கள் முழு அக்கறை கொள்ளுவார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.

டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ்லிலே ஏற்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி இங்கே ஒரு கனம் உறுப்பினர் கூறினார். அவர்கள் இங்கே இல்லை. " நாங்கள் தேசிய பாதுகாப்புக்காகப் பணம் வசூலித்துக் கொடுத்தோம், நாங்களும் பணம் கொடுத்தோம்" என்று சொன்னார்கள். யுத்தம் நடந்தபோது, இங்கிலாந்திலும் நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் இருந்தது. அங்கும் எத்தனையோ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகவே, எந்த நாட்டிலும் இல்லை என்று சொல்வதற்கு இல்லை. தவறுதல் யார் செய்தாலும், நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். பொய்ப் பிரசாரம் செய்வதும் டிபென்ஸ் சட்டத்திலே தான் வருகிறது. வெறுப்பை ஏற்படுத்துவதும் அந்தச் சட்டத்திலே தான் வருகிறது. மக்களைத்தூண்டிவிடுவதும் அந்தச் சட்டத்திலே தான் வருகிறது. நாட்டுப் பாதுகாப்பு விஷயத்தில் அக்கறையுடன்தான் இருக்கவேண்டியிருக்கிறது. அதிலே கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஒன்று சொன்னார்கள். அதுவரைக்கும் நல்லது. " சீனாக்காரன் இருக்கின்றவரையில் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை நான் ஒத்துக்கொள்கிறேன் " என்று தான் சொன்னார். அதுவரைக்கும், ஒன்றும் வேண்டாம், அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்ற தன்மையில் இருக்கிறதே தவிர, நீண்டகால நிலைமையாக இல்லை என்றுதான் தெரிகிறது. " எமர்ஜன்ஸி " இருக்கக் கூடாது தான். சீனாக்காரன் சீக்கிரத்திலே விரட்டியடிக்கப்படவேண்டும். ஆனால், சீனாக்காரன் இருந்தால்தான், யாரேனும் அன்னியன் இந்த நாட்டில் இருந்தால்தான், நாட்டு ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்வேன் என்றால் என்ன அர்த்தம் ? (எதிர்க் கட்சி கனம் அங்கத்தினர்கள் எழுந்தார்கள்.) அது தான் அவர்கள் சொன்னது. " It is my philosophy during the emergency", என்பது தான் அவர்கள் சொன்னது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** சீனாக்காரன் படையெடுத்ததனால்தான் தேசிய ஒருமைப்பாடு, இல்லாவிட்டால் இல்லை என்று சொன்னதாகச் சொல்வது சரியல்ல. நிரந்தரமாக இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொண்டதாகத்தான் வற்புறுத்தப்பட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள், அறிஞர் அவர்களுடைய பேச்சுக்கே வியாக்கியானம் கொடுக்கிறார். அதற்காக அவரை நான் மிகவும் பாராட்டுகிறேன். கனம் உறுப்பினர் மதியழகன் அவர்களுடைய விளக்கத்தை, வியாக்கியானத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த நிலைமை இருந்தால் நல்லது தான். எல்லோரும் அப்படித்தான் உணரவேண்டும். நிரந்தரமாக நாட்டுக்கு ஒற்றுமை வேண்டும். இந்த நாட்டில் ஒருமைப்பாடு இருக்க வேண்டும் என்றால் அதை நான் வரவேற்கிறேன். மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், வாயளவில் " ஒருமைப்பாடு " என்று சொல்லிவிட்டு, செயலளவில் அதற்குக் குந்தகமாக இருந்து, நாட்டைச் சிதறடிக்கும்படியான சக்திகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மனத்திலும் கூட, அதற்கு இடம் கொடுக்கக் கூடாது.

கனம் உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். திரும்பவும் இன்றைக்குக் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். காலை $5\frac{1}{2}$ மணி இருக்கும். டெலிபோனில் கூப்பிட்டார். கூப்பிட்டு, " கூட்டம் எல்லாம் வந்திருக்கிறது, கொடியை எடுக்கச் சொல்

கிறார்கள், பயங்கரமாக இருக்கிறது" என்று சொன்னார்கள். அதற்கு நான், "நீங்கள் போலீஸ் கமிஷனரைக் கேளுங்கள்" என்று சொன்னேன். எங்கள் கட்சியினரிடமிருந்தும் கூட டெலிபோன் வந்தது. நான் என்ன செய்ய முடியும்? என்னிடம் துப்பாக்கி இருந்தாலும் எடுத்துக் கொண்டு போய், திரு. இராஜேந்திரன் வீட்டுக்குப் போய் பாதுகாப்பு அளித்திருக்கலாம். என்னிடம் துப்பாக்கி இல்லை. நான் வேறு என்ன சொல்ல முடியும்? "போலீஸ் கமிஷனருக்கு டெலிபோன் செய்யுங்கள்" என்று சொன்னேன். இரவெல்லாம் எனக்கு டெலிபோன் பல இடங்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்களும் கூடச்சொன்னார்கள். "நீங்கள் கமிஷனருக்குப் போன் பண்ணுங்கள்" என்று தான் அவர்களுக்கும் சொன்னேன். "அவருக்கு டெலிபோன் செய்தோம், அவரைக் காண்டாக்ட் செய்ய முடியவில்லை" என்று சொன்னார்கள். "கமிஷனரைக் காண்டாக்ட் செய்யமுடியவில்லையென்றால், ஐ.ஜி.-க்குச் சொல்லுங்கள்" என்று தான் சொன்னேன். நான் வேறு என்ன செய்வது? யார் பாதிக்கப்பட்டார்கள் என்று எனக்கு எப்படித் தெரியும். என்ன நிலைமை என்று எனக்கு எப்படித் தெரியும்? உடனே அரை மணிக்குப் பிறகு, போலீஸ் கமிஷனருக்குப் போன் செய்தேன். "இம்மாதிரி சொல்கிறார்கள், போய்க் கவனியுங்கள்" என்று தான் சொன்னேன். முதலமைச்சராக இருந்தாலும் வேறு என்ன செய்ய முடியும்? துப்பாக்கி இருந்தாலாவது எடுத்துக்கொண்டு போய்ப் பாதுகாக்கலாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** துப்பாக்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள் முதலமைச்சரிடம் அதிகமாக இருப்பார்கள் என்று தான் . . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி ஒன்றும் இல்லை. என்னிடம் துப்பாக்கி இருந்தால் தானே? அம்மாதிரி ஒன்றும் இல்லை.

ஆகவே, அதைப் பெரிதாகச் சொன்னார்கள்.

அடுத்து, பத்திரிகைகளுக்குப் பரிந்து பேசினார்கள் சில கனம் உறுப்பினர்கள். பத்திரிகை என்றாலும், பத்திரிகை உரிமைகளையெல்லாம் எனக்குத்தெரியும். உரிமை எந்த அளவுக்கு இருக்கவேண்டும்? வெறுப்பை ஏற்படுத்துவதற்குக் கூடவா உரிமை உண்டு? உரிமை இருந்தால் கோர்ட்டிலே அவர்கள் வாதாடட்டும். இந்தச் சட்டத்தின் கீழ் வெறுப்பை
1-30 p.m. ஏற்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. மேலும் எந்தப் பத்திரிகை என்ன வேண்டுமானாலும் எழுதலாம், வழக்கு தொடரக்கூடாது என்று சொல்கிற வாதம் சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேமாதிரி தான் வேலூர் நகர மன்றத்தின் மேல் அரசாங்கம் எடுத்து இருக்கிற நடவடிக்கையைப் பற்றியும் குற்றம் சொல்ல முடியாது. ஏதோ அனுதாபத் தீர்மானம் போடுவது வேறு. ராஜ்யமே பெரும் கொந்தளிப்பான நிலையில் இருக்கும்போது போலீசார் சுட்டது அக்கிரமம் என்று வேலூர் முனிசிபாலிடி தீர்மானம் போட என்ன உரிமை இருக்கிறது? போலீசார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி இந்த முனிசிபாலிட்டிக்கு என்ன தெரியும்? அந்த ஊரில் இருக்கிறவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டியவர்கள், அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது, அரசாங்கம் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களை அடக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறபோது போலீஸ்காரர்களின் நடவடிக்கையைப் பற்றித் தீர்மானம் போட இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அப்படி அத்துமீறித் தீர்மானம் போட்டதற்கு அவர்கள் சமாதானம் சொல்ல வேண்டும் என்று அரசாங்கம் கேட்டால் அதில் என்ன தவறு இருக்கிறது? தி.மு.க. தலைவராக இருக்கக் கூடிய எல்லா பஞ்சாயத்துகளுமா இப்படிச் செய்திருக்கின்றன? எல்லாரிடத்திலுமா அரசாங்கம் இப்படிச் சமாதானம் கேட்டு இருக்கிறது? அத்துமீறி நடந்து கொண்டால் அதற்கு அரசாங்கம் சமாதானம் கோருவதில் தவறு இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அகில இந்திய சர்வீசைப் பற்றியும் கூறினார்கள், அகில இந்திய சர்வீசில் எந்த அளவிற்கு நாம் தரத்தை உயர்த்த வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த அளவிற்குத்தான் விரிவுபடுத்த ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால்



கல்வி இலாகாவிலோ, விவசாய இலாகாவிலோ, வன இலாகாவிலோ, கல்வி இலாகாவில் ஜாயின்ட் டைரெக்டர், விவசாய இலாகாவிலே ஜாயின்ட் டைரெக்டர்,—ஜில்லா அதிகாரிகள் இல்லை, வன இலாகாவில் டெபுடி கன்சர்வேடர் வரை—இந்த அளவிற்குத்தான் பண்ணவேண்டும், எந்த அளவிற்கு செய்தால் தரம் உயர்த்தப்படும், இந்த மாநிலத்தின் நிலை பாதிக்கப்படாது என்று பார்த்துத்தான் செய்திருக்கிறோம். அதற்கு மேல் வந்தால் நாம் ஒப்புக்கொள் வதில்லை. அதேமாதிரிக் கல்வி இலாகாவை அகில இந்திய சர்வீஸ் ஆக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கும் நாம் இணங்கவில்லை.

இதற்கு மேல் ஒன்றும் இப்போது சொல்லவிரும்பவில்லை. அப்போதைக்கப்போது சொல்லி வந்திருக்கின்றேன். இன்றைக்கு மேலும் இந்த மன்றத்தின் காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இதோடு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று நான் பேசியபோதே குறிப்பிட்டேன். மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்வதில் தவறு இல்லை. அரசியல் நேரடி நடவடிக்கைகளில் தங்கள் படிப்பு பாழாகக் கூடிய வகையில் அவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று தெரிவித்து இருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களும் தம்முடைய அறிக்கையில் மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். சென்ற பத்துப் பதினைந்து நாட்களாக நான் வெளியிட்ட அறிக்கைகளிலும், தலையங்கத்திலும் இதையே நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன். இன்றும் இந்த மன்றத்தின் மூலமாக மாணவர்கள் தங்கள் படிப்பு பாழாக்கக் கூடிய வகையில் அரசியல் நேரடி நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாது கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும் என்றே திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேற்று சொன்னது சரி. நேற்று தான் எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும் திறக்கப்பட்டு இருக்கின்றன. கல்லூரிகளுக்குப் போகின்றவர்களைக் கூடச் சிலர் தடுப்பதாகச் செய்தி வந்திருக்கிறதே, அதைக் கண்டித்து மாணவர்கள் வகுப்புக்களுக்குப் போகும்படி எதிர்கட்சி உறுப்பினர்கள் சொன்னால் நலம் என்று சொன்னேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் இப்போது சொன்னதை வரவேற்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த 6-வது டிமாண்டு சட்டமன்றத் துறையைப் பொறுத்து இருப்பதனால் வழக்கமான சம்பிரதாயத்தை ஒட்டி இதற்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நாங்கள் வற்புறுத்தவில்லை.

The cut motion was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 17,22,300 under Demand No. VI—State Legislature".

The Demand was put and carried and the Grant was made.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்கு, தேர்தல்கள் நேர்மையாகவும் நாணயமாகவும் முறையாகவும் நடைபெற அமைச்சர்கள் தேர்தலில் நேரிடையாக வாக்குகள் திரட்டும் பணிகளில் ஈடுபடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the allotment of Rs. 11,44,300 under Demand No. VII —Elections—be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,44,300 under Demand No. VII—Elections".

The Demand was put and carried and the Grant was made.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நிகழ்ந்த வன்முறைச் செயல்கள் பற்றியும், போலீஸ்காரர்களும், ராணுவத்தினர் செய்த துப்பாக்கிபிரயோகம் பற்றியும் விசாரணை செய்ய சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவருடைய தலைமையின் கீழ் ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the allotment of Rs. 2,50,61,700 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,50,61,700 under Demand No. VIII—Head of State Ministers and Headquarters Staff".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1-4) p.m. The House then adjourned.

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*Nil.*



## APPENDIX

[*Vide* answer to starred question No. 184 on page 1.]

A.—(a)

| Department. (1) | Number of cases investigated. (2) |
|---|---|
| 1 Agriculture | 27 |
| 2 Commercial Taxes | 28 |
| 3 Co-operative | 5 |
| 4 Education | 14 |
| 5 Forest | 23 |
| 6 Fire Services | 1 |
| 7 Highways | 31 |
| 8 Industries and Commerce | 13 |
| 9 Jails | 2 |
| 10 Labour | 2 |
| 11 Local Boards | 37 |
| 12 Medical | 31 |
| 13 Motor Vehicles | 13 |
| 14 Police | 45 |
| 15 Public Health | 5 |
| 16 Public Works Department | 41 |
| 17 Rural Development Programmes | 51 |
| 18 Registration | 7 |
| 19 Revenue | 76 |
| 20 Survey | 1 |
| 21 Transport | 2 |
| 22 Veterinary | 3 |
| 23 Weights and Measures | 5 |
| 24 Miscellaneous | 7 |
| | 470 |

(b)

| I.A.S. Officers. (1) | Gazetted Officers. (2) | Non-gazetted Officers. (3) | Last Grade Government Servants. (4) |
|---|---|---|---|
| Nil. | 223 | 449 | 14 |

(c) Twenty-four cases (24).